மலர் : 53

# சத்தியத்தின் குரல்

# THE VOICE OF TRUTH INTERNATIONAL

TAMIL EDITION

Volume - 53

# ✯ சத்தியத்தின் குரல் ✯


## Editorial Team

Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

**Guest Editors**

Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R. Swamy
P.C. Philemon rajah
B. Arjunan

**Staff Writers**

Wayne Barrier
Paula Bates
Shane Fisher
Emily Fisher
Abel R. Nayagam
Kingsly rajah

Translation : **B. Benny Martin**

Publishing Consultant

**Betty Choate**



தேவையான பிரதிகளுக்கு...

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
**Cell : 98427 30382, 99655 30385**

Copies can be had from

**Tamil World Soul Winning Campaign**
**86-A, Dharapuram Road,**
**Kangayam - 638701. TN. India.**
**Cell : 98427 30382, 99655 30385**

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
**Cell : 92 4421 4421, 92 4420 4420**

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
**Cell : 94435 58041**

# லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்

# Remember Lot's wife

*Louis Rushmore*



பல ஆண்டுகளுக்கு முன்பாக, வெர்ஜீனியாவுக்கும் வடக்கு கொராலினாவுக்கும் இடையில் உள்ள ஒரு மலைகட்டின் விளிம்பில் அமைந்துள்ள ஒரு சிறிய சபை கட்டிடத்தில் பிரங்கித்தேன். அந்த நீல மலைத்தொடர்களின் மீது எனக்கு கொள்ளைப் பிரியம். அந்த சபை கட்டிட கலையரங்கத்தில் பின்னால் இருந்த சுவர் கடிகாரம் எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது. எனவே, அந்த சுவர் கடிகாரத்தின் கீழ் ஒரு செய்தி பலகையை நான் தொங்க விட்டேன். அந்தப் பலகையில் ‘லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள், என்னும் வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது‘.

சில வருடங்களுக்கு பின்பு என் குடும்பம் அங்கிருந்து மாறின பிறகும் கூட நான் எங்கே அந்த பலகையைத் தொங்க விட்டேனோ அது அங்கேயே இருந்தது. இன்றும் அப்பலகை கடிகாரத்தின் கீழ் இருக்கிறதா என்று எனக்கு தெரியவில்லை.

லோத்து, அவனுடைய மனைவி மற்றும் இரு குமாரத்திகள் தேவன் சோதோம் ,கொமோராவை அழிப்பதற்கு முன்பாக தப்பி ஓடிய சம்பவம் நம் எல்லோருக்கும் தெரிந்தது தான். இயேசுவின் நாட்களிலும் கூட லோத்தின் இந்த சம்பவம் எல்லோராலும் அறியப்பட்டுத்தான் இருந்திருக்கிறது. அதனால் தான், அவர் லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள் என்று சாதாரணமாக சொல்லி இருக்கிறார். [லூக்கா 17;32]. அடுத்த வசனம், கிறிஸ்து லோத்தின் மனைவியை இவ்விதமாக விவரிக்கிறார். ‘தன் ஜீவனை இரட்சிக்க வகைதேடுகிறவன் அதை இழந்துபோவான், இழந்துபோகிறவன் அதை உயிர்ப்பித்துக் கொள்ளுவான்‘ [லூக்கா 17:33]. இங்கே கிறிஸ்து ஜனங்கள் சாதாரணமாக, செய்யும் காரியங்களையும், ஆவிக்குரிய தேடலுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார். நம் சொந்த குடும்பங்களை விசாரிக்க உலகப்பிரகாரமான வேலைகளில் ஈடுபடுவதில் எந்தத் தவறும் இல்லை[ 1 தீமோத்தேயு 5:8]. அதேபோல் உலகத்துக்குரிய உடைமைகளை வைத்திருப்பதிலும் தவறு ஒன்றும் இல்லை. இருந்தபோதிலும், உலகப் பொருள்களும் செல்வமும் தேவனுடைய பிள்ளைகளுக்கு கூட பெரும்பாலும் கண்ணிகளாகவே இருக்கின்றன [1 தீமோத்தேயு 6:7–10].

ஏன் லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்த்தாள்? அவள் தான் விட்டு வந்தவைகளை பின்னிட்டு பார்த்ததற்கு பல்வேறுப்பட்ட காரணங்கள் உண்டு. நாம் லோத்தையும், அவனுடைய குடும்பத்தையும் அடையாளம் கண்டு கொள்வதன் மூலமாக இந்த ஜனங்கள் யார்? தேவதூதர்கள் சோதோமை அழிப்பதற்கு முன்பாக அவர்களுடைய வாழ்வில் என்ன நடந்தன? என்பதை சற்று நாம் நம் கண் கண்களுக்கு முன்பாகக் கொண்டு வருவோம்.

இந்த லோத்து ஆபிரகாமின் சகோதரனுடைய மகனாக இருந்தார் [ஆதியாகமம் 12:5]. இந்த லோத்துக்கும் ஆபிரகாமைப் போலவே ஆடு மாடுகளும் ஏராளமாக இருந்திருக்கின்றன [ஆதியாகமம் 13:5,6]. அவர்களுடைய ஆஸ்தி மிகுதியாக இருந்தபடியால் பிற்பாடு ஆபிரகாமும் லோத்தும்  ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்தார்கள். 'ஆபிராம் கானான் தேசத்தில் குடியிருந்தான். லோத்து அந்த யோர்தானுக்கு அருகான சமபூமியிலுள்ள பட்டணங்களில் வாசம்பண்ணி, சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான்'  [ஆதியாகமம் 13:12]. கடைசியாக லோத்து சோதோமிலே குடியேறும்படி தன் குடும்பத்தை கொண்டு போனான் [ஆதியாகமம் 14:12]. அந்நாட்களில் அருகான பட்டணங்களில் இருந்து கொண்டு பட்டணத்துக்கு வெளியே விவசாயம் செய்வதெல்லாம் சாதாரணமான ஒன்றாகத்தான் இருந்திருக்கிறது. ஆனால், நாடோடிகள் பொதுவாக அரணான இடங்களில் இருப்பதில்லை. மாறாக, பட்டணத்துக்கு வெளியே கூடாரம் போட்டு இருந்திருக்கிறார்கள் [ஆதியாகமம் 13:12]. ஆனால், லோத்து அந்த முறைமையில் இருந்து விடுபட்டு சோதோமிலே குடியேறினான்.



லோத்தும், அவருடைய குடும்பமும் சோதோமிலே வாசம் செய்தபடியால் பல்வேறுபட்ட மோசமான விளைவுகளை எதிர்கொண்டார்கள். ஆனால், லோத்து மிக துன்மார்க்கமான மக்கள் மத்தியில் வாசம் செய்த போதிலும் கூட தன்னுடைய தேவ பக்தியை அவர் காத்துக் கொண்டார் என்று நாம் பார்க்கிறோம்.'அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காமவிகார நடக்கையால்

வருத்தப்பட்டு, நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக் கிரியைகளைக் கண்டு, கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க என்று, (2 பேதுரு 2:7,8). மேலும், லோத்தின் இரண்டு குமாரத்திகளும் சோதோம் பட்டணத்தில் இருந்தவர்களை விவாகம் பண்ண இருந்தார்கள் (ஆதியாகமம் 19:14). அது மாத்திரமல்ல, லோத்தும், அவர் மனைவியும் தேவ தூதர்களால் சோதோம் பட்டணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட போது லோத்தின் மனைவியும், இரண்டு குமாரரத்திகளும் அவரோடு செல்லவில்லை (ஆதியாகமம்19:14-16).

சில மணி நேரங்களிலேயே லோத்தின் குடும்பம் செல்வத்திலிருந்து தரித்திரத்திற்கு வந்துவிட்டது. தேவ தூதர்கள் லோத்தின் குடும்பத்தாரை அவர்கள் உயிர் தப்பிக்கத்தக்கதாக கரம் பிடித்து அவர்களைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டு போய் விட்டபடியால் அவர்கள் தங்கள் கரங்களில் எதையும் எடுத்துச் செல்ல முடியவில்லை (ஆதியாகமம்19:16). லோத்துவின் குடும்பம் சோதோமை விட்டு வெளியேறின பிறகு ‘அப்பொழுது கர்த்தர் சோதோமின் மேலும் கொமோராவின் மேலும், கர்த்தர் வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி, அந்தப் பட்டணங்களையும், அந்தச் சமபூமியனைத்தையும், அந்தப் பட்டணங்களின் எல்லாக் குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்துப்போட்டார்‘ (ஆதியாகமம் 19:24,25). ‘லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்த்து உப்பு தூண் ஆனாள்‘ (ஆதியாகமம் 19:26). ஒருவர் இந்தப் பட்டணங்களின் அழிவைப் பற்றி சிந்தித்துப் பார்க்கும்போது அந்த சத்தம் மற்றும் புகை போன்றவைகள் ஒருவருடைய கவனத்தை ஈர்த்தாலும் கூட அதைத் தாண்டி லோத்தின் குடும்பம் தங்கள் செல்வம், சம்பாத்தியம் மற்றும் குடும்ப அங்கத்தினர்களை எரிகிற அக்கினியில் ஒட்டுமொத்தமாக விட்டு விட்டு வந்தது நம் சிந்தையை ஆட்கொள்ள வேண்டும்.

சோதோம் பட்டணத்தின் துன்மார்க்கமான தெய்வ பக்தி அற்ற சூழ்நிலை அப்பட்டணத்தில் தங்கியிருந்த லோத்தின் குடும்பத்தில் சிலரை பலி கொண்டது. அங்கே லோத்து தன் மனைவியையும், தனக்கு உண்டான எல்லாவற்றையும் இழந்து போனார். பிற்பாடு லோத்து தன்னையும் தன் இரண்டு குமாரத்திகளையும் ஒழுக்க கேட்டுக்குத் தள்ளினான். அதன் காரணமாக அம்மோன் மற்றும் மோவாப் போன்ற துன்மார்க்கமான தேசங்களுக்குப் பிதாவானான் (ஆதியாகமம் 19:30-38).

நாம் கூட நம்மீதும், நம் குடும்பத்தினர் மீதும்,பொல்லாத உலகம் ஏற்படுத்தும் தாக்கத்தை குறைத்து மதிப்பிட கூடாது. (உபாகமம் 7:3-4;நியாயாதிபதிகள் 3:6;2 கொரிந்தியர் 6:14).‘மோசம்போகாதிருங்கள். ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும். (1

கொரிந்தியர் 15:33].'அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந் தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்' [ரோமர் 12:1,2].

சமீபத்தில் காட்டுத்தீ கலிபோர்னியாவை புரட்டி போட்டது. அது பல உயிர்களை பலி கொண்டது மாத்திரமல்லாமல் கட்டுக்கடங்காத தீ அப்பகுதி முழுவதிலும் பரவியதால் பலருடைய உடைமைகள் தீக்கிரையாகின. உங்கள் குடும்பம் கட்டுக்கடங்காத தீயிலிருந்து தப்பி ஓட ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது என்று சற்று கற்பனை செய்து பாருங்கள். அத்தகைய சூழலில் நீங்கள் உங்கள் வாசஸ்தலங்களையும், உடைமைகளையும், வாழ்நாள் முழுவதும் சேர்த்து வைத்திருந்தவை களையும், நினைவுச் சின்னங்களையும், தலைமுறைகளாக பாதுகாத்து வந்த பொருட் களையும் விட்டுச் செல்ல வேண்டியதாயிருக்கும். எல்லாம் போய் விட்டது! எதையும் மீட்டெடுக்க முடியாது! இப்படி ஒரு சூழ்நிலையை சற்று கற்பனை செய்து பாருங்கள்.

இன்னும் பொருட்களோடு கூட குடும்ப அங்கத்தினர்களையும், பிள்ளைகள் அல்லது பெற்றோரை விட்டுச் செல்வதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். விலை உயர்ந்த பொருட்களின் மதிப்பை விட நம் பிரியமானவர்களின் உயிர்களின் மதிப்பு நம்முடைய பார்வையிலே மிகப்பெரியதாகும். அது மனதளவிலே நம் மீது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இத்தகைய பயங்கரமான நிலையை நம்மால் நினைத்துக் கூட பார்க்க முடியாது. தீயில் எரிந்து கொண்டிருக்கும் நம் உடமைகளை நாம் திரும்பிப் பார்ப்போமா? நாம் தப்பித்து விட, நமக்கு பிரியமானவர்கள் அழிந்து கொண்டிருக்கும் போது, திரும்பிப் பார்க்காமல் நம்மைக் கட்டுப் படுத்த முடியுமா?' பின்னிட்டுப் பாராதே' என்னும் தேவ கட்டளைக்கு கீழ்ப்படியாமல் இருக்க , லோத்தின் மனைவிக்கு உடைமைகளும் ,உறவுகளும் தான் தடைகளாக இருந்தன [ஆதியாகமம்19:17].

லோத்தும் ,அவருடைய குடும்பமும் தாங்கள் கூடாரவாசிகள், நாடோடிகள் என்பதை மறந்து, தேவபக்தியற்ற துன்மார்க்கமான உலகச் சூழ்நிலையில் போய் குடியேறினார்கள். அந்தத் தெரிந்து கொள்ளுதலால். அவர்கள் மிகப்பெரிய விலையைக் கொடுத்தார்கள். தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்கள் உள்ள நகரத்துக்காக எதிர்நோக்கி, இந்த உலகத்தின் வழியாய் பயணம் செய்கிற அந்நியர்களும், பரதேசிகளுமாக நாம் இருக்கிறோம் என்பதை ஒரு போதும் மறந்துவிட வேண்டாம்.



'பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி, புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்களை உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்'

இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக் கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள். [1 பேதுரு 2:11,12]. இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள்.

தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே. அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள். ஆகையால், தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப் படுகிறதில்லை. அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே' [எபிரேயர் 11:13-16]. ✝



## நிர்வாக ஆசிரியர் உரை

# தன்னால் இயன்றதைச் செய்தாள்

# She has Done What She Could

*E.Z.S. Rajanayagam*

தன்னால் இயன்றதைச் செய்தாள்' என்ற கூற்று, இயேசுவின் பூலோக வாழ்க்கை முடிய இன்னும் ஒரு வார காலமே எஞ்சியிருந்த நிலையில், ஒரு விருந்தின் போது சொல்லப்பட்டுள்ளது. லூக்கா தவிர மற்ற மூன்று நற்செய்தியாளர்களும், இச்சம்பவம் பற்றி எழுதிக் கொடுத்துள்ளனர். [மத் 26:6–13, மாற். 14:1–9, யோவா 12:1–8].

அந்த விருந்து நடந்த கிராமத்தின் பெயர் பெத்தானியா. இக்கிராமம்' எருசலேமிலிருந்து எரிகோவிற்குப் போகும் வழியில், ஒலிவ மலைக்கு அப்புறத்தில் சுமார் 2 மைல் தொலைவிலிருந்தது. மார்த்தாள், மரியாள், லாசரு போன்றவர்களுக்கு சொந்தமான இக்கிராமம், இயேசுவின் பாதம் படியும் பாக்கியம் பெற்ற கிராமங்களுள் பிரதானமானது. போஜன பந்தியிருந்த வீடோ குஷ்டரோகியாயிருந்த சீமோனுடையது. இன்றளவும் மருத்துவ விஞ்ஞானத்திற்கு சவால் விட்டுக் கொண்டிருக்கும் கடும் வியாதியாகிய குஷ்டத்திலிருந்து விடுபட்டதற்கு நன்றிக்கடனாக இந்த விருந்தை அவன் ஏற்பாடு செய்தானோ என்னவோ நமக்குத் தெரியாது. இந்த சீமோன், மார்த்தாள், மரியாள், லாசரு ஆகிய இவர்களின் அண்டை வீட்டுக்காரனாகவோ அல்லது இவர்களுக்கு மிகவும் நெருக்கமான வனாகவோ இருந்திருக்க வாய்ப்புண்டு. எப்படியெனில், அந்த விருந்தில், 'மார்த்தாள் பணிவிடை செய்தாள்' என்று பார்க்கிறோம். [யோவா. 12:2] அப்படியானால், வேறொரு வீட்டில், பரிமாறும் வேலையை குடும்பத்திற்குப் பழக்கமில்லாதவர்கள் பெரும்பாலும் செய்யமாட்டார்கள். அப்படித்தானே !

சரி, இந்த விருந்தின் போது தான், பெண்மைக்குப் பெருமை சேர்த்து, அடக்கத்திற்கு அடைக்கலம் கொடுத்து வாழ்ந்தவளும், தேவ பக்திக்கு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவளுமான மரியாள், உலகம் **உள்ளளவும் பேசப்படும்** என்று இயேசுவால் சொல்லப்பட்ட ஒரு காரியத்தைச் செய்தாள் ஆம், இயேசுவும், அவரோடு வந்திருந்த மற்றவர்களும் சற்றும் எதிர்பாராத விதமாக, விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு

வந்து அதை உடைத்து, அந்தத் தைலத்தை அவர் சிரசின் மேல் ஊற்றினாள். (மத் 26:7, மாற். 14:3) இதே சம்பவத்தை யோவான் நற்செய்தியாளர், இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள் (யோவா 12:3) என்று கூறுகிறார். இரண்டுமே உண்மை தான். எப்படியோ உச்சி முதல் பாதம் வரை விலையுயர்ந்த தைலம், அதன் விளைவாக வீடு முழுவதும் நறுமணம்.

மரியாள் ஆவியிலும், சரீரத்திலும் இயேசுவிடமிருந்து தான் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நன்றியாக எதையாகிலும் செய்தே ஆகவேண்டுமென்று எண்ணித் தீர்மானித்து செய்த இக்காரியம் விருந்துக்கு வந்திருந்த மற்றவர்களால் பார்க்க வேண்டிய கோணத்தில் பார்க்கப்படவில்லை. மரியாளின் செய்கை வீணானது என்றும், புத்தியீனமானது என்றும் கருதப்பட்டது. (மாற் 14:4). இப்படித் தங்களுக்குள் எண்ணியது மாத்திரமல்ல, இதை 300 பணத்துக்கு அதிகமான கிரயத்துக்கு விற்று தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்று சொல்லித் தங்கள் மேதாவித்தனத்தைக் காட்டியதும் போதாதென்று, முணுமுணுக்கவும் செய்தனர் (14:5). சில நேரங்களில், ஏன் பல நேரங்களில் தேவகாரியமாக நாம் செயல்படும்போது, அதுவும் ஒரு திட்டத்தோடும், தீர்மானத்தோடும் செயல்படும்போது, இப்படித்தான் சில அதி மேதாவிகள் விதவிதமான விமர்சனங்களை வீசி எறிவார்கள். இப்படிப்பட்ட அனுபவங்கள் உங்களில் அநேகருக்கு இருக்கும் என்று நம்புகிறேன்.

ஆனால், காரியங்களை கனகச்சிதமாகக் கவனித்து, உள்ளத்தை நிறுத்துப் பார்க்கும் இயேசுவோ, அவர்களை நோக்கி அவளை விட்டு விடுங்கள். ஏன் அவளைத் தொந்தரவு படுத்துகிறீர்கள்? என்று சொல்லி அவர்களின் முணுமுணுப்பை முடமாக்கியதோடு, என்னிடத்தில் நற்கிரியைகளைச் செய்திருக்கிறாள் என்று ஒரு போடு போட்டார். அதோடு, கப் சிப் (14:6). எல்லாம் வல்ல, சகல ஞானம் கொண்ட இயேசுவால், நற்கிரியை என்று பாராட்டப்பட்ட ஒரு செயல், இந்த ஞான சூன்யங்களுக்கு துர்க்கிரியையாகப் பார்க்கப்பட்டு கடுமையாக விமர்சிக்கப்பட்டிருக்கிறது. ஒரு காரியத்தை இயேசு பார்க்கும் விதத்திற்கும், அவரோடிருந்தவர்கள் பார்த்த விதத்திற்குள்ள வித்தியாசத்தைப் பாருங்களேன்! உலக ஞானம் தேவகாரியங்களைப் புரிந்து கொள்ளப் போதுமானதல்ல என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு.

### I. மரியாள், ஏதாவது செய்ய வேண்டுமென்று தீர்மானித்துச் செயல்பட்டாள்

தன்னால் இயன்றதைச் செய்த மரியாளிடமிருந்து நமக்குக் கிடைக்கும் I முதல் பாடம், அவள் இயேசுவுக்கு நன்றியாக எதையாகிலும் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று தீர்மானித்துச் செய்துள்ளாள் என்பது.

அப்படி என்ன இவள் இயேசுவிடம் நன்மை பெற்றாள் நன்றியைக் காட்டுவதற்கு என்கிறீர்களா? அவள் பெற்ற எல்லா நன்மைகளும் எனக்குத் தெரியாது. ஆனால், ஆவியிலும், சரீரத்திலும் அவள் பெற்ற நன்மைகளுக்கு ஆதாரமாக இரண்டு காரியங்களைச் சொல்லுகிறேன் கவனியுங்கள். முதலாவது, ஒரு சமயம், இயேசு அவர்களுடைய வீட்டிற்குச் சென்றபோது, மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள். வீட்டு வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்த மார்த்தாள், தனக்கு உதவி செய்யாமல், இப்படி உமது பாதத்தண்டை அமர்ந்து நேரத்தை வீணடிக்கிறாளே என்று குமுறின போது, இயேசு அவளுக்குப் பிரதியுத்திரமாக; மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டு கலங்குகிறாய் என்று சொன்னதோடு, தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடு படாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்றார். ஆம், அவர் பாதத்தருகே அமர்ந்து, அவர் வாயின் வார்த்தைகளைக் கேட்டதன் மூலம் தன்னை விட்டெடுபடாத ஆவிக்குரிய நன்மையைப் பெற்றுக் கொண்டாள். அடுத்து, லாசரு மரித்த போது, மரியாளின் கண்ணீரைக் கண்ட பிறகே, ஆவியில் கலங்கித் துயரமடைந்து, அவனை எங்கே வைத்தீர்கள் என்று கேட்டதோடு, கண்ணீரும் விட்டார். தொடர்ந்து கல்லை எடுத்துப் போடுங்கள் என்று சொல்லி, அவனை உயிரோடே எழுப்பினார் (யோவான் 11:33-45). இதை, அவள் இயேசு வினிடம் பெற்றுக்கொண்ட சரீர நன்மைக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

அருமையானவர்களே, இந்த மரியாள், இப்படி ஆவியிலும், சரீரத்திலும் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நன்றி காட்ட வேண்டுமென நினைத்துள்ளாளே, நமக்கெல்லாம் அப்படி நினைப்பு வருவதில்லையே! நன்றி காட்டும் அளவுக்கு நாம் அவரிடத்தில் எதுவும் பெற்றுக்கொள்ள வில்லையா? அல்லது நன்றிக்கு நமதாண்டவர் பாத்திரராகத்தான் இல்லையா? பின்னே, என்ன தான் காரணம்?

ஒருவேளை, அவர் எனக்கு எந்த நன்மையும் செய்யவில்லை, நானாக என் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன் என் கிறீர்களா? இப்படி எண்ணுவதை இதோடு நிறுத்துங்கள். சரீரப்பிரகாரமாக, அவரில்லாமல் நாம் இந்தப் பூமியில் வாழ்வதில்லை. ஆவியின் ரீதியிலும், மரியாளைக் காட்டிலும் அதிக நன்மைகளை நாம் பெற்றிருக்கிறோம். எப்படியெனில், **அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்** என்று பவுல் ரோமாபுரியாருக்குச் சொல்லும் போது கூறுகிறார் (அப் 17:28) அடுத்து, மரியாள் எண்ணெய் பூசின போது, இயேசு அவளுக்காக, மரிக்கவில்லை, இயேசு அவளுக்காக இரத்தம் சிந்தவில்லை. ஆனால், நமக்கோ அந்த ஆசீர்வாதம் கிடைத்திருக்கிறது. பவுல் அப்போஸ்தலன், எபேசியருக்குக் கூறும்போது, கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக் கொடுத்தார் என்கிறார் (எபே 5:2) இதைவிட இயேசு நமக்காக என்ன செய்ய வேண்டும்?

**II. மரியாள், தடைகள் வந்த போதும் பொருட்படுத்தாமல் செயல்பட்டாள்**

தன்னால் இயன்றதைச் செய்த மரியாளிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம், தன் தீர்மானத்திற்குத் தடைகள் வந்தபோதும் துவண்டு போகாமல் செயல்பட்டாள் என்பது.

ஆம், இயேசுவின் சிரசில் தைலம் ஊற்றியபொழுது, இயேசுவோடிருந்த சீடர்கள், அவளுக்கு எதிராக முணுமுணுத்ததோடு நிற்காமல், அவள் காதில் விழத்தக்க அளவில் வார்த்தைகளைப் பேசியிருக்கிறார்கள். (மாற்கு 14:5) இயேசு அங்கே இருந்ததால், ஓர் அதிகார தோரணையில் அவளை விரட்ட முடியவில்லை. அதற்காக அவர்கள் மவுனம் காத்துவிடவும் இல்லை. அவள் செயலைத் தடுத்து நிறுத்தும் நோக்கோடு, சில ஊமை முயற்சிகளை எடுத்துள்ளதாகவே தெரிகிறது. எப்படியெனில், இயேசு அவர்களை நோக்கி, விடுங்கள்; ஏன் அவளை விட்டு என்று சொல்ல அவளைத் தொந்திரவு படுத்துகிறீர்கள்? வேண்டியதாயிற்று (14:6)

அருமையானவர்களே, இன்றைக்கு நம்டைய நிலை, இந்த மரியாளோடு ஒப்பிடும் போது எப்படியுள்ளது? இயேசுவுக்காக, இயேசுவின் காரியமாக நாம் செயல்படத் தீர்மானித்துக் காரியமாற்றும் போது, எதிர்வரும் தடைகளை நாம் எப்படிச் சந்திக்கிறோம்? கண்டிப்பாக, நாம் இயேசுவின் காரியமாகச் செயல்பட ஆரம்பிக்கும் போது சோதனைகள் வரும். இதில் ஆச்சரியப்பட எதுவுமேயில்லை. எப்படியெனில், நமது ஆண்டவர் தேவ சித்தத்தை நிறைவேற்ற ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவுடன் சோதனைக்காரனாலே சோதனை வந்தது. அப்படித்தானே! (மத்.4 அதி) இன்னும், அப்போஸ்தலன் பவுல், தீமோத்தேயுவுக்குச் சொல்லும்போது, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்று தானே கூறியுள்ளார்? (II தீமோ 3:12)

நம்முடைய வாழ்க்கையிலும், நாம் கிறிஸ்துவின் உபதேசப்படி வாழ முற்படும் போது சோதனைகள், தடைகள் வந்து சேரும். மரியாளுக்கு சீடர்களிடமிருந்து, அதாவது, இயேசுவின் உபதேசத்தை ஏற்றுக்கொண்டு அதின்படி வாழ்கிறவர்கள் என்று கருதப்பட்ட சீடர்களிடமிருந்து வந்தது போல, நமக்கும் கூட நாம் யாரைப் பக்திமான்களென்று எண்ணுகிறோமோ, யாருக்கு வேதாகமம் அதிகம் தெரியும் என்று நம்புகிறோமோ, யார் ஆவிக்குரிய காரியங்களில் ஏமாற்ற மாட்டார்களென்று நினைக்கிறோமோ அவர்களிடமிருந்து வந்து சேரும். இயேசுவின் காரியமாக நாம் சத்திய உபதேசத்தின்படி நடக்க முயற்சிக்கும்போது வார்த்தைகளின் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஒரு பக்தியுள்ள பெண்மணி என்றளவில் மரியாள், சீடர்களை மதித்திருப்பாள் என்பதில் சந்தேகமில்லை. அதே சமயம், அவள் இயேசுவின் காரியமாகச் செய்யத் தீர்மானித்த காரியத்திற்கு அவர்கள் தடையேற்படுத்தினபோது அவர்களைச் சற்றேனும் பொருட் படுத்தவேயில்லை.

## II. மரியாள் செய்ய வேண்டிய சமயத்தில் செயல்பட்டாள்

தன்னால் இயன்றதைச் செய்த மரியாளிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், இயேசுவுக்குத் தான் செய்ய வேண்டுமென விரும்பியதை செய்தாள் என்பது.

ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம் என்று (நீதி 25:11) ஞானி கூறுகிறார். அதாவது, சரியான நேரத்தில் சொல்ல வேண்டிய ஒன்றைச் சொல்லுவது மிகவும் சிறப்பானது என்பதே இதன் பொருள். ஏற்ற சமயத்தில் சொல்லும் சொல்லுக்கு இக்கருத்து எப்படிப் பொருந்துகிறதோ, அது போலவே ஏற்ற சமயத்தில் செய்யும் செயலுக்கும் இது பொருந்தும். ஞானியினுடைய இந்தப் பொன்னான வார்த்தைகளுக்கு, தன்னுடைய நற்கிரியையின் மூலம் வடிவம் கொடுத்திருக்கிறாள் நமது மரியாள்.

மரியாள், இயேசுவின் தலையின் மீது தைலத்தை ஊற்றின போது, அவருடைய பூலோக வாழ்க்கை முடிய இன்னும் ஒரு வார காலமே இருந்தது. கிட்டத்தட்ட மூன்றரை ஆண்டு காலம் அவரைப் பற்றி அறிந்து ஆவியிலும், சரீரத்திலும் நன்மை பெற்று வாழ்ந்த மரியாள், அவைகளுக்கு நன்றி செலுத்த இன்னும் ஒருவாரம் தாமதித்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? கண்டிப்பாக இயேசுவுக்கு ஒன்றும் ஆகியிருக்காது. ஆனால், மரியாளுக்கு? என்னிடத்தில் நற்கிரியைகளைச் செய்திருக்கிறாள் என்ற பாராட்டும், உலகம் உள்ளளவும் பேசப்படுவாள் என்ற பாக்கியமும் கிடைத்திருக்குமா? சொல்லுங்கள்.

அப்படியானால், இவைகளெல்லாம் நமக்கு என்ன சொல்லுகிறது? இயேசுவின் காரியமாக உடனடியாக செயல்பட வேண்டுமென்றுதானே கூறுகிறது. இதை அப்போஸ்தலன் பவுல் இரண்டாவதாக கொரிந்தியருக்கு சொல்லும் போது '. **இதோ, இப்பொழுதே, அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்**' என்று கூறியுள்ளார். (6:2) இரட்சிப்பு அவசரமான ஒன்றாக சொல்லப்படுகிறதைப் பாருங்கள். அப்படியென்ன இரட்சிப்புக்கு அவசரம், ஏன் அதை தள்ளிப்போடக் கூடாது என்று கேட்கிறீர்களா? அப்படித்தானே. தள்ளிப்போடக்கூடாது என்பதற்கு இரண்டு பெரும் காரணங்கள் உண்டு. ஒன்று, இயேசுவின் வருகை எப்பொழுது வேண்டுமானாலும் இருக்கலாம். (மத். 25:13) இரண்டாவது, நம்முடைய ஜீவனுக்கு எந்த உத்திரவாதம் இல்லை என்று வேத வசனங்கள் அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகிறது. நம் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்ச காலந்தோன்றிப் பின்பு தோன்றாமல் போகிற புகையைப் போலிருக்கிறது. (யாக் 4:14)

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| லோத்தின் மனைவியை நினைத்துக் ... | Louis Rushmore | ... 1 |
| தன்னால் இயன்றதைச் செய்தாள் | E.Z.S. Rajanayagam | ... 6 |
| மதப்பெயர்களும், பிரிவுகளும் | J.C. Choate | ... 13 |
| வித்தியாசமாக இருப்பதற்கு உங்களுக்கு ... | Jerry Bates | ... 18 |
| கிறிஸ்தவத்தின் முரண்கள்: அடக்கம் ... | Shane Fisher | ... 21 |
| கொத்தி எருப்போடுவோம் வாரீர்! | E.Z.Selvanayagam | ... 25 |
| உன்னைப்போல் பிறரையும் நேசி | P.C. Philemon Rajah | ... 29 |
| விசுவாசத்தின் கதவு | B. Arjunan | ... 34 |

**தேவன் - God**

| | | |
|---|---|---|
| தேவனுடைய உடைந்த இருதயம் | Terry Wheeler | ... 38 |
| தேவன் அறிந்திருக்கிறார் | Cliff Holmes | ... 40 |
| அப்போஸ்தலருக்கு வாக்குத்தத்தம் ..... | Raymond Elliott | ... 41 |

**தேவனுடைய வார்த்தை - The Word of God**

| | | |
|---|---|---|
| எது சிலுவையின் மேல் ஆணியடிக்கப்பட்டது? | Larry Murdock | ... 45 |

**இரட்சிப்பு - Salvation**

| | | |
|---|---|---|
| நேர்மையான பெற்றோர் | Cecil may.Jr | ... 50 |
| நம் கர்த்தருடைய எச்சரிக்கை | Ron Boatwright | ... 51 |
| மனிதன் போய் சேருமிடம் | Ernest S. Underwood | ... 53 |
| துரிதமான நியாயத்தீர்ப்பு | Denny Prtrillo | ... 54 |

**சபை - The Church**

| | | |
|---|---|---|
| இவ்விதமாகத்தான் இருந்தது | Ronald D. Reeves | ... 59 |
| தேவன் தம்முடைய சித்தத்தை ... | Sunny David | ... 62 |

ஆராதனை – Worship

| | | |
|---|---|---|
| ஒரு மூப்பருடைய கருவிப் பெட்டிக்குள் .... | Neil Richey | ... 65 |
| இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் | D.A. Adenugba | ... 68 |

வாழ்வதற்கான உபதேசம் – Doctrine to Live by

| | | |
|---|---|---|
| ஆரோக்கியமான உபதேசத்துக் ... | Wayne Barrier | ... 71 |
| சமநிலையான | Dean Kelly | ... 73 |
| கடினமான நேரங்களை எதிர் ... | Tim Lunn | ... 76 |

செயலில் கிறிஸ்தவம் – Christianity in Action

| | | |
|---|---|---|
| செயல்பாடா அல்லது சாதனையா? | Robert Johnson | ...81 |

அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை – Daliy Christian Living

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு நாளும் ஜெபிக்க வேண்டி.... | Jack Wilkie | ... 84 |

கிறிஸ்தவ இல்லம் – The Christian Home

| | | |
|---|---|---|
| தலைமுறைகள் | Rebecca Rushmore | ... 89 |
| திருத்துவதில் தோல்வி | Aaron J. Cozort | ... 93 |

வேதாக கதாபாத்திரங்கள் – Bible Characters

| | | |
|---|---|---|
| குள்ளமான மனுஷனாகிய சகேயு | Kabita Gootam | ... 96 |
| மோசேயின் சாக்கு போக்குகளும், ... | Gary C.Hampton | ... 99 |
| பவுல் | Tom Baxley | ... 101 |

வேதாகம கேள்விகள் – Bible Questions

| | | |
|---|---|---|
| பாஷைகளைப்பற்றி என்ன? | Betty Burton Choate | ... 102 |
| இரட்சிப்புக்கடுத்த பிரச்சனைகள் | Brian R. Kenyon | ... 105 |
| பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாக .... | Louis Rushmore | ... 108 |



# மதப் பெயர்களும், பிரிவுகளும்

## Religious names and Divisions

*J.C.Choate*




**உ**லகம் முழுவதிலும் வித்தியாசமான பெயர்களால் அழைக்கப்படும் அநேக மதங்கள் உள்ளன. இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்றும், உலகத்தின் ஒரே இரட்சகர் என்றும் விசுவாசிக்கிறவர்கள் தங்கள் குறுகிய மனப்பான்மைக்காக குற்றம் சாட்டப்பட்டு, கடும் விமர்சனத்திற்கு உள்ளாகிறார்கள். ஒரே தேவன் தான் உண்டு என்று சொல்வதையும், இயேசு கிறிஸ்து தம்மைப் பற்றி, '**நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்**' (யோவான் 14:6) என்று நாம் உறுதிப்படுத்துவதையும் அரசியல் ரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் தங்களைச் சிறந்தவர்கள் என்று நினைக் கிறவர்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்துகிறது. நாம் ஒன்றை சரி என்று தீர்க்கிறவர்களாகவும், மற்றொன்றை குற்றப்படுத்து கிறவர்களாகவும் இருக்க முடியாது என்று அவர்கள் சொல்கிறார்கள். அநேக கடவுள்கள் உண்டு என்றும், கடவுள்களிடம் செல்வதற்கு அநேக வழிகள் உண்டு என்றும், பிறருடைய மதம் சம்மந்தமான காரியங்களில் நியாயாதிபதியாக செயல் பட யாருக்கும் உரிமை இல்லை என்பதும் அவர்களுடைய வாதமாய் இருக்கிறது. உண்மையில் இப்படிப்பட்ட

மக்களின் உண்மையான நம்பிக்கை மூன்றில் ஒன்றை ஒத்திருக்கிறது: ஒன்று தங்கள் இருதயத்தில் அவர்கள் அவிசிவாசிகள் அல்லது தங்கள் மதத்தில் மாத்திரம் நம்பிக்கை உடையவர்கள் அல்லது ஒருவர் தன்ன ளவில் நல்லவராக இருந்தால் அது போதும், மற்றபடி ஒரு கடவுளோ அல்லது ஒரு இரட்சகரோ ஒரு பொருட்டே அல்ல என்று நினைப்பவர்கள்.

பிரிவினை சபைகளைச் சார்ந்த தலைவர்கள் கிறிஸ்தவர்கள் பக்தி ரீதியாக தேவையற்ற வைராக்கியம் பாராட்டுகிறார்கள் என்கிற குற்றச் சாட்டுக்கு பதிலளிக்கும் போதும், தேவனிடத்தில் சேருவதற்கு ஒரே வழி இயேசு தான் என்னும் போதனையை ஆதரிக்கும் போதும் கிறிஸ்தவ உலகம் தாக்குதலுக்கு உள்ளாகிறது என்றும் எதிர்காலத்தில் விசுவாசத் திற்கான உபத்திரவம் இருக்கும் என்பதை உணருகிறார்கள். அவர்கள் போதிக்கிற, பின்பற்றுகிற வைராக்கியமான உபதேசத்தினிமித்தம் வெளி உலகத்தில் இருந்து இப்படித் தாக்குதல் வரும் என்று நம்புகிறார்கள்.

'நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலே யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்' என்று இயேசு சொன்னாரா? அவர் அப்படிச் சொல்லி இருந்தால், நாம் அவரில் விசுவாசம் வைத்தால், நாம் அவரோடு விசுவாச உறுதியோடு நின்று, அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறார் என்று தைரியமாகச் சொல்ல வேண்டும். அவராலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று ஒருவர் சொல்வது பலருடைய கண்களில் அவரை ஒரு மதவெறியராக காட்டுமானால் அது அப்படியே இருக்கட்டும்.

தேவனிடத்தில் சேருவதற்கு தாம் ஒருவர் தான் வழி என்று அவர் சொன்னதினாலும் நம்முடைய இரட்சகராக இருக்கும்படி அவர் மரித்ததினாலும் இயேசு கிறிஸ்துவின் போதனைகள் உறுதியாக இருக்கும்படி அவர்கள் ஒரு வகையில் ஊக்கப்படுத்துகிறார்கள்.

இயேசு வேறு எவைகளை எல்லாம் பிரத்தியேகமாகச் சொன்னார்?' நான் என் சபையைக் கட்டுவேன்' என்று சொன்னார் (மத்தேயு 16:18). அவருடைய சபை இன்றும் உலகத்தில் இருக்கிறது. ஏனென்றால், சபை ஒருபோதும் அழிக்கப்படாது என்றும், ஒரு நாள் அதை தாம் வந்து பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுப்பதாகவும் அவர் வாக்குத்தத்தம் செய்து இருக்கிறார். கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரி சுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்' (எபேசியர் 5 : 27).

கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் கிறிஸ்து ஒரே ஒரு சபையைத் தான் கட்டினார். இது கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் மத்தியில் காணப்படும் பிரிவினைகள், குழப்பங்கள் எல்லாம் ஒழிக்கப்பட வேண்டும்

என்று சொல்லும்போது, தங்கள் கொள்கைப் பிடிப்புக்காக அவர்கள் மற்றவர்களால் தவறாகப் பார்க்கப்பட்டு கண்டிக்கப்படுகிறார்கள். ஆனால், சபை ஒன்று தான். இந்த வாதத்திற்கு வலு சேர்க்கும்படியான கருத்துக்கள் உள்ளது.

ஆம், தேவனிடத்தில் சேருவதற்கு ஒரே வழி கிறிஸ்து தான் என்பதில் நாம் எப்படி உறுதியாக இருக்கிறோமோ,அதுபோல அவர் **ஒரு சபையைத்** தான் கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்தார் என்பதிலும் உறுதி காட்ட வேண்டும். சபை ஒன்று தான் என்னும் உண்மையை கேட்க விரும்பாதவர்களுக்கு நாம் சொல்வது கோபத்தையும், வெறுப்பையும் உண்டாக்கினாலும், நாம் சத்தியத்தை மறுதலிக்க கூடாது. நாம் என்ன செய்ய முடியும்? நம்மால் வேத வாக்கியங்களைத் திருத்தி மறுபடியும் எழுத முடியாது. அப்படிச் செய்தால் நம் ஆண்டவரால் வெளிப்படையாக சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகளை நாம் எதிர்த்து விட்டு நல்மன சாட்சியோடு இருக்க முடியாது.

பிரிவினை சபைகளில் உள்ளவர்களுக்கு இந்து மதம், புத்த மதம், சீக்கிய மதம், இஸ்லாம் மற்றும் இன்றைய நாட்களில் மற்ற காணப்படும் மற்ற மதங்கள் எல்லாம்  தவறு என்று ஏற்றுக் கொள்வதில் எவ்வகை சிரமமும் இல்லை. ஏன் அப்படி? ஏனென்றால், பரிசுத்த வேதாகமத்தின் பக்கங்களில் இந்த தெய்வங்களும், மதங்களும் காணப்படுவதில்லை.

இக்கருத்தைப் பொறுத்தவரை அவர்களுடைய நிலை சரிதான். அதுபோலவே தேவனையும், நம் இரட்சகரையும் கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கும்படி உலகத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட தேவனுடைய குடும்பமாகிய சபையை அடையாளம் காண்பதற்கு நாம் வேதாக மத்திற்குத்தான் செல்ல வேண்டும்.

ஆனால், இதே மார்க்க தலைவர்கள் தேவனைப் பற்றியும், கிறிஸ்துவைப் பற்றியும், சபையைப் பற்றியும் உள்ள கருத்துக்களை எடுத்துக்கொண்டு, வேத வாக்கியங்களுக்கு அந்நியமான சபைகளை ஏற்படுத்தும் அளவுக்கு அந்த போதனைகளைக் கெடுத்து விட்டார்கள். இதைத்தான் தேவனுக்கு புறம்பானவர்கள் தங்கள் தங்கள் மதங்களில் செய்திருக்கிறார்கள்.

வேத வாக்கியங்களில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ள உபதேசங்களுக்கு மாறாக சபைகளையும், உபதேசங்களையும், மனிதர் கள் உருவாக்கத் துணிவது வேறொரு பிரசங்கத்தை பிரசங்கிப்பதாக இல்லையா? எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறவைகளோடு கூட்டுவதாக இல்லையா? கலாத்தியர்1:8 மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 22:18,19 வசனங்களில் இச்செயல் கடிந்து கொள்ளப்பட்டிருக்கிறது தானே?

கிறிஸ்தவ மத உலகில் மனிதர்களுக்கு சூட்டப்படும் பட்டங்களான ரெவரென்ட், பிஷப், குரு, பாஸ்டர் போன்றவைகளை வேத வசனங்களில் நாம் எங்கே வாசிக்கிறோம்? அதுபோல் ரோம கத்தோலிக்க சபை, பிரஸ்பிட்டேரியன்சபை, யெகோவா சாட்சிகள், லுத்ரன் சபை, நசரேனயனுடைய சபை மற்றும் சமுதாய சபைகள் என்று அழைக்கப் படும் புதிய வெளிச்சத்தின் சபை அல்லது கன்மலை சபை, கல்வாரி சபை, புது நம்பிக்கை சபை போன்றவைகளை நாம் வேதாகமத்தில் வாசிக்க முடியுமா?

கிறிஸ்துவாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை என்று வேதாகமம் சொல்வதை மட்டும் இந்தப் பெயர்கள் மீறவில்லை (அப்போஸ்தலர்4:12). எவைகள் எல்லாம் உபதேசப் பிரிவினையை அடையாளப்படுத்துகின்றன. இவர்கள் எல்லாரும் ஜனங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட இவைகளை போதிக்கிறார்களோ அந்த போதனையில் ஒருவருக்கொருவர் வேறுபடுகிறார்கள். அவைகளின் ஆராதனை முறைமையிலும் வேறுபாடு உண்டு. அவருடைய ஆளுகை அமைப்பு அவர்கள் இயற்றி இருக்கும் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டிருக்கும்; அவைகளின் வாழ்க்கைக்கான ஒழுக்க நெறிகள் ஒன்றுக்கொன்று வேறுபடும்.

இப்படிப்பட்ட வேறுபாடுகளும், தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதற்காக அவர்களால் உருவாக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் நூதனமான பெயர்களும், தேவனால் வன்மையாக கண்டிக்கப்படுகிறது. அந்த மார்க்கப்பிரிவினை கூட்டங்கள் நம் இரட்சகரை பின்பற்றுவதாக சொல்லிக் கொண்டாலும், அவருடைய போதனையின் வார்த்தைகளை மறுதலிப்பதாக தங்கள் செயல்கள் மூலமாக இந்த உலகிற்குக் காட்டுகிறார்கள்.

கிறிஸ்து ஒரே சபை என்று சொன்னார் (மத்தேயு 16:18); சபை அவருடைய சரீரம் என்று சொன்னார் ( கொலோசெயர் 1:18,24); சபை அவருடைய குடும்பம் என்று சொன்னார் (எபேசியர்3:15); சபை அவருடைய மணவாட்டி என்று சொன்னார்

(எபேசியர் 5:27 ); சபை அவருடைய ராஜ்ஜியம் என்று சொன்னார் (மத்தேயு16:18,19); சபை 1 தீமோத்தேயு 6:15).

பிரிவினை சபை மதத்தலைவர்கள் தேவனிடத்தில் போவதற்கு ஒரே வழி இயேசு தான் உண்டு என்று வலியுறுத்தி சொல்வதினால், பிற மதத்தினரின் கண்களில் தயவு பெறாமல் அவர்களிடமிருந்து அதிருப்தியை சம்பாதிக்கிறார்கள். அதே நேரத்தில் சபையின் ஒருமைத் தன்மையை மறுக்கிற காரியத்தில் மாத்திரம் ஏன் பிடிவாதமாக இருந்து தேவ சித்தத்தை மீறுகிறார்கள்?

1 ராஜாக்கள் 22 ல் யூதாவின் ராஜாவாகிய யோசபாத், சீரியாவுக்கு எதிராக இஸ்ரவேலோடு சேர்ந்து யுத்தம் செய்ய சம்மதித்தான். இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் தான் சீரியாவுக்கு எதிராக யுத்தம் செய்யப் போகலாமா என்று 400 தீர்க்கதரிசிகளை கூடி வரச் செய்து விசாரித்தான். அவர்கள் எல்லோரும் ஏக மனதாக யுத்தம் செய்யும் முடிவை ஆதரித்தார்கள். ஆனால், ஏதோ ஒரு காரணத்துக்காக யோசபாத் அந்த தீர்க்கதரிசிகளுடைய ஆலோசனையை நம்பவில்லை. எனவே, அவர் ஆகாபிடம் இது குறித்து விசாரிக்க வேறு ஏதாவது தீர்க்கதரிசி இருக்கிறானா என்று கேட்டார். அதற்கு ஆகாப் தீர்க்கத்தரிசி ஒருவன் இருக்கிறான் அவன் பெயர் மிகாயா. அவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன் என்றான். யோசபாத் அந்தத் தீர்க்கதரிசி குறித்து விசாரிக்க விரும்பினான். எனவே, அந்த தீர்க்கதரிசி ராஜாவிடத்தில் அழைப்பிக்கப்பட்டான். அவனை அழைக்கப்போன தூதுவன் இந்த வார்த்தைகளைப் பேசினான் [1இராஜாக்கள் 22 : 13]

‘மிகாயாவை அழைக்கப்போன ஆள் அவனுடன் பேசி: இதோ, தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகள் ஏகவாக்காய் ராஜாவுக்கு நன்மையாயிருக்கிறது; உம்முடைய வார்த்தையும் அவர்களில் ஒருவர் வார்த்தையைப்போல இருக்கும்படி நன்மையாகச் சொல்லும் என்றான்‘. வேறு விதமாகச் சொன்னால், மிகாயா என்னும் பேர் கொண்ட அந்த தீர்க்கதரிசி பெரும் கூட்டத்தை பின்பற்றும்படியாகவும் , ராஜாவை உற்சாகப்படுத்தும் படியாகவும் வலியுறுத்தப்பட்டான். இது உண்மை யாகவே தன்னைப் போன்றவரின் அழுத்தமாக தான் இருக்கிறது. 400 பேருக்கு எதிராக ஒருவர். ஆனால், மிகாயா அந்த அழுத்தத்திற்கு அடிபணிய மறுத்து தேவனுடைய சத்தியத்தை பேசினான். அதாவது, அவர்கள் யுத்தத்திற்கு போனால் தோற்றுப் போவார்கள் என்பதை வெளிப்படுத்தினான். ஆனால், ராஜாக்களோ, மற்ற தீர்க்கதரிசிகளோ தீர்க்கதரிசியின் வார்த்தைகளை விரும்பவில்லை. எனவே, அவன் சிறையில் தூக்கிப்போடப்பட்டான். இருந்த போதிலும், அவனுடைய வார்த்தைகள் உண்மையாய் இருந்தன. அது மாத்திரமல்லாமல், பிரபலமாகாத தேவச் செய்தியை பேச அவன் தைரியம் உடையவனாக இருந்தான்.

தேவனுடைய ஜனங்கள் உலகத்தின் அழுத்தத்திற்கு எதிராக நிற்க வேண்டும் என்பதைக் காட்டுவதற்காக மேற்கோள் காட்டப்பட்டிருக்கிற வேதாகம உதாரணங்களில் மேற்ச் சொல்லப்பட்ட உதாரணமும் ஒன்றாகும். யாத்திராகமம் 23:2 ல் மோசே தீமை செய்யத் திரளான பேர்களைப் பின்பற்ற வேண்டாம் என்று எச்சரித்தார். நோவாவின் நாட்களில் வெறும் 8 பேர் மாத்திரமே தேவனுக்கு உண்மை உள்ளவர்களாக இருந்து அந்தப் பேழையில் இரட்சிக்கப்பட்டார்கள். ✝



# வித்தியாசமாக இருப்பதற்கு உங்களுக்கு தைரியம் இருக்கிறதா?

## Do you have the courage to be different?

*Jerry Bates*

**த**ன்னைப் போன்றவர்களால் ஏற்படும் அழுத்தத்தை எதிர்ப்பது கடினமானது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நிச்சயமாய் உணர்கிறேன். சிலர் எந்தக் குழுவோடு தொடர்பில் இருக்கிறார் களோ அவர்களால் ஏற்றுக் கொள்ளப் படுவதற்கு எதையும் செய்யத் தயாராக இருக் கிறார்கள். இவ்வுலகில் பலர் தாங்கள் சரியாக இருக்கிறார்களா என்பதை விட மற்ற வர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதையே பெரிதாக எண்ணுகிறார்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் இந்த உலகத்தின் மக்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர்களாக இருக்க வேண்டும் என்று நம் பரமபிதா எதிர் பார்க்கிறார். நாம் உலகத்தின் மக்களைப் போல நினைப்பதும் ,செய்வதும் தேவனுக்கு நிச்சயமாகப் பிரியமாயிராது. பல கிறிஸ்தவர்கள் தேவனுடைய எதிர்ப்பார்ப்பைப் பற்றி சற்றும் கவலைப்படாமல் உலகத்தின் மக்களோடு ஒத்துப் போவது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும். இந்தப் பொறுப்பற்ற போக்கை தேவன் தம்முடைய வேதாகமத்தின் பக்கங்களில் கடுமையாகக் கண்டிக்கிறார்.

‘அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டு மென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறு ரூபமாகுங்கள்‘ [ரோமர் 12:1,2].

நாம் வாழும் உலகம் பெரும்பாலானோர் எதைச் செய்கிறார்களோ அது சரியானது என்று நினைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், தேவனு டைய பிள்ளைகளாகிய கிறிஸ்தவர்கள் அப்படி நினைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், பல காரியங்களில் நாம் பார்க்கும்போது பெரும்பான்மை தவறாகத்தான் இருக்கிறது. உலகம் கிறிஸ்தவர்களை தொடர்ந்து உலகத்திற்கு ஒத்தவேஷம் தரிக்கும்படி உற்சாகப்படுத்திக் கொண்டே இருக்கிறது.

## ஒரு பாவியின் வாழ்க்கை

நம்மில் பலர் சாதாரண வாழ்க்கை தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். காலையில் எழுகிறோம், வேலைக்குப் போகிறோம், மதியம் சாப்பிடுகிறோம், இன்னும் சற்று கூடுதலாக வேலை பார்க்கிறோம், பின்பு வீட்டுக்குப் போகிறோம், சாப்பிட்டுவிட்டு தூங்க சென்று விடுகிறோம். ஒவ்வொரு நாளும் இவைகளையே தான் நாம் செய்கிறோம். நம்மை நாம் என்றாவது பரிசோதித்து பார்த்திருக்கிறோமா? வாழ்க்கையை எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று எப்போதாவது மாற்றி யோசித்து இருக்கிறோமா? வாழ்க்கையின் மிகப்பெரிய கேள்விகளைக் குறித்து சிந்திக்க நேரத்தை எடுத்து இருக்கிறோமா? நாம் எங்கே இருந்து வந்தோம்? இந்த பூமியில் நம் நோக்கம் என்ன? நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்? இந்த மிகப்பெரிய கேள்விகளை குறித்து பெரும்பாலான மக்கள் சிந்திப்பது கூட இல்லை. நான் வளரும் போது என்ன ஆவேன்? அல்லது நான் எங்கே வாழ்வேன்? போன்ற கேள்விகளைப் பற்றித்தான் நாம் வழக்கமாக யோசிப்போம். இந்தக் கேள்விகள் எல்லாம் முக்கியமானவைகளாக இருந்தாலும் கூட மேற் சொல்லப்பட்ட மிகப்பெரிய கேள்விகளைப் போல முக்கியமானவைகள் அல்ல. மற்றும் ஒரு மிகப்பெரிய கேள்வி இவ்விதமாக இருக்கும் மனித இனத்தின் மிகப்பெரிய பிரச்சனை என்ன? இவ்வுலகத்தில் உள்ள மக்கள் உலகத்தில் ஏதோ ஒரு பிரச்சனை இருக்கிறது என்று உணர்கிறார்கள். பிரச்சனை என்ன என்பதை அவர்கள் அறியாமல் இருக்கலாம். ஆனால், அதற்கான பதிலை வேதாகமம் கொடுக்கிறது. மனித இனத்தின் மிகப்பெரிய பிரச்சனையே நாம் பரிசுத்தமும், நீதியும் உள்ள தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தோம் என்பதுதான். பாவிகள் சரீரப் பிரகாரமாக உயிரோடு இருக்கிறார்கள். ஆனால், ஆவிக்குரியப்பிரகாரமாக அவர்கள் மரித்து விட்டார்கள். (ஏசாயா 59:1,2; எபேசியர் 2:1-10).

ஒரு பாவியின் வாழ்க்கை பற்றி வேதாகமம் எப்படி விவரிக்கிறது? தேவனுடைய பிரமாணத்தை மீறுவதே பாவம் என்று சொல்கிறது( 1 யோவான் 3:4). பாவம் தேவனுடைய தன்மைக்கு எதிரானதாகும். தேவன் நாம் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அந்த இலக்கை தவறும் போது அவருக்கு விரோதமாக பாவம் செய்து விட்டோம்.

ஒரு பாவியின் வாழ்க்கை அசிங்கமான பேச்சுக்கள் மற்றும் எண்ணங்களால் நிறைந்ததாக வேத வாக்கியங்கள் விளக்குகின்றன (நீதிமொழிகள் 1:10-15; எபேசியர் 4:29). இவ்விதமான அசிங்கமான வார்த்தைகள் எல்லாம் இருதயத்தில் இருந்து தான் ஊற்றெடுத்து வருகின்றன (நீதிமொழிகள்23:7); எரேமியா 17:9). இந்த உலகில் தேவபக்திமற்ற அசிங்கமான வார்த்தைகளை தொலைக்காட்சிகளிலும், தெருக்களிலும் பார்ப்பது மாத்திரம் அல்லாமல் சில வேளைகளில் நம்முடைய வீடுகளிலும் கூட அதைக் கேட்கிறோம்.

தேவன் சோதோம், கொமோரா பட்டணங்களை அழித்தபோது லோத்துவின் சிறிய குடும்பம் மாத்திரமே இரட்சிக்கப்பட்டது. அப்பட்டணங்களில் பத்து நீதிமான்கள் இருந்திருந்தால் கூட தேவன் அவைகளை அழித்திருக்கமாட்டார் ( ஆதியாகமம் 18:32). ஆனால், அங்கே 10 நீதிமான்கள் கூட காணப்படவில்லை. ரோமர் 12:2 ல் அப்போஸ்தலனாகிய பவுல் அந்த ரோமாபுரியாருக்கு எழுதும் போது அவர்கள் உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் மறுரூபமாக வேண்டுமென்று புத்திமதி சொன்னார். நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை இவ்விதமாக கேட்கிறோம். 'ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்'மத்தேயு 7:14. இங்கே இயேசு கிறிஸ்து கேட்டுக்குப் போகிற பாதையில் பிரவேசிப்பவர்கள் அநேகர் என்றும், ஜீவனுக்குப் போகிற பாதை இடுக்கமாய் இருக்கிறபடியால் அதில் பயணிக்கிறவர்கள் சிலர் என்றும் வேறுபடுத்திக் காட்டுகிறார்.

மேற்சொல்லப்பட்ட உதாரணம் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையினால் இழுப்புண்டு போகக்கூடாது என்பதைத்தான் காட்டுகிறது. நம்மைச் சுற்றிலும் இருக்கிற உலகத்தில் இருந்து வேறுபட்டு வாழ்வது என்பது சற்று கடினமானது தான். ஆனால், தேவன் விரும்புகின்ற ஜனங்களாக நாம் இருக்க வேண்டும் என்று சொன்னால் அது அவசியமாய் இருக்கிறது. ஏனென்றால், நாம் பார்த்த சில சம்பவங்களிலே பெரும்பாலானவர்கள் தவறு செய்கிறவர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள். எல்லோரும் தவறுக்குத் துணை போனாலும் கூட, நாம் வித்தியாசமானவர்களாக இருந்து சரியானவைகளுக்காக நிற்கும் தைரியம் உடையவர்களாக இருப்போமாக.'விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்' (1 கொரிந்தியர் 16:13).'கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்'(எபேசியர் 6:10). ✝

## வளரும் சபையின் குணாதிசயங்கள்

*ஆராதனைக்கு உறுதியான அர்ப்பணிப்பு*

*ஆத்துமா ஆதாயத்துக்கு உறுதியான அர்ப்பணிப்பு*

*பக்தி விருத்தி அடைவதற்கு உறுதியான அர்ப்பணிப்பு*

*தியாகத்திலும் உண்மையிலும் உறுதியான அர்ப்பணிப்பு*



# கிறிஸ்தவத்தின் முரண்கள்: அடக்கம் பண்ணப்பட்டு, இருந்த போதிலும் உயிர்த்தெழுந்து

# Paradoxes of Christianity: Buried , yet Risen

*Shane Fisher*

தமிழ் அகராதி முரண்பாடு என்பதற்கு முரண்பட்டது போல் இருந்தாலும் உண்மையான ஒரு கூற்று வாக்கியம் என்று விளக்கம் கொடுக்கிறது. வேதாகமம் முழுவதும் முரண்பாடு உள்ள வாக்கியங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகள் நாம் ஆழமான உண்மைகளைத் தியானிக்க உதவுகின்றன. இன்று நாம் ஆராயப் போகும் முரண் ஒரு நபர் அடக்கம் பண்ணப்பட்டிகிறார், இருந்த போதிலும் அவர் உயித்தெழுந்திருக்கிறார் என்பதாக இருக்கிறது. இது எப்படி சாத்தியமாகும்? உதாரணமாக, இவ்வுலகத்திலிருந்து கடந்து சென்ற குடும்ப அங்கத்தினர்களில் ஒருவரை நினைத்துப் பார்க்கிறேன். நான் எத்தனை முறை அவருடைய கல்லறைக்குப் போய் பார்த்தாலும் அவருடைய பூதவுடல் அங்கு இருப்பதைத் தான் நான் காண முடியும். அவருடைய சரீரம் அந்தக் கல்லறையிலிருந்து உயிர்த்தெழவில்லை என்பதை நான் அறிந்திருக்கிறேன். எனவே தான், ஒரு நபர் அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறார். இருந்த போதிலும் அவர் உயிர்த் தெழுந்து இருக்கிறார் என்று என்னால் எப்படிச் சொல்ல முடியும்? நாம் இதை ஆவிக்குரிய பிரகாரமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று வேதாகமம் சுட்டிக் காட்டுகிறது.



ஒரு பாவியின் வாழ்க்கை வேத வாக்கியங்களில் அந்தகாரக் கிரியைகளாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த உலகில் மனிதர்கள் மாம்சத்தின் கிரியைகளை வெளிப்படுத்துவதை நாம் ஊடகங்களிலே காண்கிறோம் [கலாத்தியர் 5:19-21; ரோமர் 1:18-32]. இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு ஒளியாக இருக்கிறார். அவர் மனிதர்களுடைய அந்தகாரக் கிரியைகளை வெளிப்படுத்தும்படியாக வந்தார் [யோவான்1:4;3:19-21;8:12;11:9-10].

ஒரு பாவியின் வாழ்க்கை வேத வாக்கியங்களில் சீரழிந்த உறவுகளாக விவரிக்கப்பட்டு இருக்கிறது. இவ்வுலகம் முறிந்து போன திருமணங்கள் மற்றும் உடைந்து போன குடும்பங்களால் நிறைந்திருக்கிறது. தேவன் எப்படி விரும்புகிறாரோ அப்படி நம்முடைய உறவுகளை மேம்படுத்த வேதாகமம் நமக்குச் சிறந்த வழிகாட்டியாய் இருக்கிறது [எபேசியர் 5:22-33; 6:1-4].

## ஒரு பாவியின் இழப்புகள்

நாம் இதுகாறும் பார்த்த காரியங்களை வைத்துப் பார்க்கும் போது ஒரு பாவியின் வாழ்க்கை வேத வாக்கியங்களில் இவ்விதமாக விவரிக்கப் பட்டிருக்க, அந்தப் பாவி தொடர்ந்து தான் விரும்பியபடி வாழ்ந்து கொண்டிருந்தால் அது எங்கே போய் முடியும்? அந்த ஒழுக்கக் கேடான செயல்பாடுகளுக்கு விளைவுகள் உண்டா? ஒரு பாவி பாவம் தன்னை ஆட்கொள்ள அனுமதித்தால் எதை இழந்து போவார் [ரோமர் 6:12-14]?

ஒரு பாவி இழக்கும் முதல் காரியம், தன்னுடைய சிருஷ்டி கருடனான அர்த்தமுள்ள திருப்திகரமான உறவை. நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து, அவருடைய சித்தத்தின்படி நடந்தால் நம்முடைய ஜீவியங்கள் திருப்திகரமாகவும், நிறைவானதாகவும் இருக்கும் என்று கட்டளையிட்டிருக்கிறார்[ பிரசங்கி 12:13-14]. ஆனால், சாத்தான் அநேக உபாய தந்திரங்களைப் பயன்படுத்தி நம்மைத் தவறான பாதையில் நடத்தி நம்மை சுய மகிமையை அடையச் செய்கிறான். ஆதலால், இறுதியில் நாம் திருப்தி அடையாமலேயே போய்விடுகிறோம் [2 கொரிந்தியர் 5:15 ; மத்தேயு 10:37-39;1 யோவான் 2:15-17]. இயேசு நமக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தார் [யோவான்10:10].

ஒரு பாவி இழக்கும் இரண்டாவது காரியம், தன் நித்திய சரீரமும் , ஆத்துமாவும் தான். தேவன் மிருகங்களில் காணப்படாத தனித்துவம் வாய்ந்த ஏதோ ஒன்றை மனிதனுக்குள் வைத்திருக்கிறார். அதாவது, மனிதன் மரித்த பிறகும் கூட அவனுக்குள் வாழும் ஓர் ஆவியை தேவன் கொடுத்திருக்கிறார் [சகரியா 12:1]. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மறுபடியும் வரும்போது, சரீரப்பிரகாரமாக மரித்தவர்களில் அந்த ஆவியை மறுபடியும் இணைத்து கல்லறைகளில் இருந்து அவர்களை எழுப்புவார்

(எபிரேயர் 9:27; யோவான் 5:28,29). தேவன் உயிர்த்தெழுந்த துன்மார்க்கரின் சரீரங்களை நரகத்தில் தூக்கிப்போடுவார் (மத்தேயு 10:28-29). இதனால் தான் இதை வேதாகமம் இரண்டாவது மரணம் என்று அழைக்கிறது (வெளிப்படுத்தல்21:8); இது தேவனுடைய சமூகத்திலிருந்து நித்திய பிரிவாகும் (மத்தேயு 16:26-27; 2 தெசலோனிக்கேயர் 1:7-9).

## ஒரு பாவிக்காக அன்பு

வேதாகமம் ஒரு பாவியின் வாழ்க்கை பற்றி எப்படி விவரிக்கிறதோ அவ்வகையான வாழ்க்கை முறையை நீங்கள் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? அவ்வகையான வாழ்க்கை முறையின் விளைவுகளை நீங்கள் உணருகிறீர்களா? இப்போதும் நீங்கள் சரிரப்பிரகாரமாக மரிக்கும் போது அது எவ்வளவு பெரிய இழப்பை ஏற்படுத்தும் என்பதை உணர்கிறீர்களா? நீங்கள் அவர் முகத்தில் காரி த்துப்பினால் கூட உங்கள் மீது அன்பு செலுத்துவதற்கு ஒருவர் இருக்கிறார். நீங்கள் அடித்து நொறுக்கினால் கூட உங்களிடத்தில் அன்பு செலுத்துவதற்கு ஒருவர் இருக்கிறார். யார் அந்த நபர்? அவர்தான் உங்கள் பாவங்களை சிலுவையில் சுமந்து தீர்த்த இயேசு கிறிஸ்து (யோவான் 3:16,17; எபேசியர் 2:1-10; ரோமர் 5:6-8). உங்களுக்கான தேவனுடைய அன்பு அவர் உங்களுக்காக என்ன செய்ய விரும்புகிறார் என்பதைக் காட்டுகிறது. அவரால் உங்களை பாவங்களிலிருந்து விடுவிக்க முடியும். நீங்கள் சரீரப்பிரகாரமாக நடந்து திரிந்து கொண்டிருக்கலாம். ஆனால், நீங்கள் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தால் பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். தேவனிடமிருந்து பிரிந்து செல்ல நீங்கள் விரும்புகிறீர்களா? நித்திய நித்தியமாக தேவனிடமிருந்து பிரிந்து செல்ல விரும்புகிறீர்களா? ஒரு பாவியின் வாழ்க்கையில் எப்படிப்பட்ட இழப்புகள் எல்லாம் ஏற்பட்டது என்பதை இதுகாறும் பார்த்தீர்கள். நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்( 1 தீமோத்தேயு 2:4).

## ஒரு பாவியின் அன்பான கீழ்ப்படிதல்

தேவன் மனிதனுடைய பாவத்திலிருந்து அவனை இரட்சிக்க மனிதனுடைய பாவங்களுக்காக மரிக்க ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினதினால் மீட்பின் திட்டத்தை முன்கூட்டியே தீட்டினார்( 1 பேதுரு 1:20). ஒரு பாவி தான் இரட்சிக்கப் படும்படியாக தேவன் என்ன கட்டளைகளை விதித்திருக்கிறாரோ அவைகளுக்கு அன்புடன் கீழ்ப்படிய வேண்டும். அதாவது, விசுவாசத் தினாலும்(யோவான் 8:24); மனம் திரும்புதலினாலும் அப்போஸ்தலர்2:38; விசுவாசத்தை அறிக்கை செய்வதினாலும் (ரோமர் 10:9,10) பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறுவதினாலும் கீழ்ப்படிய வேண்டும் (அப்போஸ்தலர் 22:16).

சுவிசேஷத்தின் அஸ்திபாரமே இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், மரித்தோரிலிருந்து உயிர்த் தெழுந்தார் என்பதாயிருக்கிறது[ 1 கொரிந்தியர் 15:1-4]. இயேசுவின் அடக்கத்தின் வரலாற்றுப் பூர்வமான விவரங்களை கவனியுங்கள் [மத்தேயு 27:57-66; மாற்கு 15:42-47]; லூக்கா 23:50-56; யோவான் 19:38-42]. நாம் கூட விசுவாசத்தின் மூலமாக கிறிஸ்துவின் இரத்தத்தினால் நம்முடைய பாவங்கள் கழுவப்பட வேண்டுமானால், கிறிஸ்துவோடு அடக்கம் பண்ணப்பட தண்ணீர் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் [கொலோசெயர் 2:12; அப்போஸ்தலர் 8:36-39; 22:16; வெளிப்படுத்தல் 1:5]. எனவே, ,இங்கே பழைய பாவ மனுஷன் ஆவிக்குரிய பிரகாரமாக அடக்கம் பண்ணப்படுகிறான். ஆனால், மரணத்தி லிருந்து ஆவிக்குரிய பிரகாரமாக புதிய மனுஷன் எழுகிறான் [யோவான் 5:25-26; 2 கொரிந்தியர் 5:17].

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றிய வரலாற்றுப் பூர்வமான தகவல்களை கவனியுங்கள்[ மத்தேயு 28:1-6; மாற்கு 16:1-8; லூக்கா 24:1-9; யோவான் 20:11-18]. நம் ஆண்டவர் மரித்தோரிலிருந்து உயிர்த் தெழுந்தபோது, அங்கே ஏதோ ஒன்று முற்றிலும் வித்தியாசமாக இருந்தது. அதாவது, இயேசு அடக்கம் பண்ணப்பட்டார், இருந்தபோதிலும் உயிர்த்தெழுந்தார். இது முரண்பாடாக இருக்கிறது என்று தான் ஏற்கனவே பார்த்தோம். நமக்கும் கிறிஸ்துவோடு எழுந்த அனுபவம் வித்தியாசமாக இருக்க வேண்டும் அல்லவா? நாம் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்று வெளியே வரும்போது சரீரப் பிரகாரமாக ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறோம். இருந்தபோதிலும், உலகத்தாருடைய மனப்பான்மை யிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்களாயிருக்கிறோம் [கொலோசெயர் 3:1-4]. இரண்டாவது, மீண்டும் மரிக்காதபடி , முதலில் எழுந்தருளியவர் நம் ஆண்டவர்தான். அவர் அறுவடையின் முதற் பலனாயிருக்கிறார். நாம் கிறிஸ்துவுக்குள் சரீரப்பிரகாரமாக மரித்தால் மறுபடியும் மரிக்காதபடி அந்தக் கடைசி நாளில் கல்லறையில் இருந்து சரீரப்பிரகாரமாக எழுவோம். [யோவான்5:28,29; 1 கொரிந்தியர் 15:20-24; 1 தெசலோனிக் கேயர் 4:13-18]. அப்படியே நம் கர்த்தரோடு சதாகாலம் வாழ்வோம். ✝

---

**முதல் நூற்றாண்டும், இருபத்தொன்றாம் நூற்றாண்டும்**

***முதல் நூற்றாண்டும் இருபத்தொன்றாம் நூற்றாண்டும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் இயேசுவைப் பற்றிய காரியங்களை எடுத்துச் செய்வதற்கு உலகத்திற்குள் சென்றனர். ஆனால், இருபத்தொன்றாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் இயேசுவைப் பற்றிய காரியங்கள் தங்களுக்குச் சொல்லப்படுவதற்கு சபை கட்டிடத்திற்கு கூட ஒழுங்காக வருவதில்லை. இது மிகவும் வேதனைக்குரிய ஒரு விஷயமாகும்.***

# கொத்தி எருப்போடுவோம் வாரீர்!

## Let Us Dig Around It And Fertilize It

*E.Z. Selvanayagam*

இன்றைய கிறிஸ்தவ மக்களிடையே காணப்படும் ஒருவித சோர்வையும் மெத்தனத்தையும் கண்டு, கனிகொடாத நிலையையும் கேட்டு கவலைப்படாமல் இருக்கிற உண்மைக் கிறிஸ்தவர்கள் மிகச் சிலரே இருக்க முடியும். இந்த இழி நிலைக்கு யார் காரணம் என்று கேட்டால் ஒருவர் மற்றவரையும் மற்றவர் அடுத்தவரையும் சுட்டிக் காட்டி விட்டுத் தங்கள் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முற்படுபவர்களே. எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் நிச்சயமாக ஒரு முடிவுக்கு வர முடியும்.

பொதுவாகவே, கிறிஸ்தவர்கள் தங்களுடைய அழைப்பின் மேன்மையை நன்கு உணர்ந்து கிறிஸ்துவின் உயர்ந்த வாழ்க்கை நெறிகள் அடங்கிய உபதேசச் சட்டங்களைக் கடைப்பிடிக்காமல் அலட்சியம் செய்து தங்கள் மனம்போன போக்கில் வாழ்ந்து வருகின்றனர்.

அப்படியானால், அந்தத் தவறை எப்படிக் களைவது, எங்கிருந்து தொடங்குவது? என்பன போன்ற கேள்விகள் எழும்புகின்றன. இந்த வேதனைக்குரிய நிலை உருவாகியுள்ளதால் அதைக் களைத்தெறிய இயலுமா? என்று மலைத்து நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட தற்கும் பல காரணங்களைச் சொல்லலாம் என்றாலும், தேவனுடைய ஊழியக் காரர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டு தங்கள் வாழ்க்கையால் அதை மறுதலித்துக் கொண்டிருக்கிற மக்களுக்குக் கணிசமான பங்கு உண்டு என்று சொன்னால் அது மிகையாகாது. தன்னை ஒரு வரம் பெற்ற ஊழியக்காரர், தேவனோடும் கிறிஸ்து வோடும் நேரடியாக பேசுகின்ற அருள்பெற்றவர் என்று மக்கள் மதிக்க வேண்டும் என்ற சுய விளம்பரத்துக்காக வீணர்கள் சிலரை தங்கள் வசம் சேர்த்துக் கொண்டு சுவிசேஷத்தை கேலிக் கூத்தாக்கி, தெருவில் வேடிக்கை காட்டும் மோடி மஸ்தான்களைபோல பாமர மக்களையும் சுய புத்தி உள்ளவர்களையும் மயக்கி இதுதான் இயேசுபிரான் காட்டிய வழி, இது தான் இரட்சகரின் இலட்சியம் என்று பிதற்றித் திரிகின்றனர். அவர்கள் சீஷத்துவத்தின் விலையை, அதிலுள்ள அர்ப்பணிப்பு, தியாக உணர்வை அதன் தூய்மை நிலையை விளக்கிக் கூறமாட்டார்கள். கிறிஸ்துவை பின்பற்ற விரும்புகிறோம் என்று சொல்பவர்களின் கூற்று உண்மையாகவே இயேசுவில் அரிய கருத்துக்களைப் புரிந்து ஏற்றுக் கொண்டதால் ஏற்பட்ட முடிவுதான் என்பதைக் கவனிக்க மாட்டார்கள். அப்படி நாம் சொன்னால், ஐயோ, பாவம் அவன் இயேசுவை ஏற்றுக் கொள்ள விரும்புகிறான். நாம் அதற்கு மறுப்பு சொல்லலாமா இருதயத்தின் நினைவுகளை நாம் அறியக் கூடுமா? அது தேவனுடைய காரியமல்லவா என்று பசப்புவர்.

ஏராளமான ஆத்துமாக்களை ஆதாயம் செய்ததாக வேதம் நற்சாட்சி பகருகின்றன. யோவான் ஸ்நானகனும் நமது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவும் இந்த விஷயத்தில் எப்படி நடந்து கொண்டார்கள் என்று கவனிப்போம்.

அரசனையே அதட்டிக் கேட்டு அவனுடைய கோபத்திற்கு ஆளான அஞ்சா நெஞ்சன் யோவான்ஸ் நானகன் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வந்த பரிசேயர்களையும், சதுசேயர்களையும் பார்த்து **விரியன் பாம்புக்குட்டிகளே என்று சுடுமொழியால் சாடி மனந் திரும்புதலுக்கேற்ற கனிகொடுங்கள் என்று** அறிவுரையும் கூறுகிறான். (மத் 3:1–8)

சாந்தத்தின் உறைவிடமாகிய நமது ஆண்டவராகிய இயேசு அந்த அளவு சுடுசொல்லால் தாக்கவில்லையேயொழிய இம்முக்கியமான பிரச்சனையில் தனது ஆலோசனையை கூறாமலில்லை. லூக்கா சுவிசேஷத்தில் இதை குறித்து ஓர் உவமையை சொல்லியிருக்கிறார் (லூக்கா 14: 25 – 33).

ஒருவனுடைய பெற்றோர்கள், சகோதர சகோதரிகள் மனைவி குழந்தைகள் ஏன், ஒருவனுடைய உயிரே கூட கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் ஒருவனுக்கு பெரிதாகத் தோன்றக் கூடாது என்றும் கிறிஸ்து வைப் பின்பற்றுதல் என்பது இன்பமான உல்லாசமான பொழுதுபோக்கு அல்ல என்றும், துன்பம் தொல்லைகளும் நிறைந்த வாழ்க்கை நெறி என்றும் விளக்கியுள்ளார்.

அப்படி அவர் அறிவுரை கூறியதோடு நிறுத்திக் கொள்ளாமல் தான் உதவ நேர்ந்த எல்லா மனிதரிடத்திலும் தன்னைப் பற்றியும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் பற்றியும் அக்கறை காட்டுகிறாரா என்றும் கவனித்திருக்கிறார். எடுத்துக்காட்டாக லாசரு என்பவரை உயிரோடு எழுப்பிய நிகழ்ச்சியை எடுத்துக் கொள்வோம். நான்கு தினங்களுக்குப் பிறகு அவனை உயிரோடு எழுப்ப வேண்டும் என்ற நோக்கத்தோடு கல்லறைக்குச் செல்லுகிறார். ஆனால், தன்னுடன் வந்து சுற்றிலும் நிற்கிறவர்களைப் பார்த்து கல்லை எடுத்துப் போடுங்கள். (யோவா 11 : 39) என்று கட்டளையிடுகிறார். ஏன் மரித்தவனுக்கு உயிர்கொடுக்கும் வல்லமை பெற்ற நமது ஆண்ட வருக்கு கேவலம் ஒரு கல்லைப் 'புரண்டு வழிவிடு' என்று கூறமுடியாதா? சிந்தித்துப் பாருங்கள்! கர்த்தர் தான் செய்யப்போகிற இந்த மகத்தான காரியத்தை அவர்கள் புரிந்து கொண்டு விசுவாசிக்கவும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் மனிதனுடைய பங்கும் ஓரளவுக்கு இருக்கிறது. வெறுமனே கைகளைத் தட்டி தாளம் போடுவதனாலேயே பரலோகம் போய் சேர்ந்துவிட முடியாது என்பதை யும் உணர்த்தவே அவ்வாறு கூறினார் என்று கூறமுடியும்.

அப்படியே தயவு செய்து, யோவான் 9–ம் அதிகாரத்துக்கு வாருங்கள். அங்கே ஒரு பிறவிக் குருடனை சந்தியுங்கள் அவன் மெத்தப்படித்த பட்டதாரி அல்ல. சமுதாயத்திலே செல்வாக்குப் பெற்ற பெரிய மனிதனும் அல்ல. ஆயினும், அவனுடைய விசுவாச உறுதியும், கொள்கைப் பிடிப்பும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு மாபெரும் விளக்கமாக அமைந்திருக்கிறதைப் பாருங்கள். முதலாவதாக, அவனிடத்தில் காணப்படுகிற சகிப்புத் தன்மையை கவனியுங்கள். எச்சில் என்றாலே அருவருப்பு தோன்றுகிறது. அப்படிப்பட்ட எச்சிலை தரையிலே துப்பி, சேறுண்டாக்கி அதை ஏற்கனவே குருடாக இருக்கிற கண்ணில் பூசிய பின்னர், 'நீ சீலோவாம் குளத்திற்குப் போய்க் கழுவி பார்வையடை' என்று கூறுகிறார். ஐயோ, பாவம்! அவனோ ஏற்கனவே குருடன். அவன் கண்களிலே சேற்றைப் பூசி குளத்திலே போய் கழுவு என்கிறாரே வழுக்கி விழுந்துவிட்டால் என்ன செய்வது? என்று நீங்களும் நானும் கூட அங்கலாய்க்கிறோம். ஆனால், இரக்கத்தில் ஐசுவரியமுள்ள கர்த்தர் அப்படிச் செய்யச் சொல்லும் போது காரணம் நமக்கு விளங்குவதில்லையல்லவா? அதுவும் எத்தனையோ பேய் பிசாசுகளைத் துரத்தும் போதும் கூட வாய்ச் சொல்லைத் தானே பயன்படுத்தினார் என்று அறியும் போது நமது வியப்பு இன்னும் பன்மடங்கு அதிகமாகிறது. ஆனால், அந்தப் பிறவிக் குருடன் எவ்வித முறுமுறுப்போ, சலிப்போ இல்லாமல் கீழ்ப்படிகிறான். பார்வை யடைந்தவனாகத் திரும்பி வருகிறான். நாமும் கூட எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தபோதிலும் தேவனுக்குக் கீழ்ப்படியக் கற்றுக் கொள்ள வேண்டும். தேவன் தம்மை நேசிக்கிறவர்கள் எவ்வித நிபந்தனையுமின்றி தமக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று விரும்புகிறார்.

இரண்டாவதாக, நாம் அவனிடத்திலே கவனிக்கக் கூடிய மற்றொரு நற்பண்பு. சுறு சுறுப்பு. வெகு குறுகிய நேரத்தில் அநேக மக்கள் அவன் பார்வையடைந்து மகிழ்ச்சியாக இருப்பதை அறிந்து அவனிடத்தில் விசாரிக்கிறார்கள். அவர்கள் யாவருக்கும் தான் பார்வையடைந்த விதத்தைக் குறித்து விளக்கமாகக் கூறினான். அவனுக்குப் பார்வை கொடுத்தவர் ஒரு பெரிய தீர்க்கதரிசி என்பதை பரிசேயர்கள் மற்றும் யூத மதத் தலைவர்கள் முன்பிலும் அறிக்கை செய்கிறான். [மத் 10:32] ஓய்வு நாளைக் குறித்த சட்டமோ இயேசுவைக் கிறிஸ்துவென்று எவனாவது அறிக்கை செய்தால் அவனை சபைக்குப் புறம்பே தள்ளிவிடுவோம் என்ற பயறுத்தலோ அவனுடைய நம்பிக்கையை அசைக்க முடியவில்லை. அவனுடைய துடுக்குத்தனமாக பேச்சினால் தன்னுடைய பெற்றோருக்கு ஏதேனும் துன்பம் விளையும் என்றும் கவலைப்படவில்லை [லூக் 14:26] என்னே அவனுடைய துணிவு, கொள்கைப் பிடிப்பு! இன்றைக்கு கிறிஸ்தவர்களாகிய நாம்மெல்லோரும் அவனைப் போலவே துணிவும் மன உறுதியும், கொள்கைப் பிடிப்பும் உள்ளவர்களாக இருந்தால் கிறிஸ்தவத்தின் நிலை மிக வித்தியாசமானதாகவன்றோ இருக்கும்!

அடுத்ததாக, தேவனுடைய எளிதான திட்டத்தைப் புரிந்து கொள் முடியாமலும், சில நேரங்களில் புரிந்து கொள்ள விருப்பம் அற்றவர் களாகவும் தங்களுடைய தலைக்கனத்தால் மனிதன் உருவாக்கிக் கொண்ட பல்வேறு விதமான தத்துவங்களைப் பற்றியெல்லாம் அவன் அலட்டிக் கொள்ளவில்லை. மெத்தப் படித்திருக்கிறோம் என்ற மமதையால் மண்டை வீக்கம் பெற்றிருந்த அந்த யூதத்தலைவர்கள் நியாயப்பிரமாணம் என்றும் பழைய ஏற்பாடு என்று, எதை எதையோ சுட்டிக் காட்டி அவனைக் குழப்பி, மிரட்ட முயல்கின்றன. நியாயப் பிரமாணத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும் என்றும், முழுவதும் பாவத்தில் பிறந்தவன் என்றும் பல இழி சொற்களை வீசி அவனை மடக்கவும் முயலுகின்றனர். பெரிய மனிதர்களும், கல்விமான்களும் மதவித்தகர்களும் அவனைப் பற்றியும், அவனுடைய நம்பிக்கையைக் குறித்தும் என்ன நினைக்கிறார்கள் என்றெல்லாம் அவன் கவலைப் பட்டுக் கொள்ளவில்லை.

பல கோணங்களில் முயன்றும் அவனை மேற்கொள்ள முடியாத யூத மதத்தலைவர்கள் எரிச்சலடைந்து தங்கள் வசமுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அவனைச் சபைக்குப் புறம்பாக்கித் தங்கள் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டனர். 'கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்' என்று அன்றே பவுலார் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் [**II** தீமோ 3: 12] ஆம், சகோதரனே, இப்படி இரத்த சாட்சியாக மரித்தவர்களையும் கிறிஸ்துவினிமித்தம் பாடனுபவித்தவர்களையும் வேதாகமத்தில் இடங்களில் காணலாம். அப்படிப்பட்டவர்களுடைய கல்லறைகள் மீது அநேக உயிரோட்ட முள்ள பலமான சபைகள் உதயமாயின என்பதை வரலாறு கூறுகிறது.

அதிகார பீடத்தில் அமர்ந்து கொண்டு கோலோச்சும் உத்தமர்கள் அறியாமை, மூடநம்பிக்கை, விக்கிரக ஆராதனை கள்ளப் போதகங்கள் என்னும் இருளிலே அகப்பட்டுக் கொண்டு தவிக்கிற மக்களுக்கு உதவும் நல்ல எண்ணத்துடன் மெய்ஞான ஒளியாகிய இயேசு வினிடத்தில் நாம் வழி நடத்த எத்தனிக்கும் பொழுது, இரும்புக் கரம் நீட்டி நமக்குத் தடை விதித்து தீங்கு விளைவிப்பதால் நாம் என்ன செய்யப்போகிறோம்? என்றோ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சம்பவித்த சில நிகழ்ச்சிகளையே சொல்லிச்சொல்லி பழங்கதை பேசப் போகிறோமா? அல்லது தேவனுடைய ஆசீர்வாதம் நிரம்பிய மெய் வாழ்வுக்கு முன்பு இந்த அழிந்து போகிற உலகமும் அதன் மேன்மைகளும் குப்பையும் தூசியும் என்று அறைகூவி கிறிஸ்து வுக்காக எழும்பிப் போராடத் தோள் கட்டுகிற மற்றவர்களையும், வீராங் கனைகளையும் நம்முடைய சீரிய முன் உதாரணத்தின் மூலம் உருவாக்கப் போகிறோமா? ✝

# உன்னைப்போல் பிறரையும் நேசி

## Love Others As Yourself

*Bro. P.C. Philemon Rajah*

இந்த தலைப்பினை படிக்கும் போதே நமக்குள், ஏன் நான் என்னை நேசிப்பது போல மற்றவர்களையும் நேசிக்க வேண்டும்? என கேள்வி எழும்பியிருக்க வாய்ப்புள்ளது. அது ஒன்றும் ஆச்சரியமில்லை. சில நேரங்களில் ஏன் என்ற கேள்வி கேட்டு படிப்பது இன்னும் நம்மை ஆழமாகப் படிக்க வைக்கவும், அர்ப்பணிப்புடன் வாழ வைக்கவும் உதவுவதாக இருக்கின்றது.

ஏன் என்னை நான் நேசிப்பது போல மற்றவர்களையும் நேசிக்க வேண்டும்? அதனுடைய அவசியம் (முக்கியத்துவம்) என்ன? போன்ற நமது கேள்விகளுக்கு பைபிள் நமக்கு பதில் தருகின்றது. ஆண்டவர் இயேசு, நித்திய வாழ்வு வேண்டி வந்தவரிடம் இரண்டு கட்டளைகளை நினைவுப்படுத்துகின்றார். (ஒன்றை முதலாவது என்றும் மற்றொன்றை இதற்கு சமமான இன்னொரு கட்டளை எனவும் குறிப்பிடுகின்றார்.) அந்த இரண்டு கட்டளைகளும் சமமானது என்றும் சொல்கின்றார். அது தான் நாம் கவனிக்க வேண்டிய பகுதியாக உள்ளது. கர்த்தரை நேசி என்பது மேலானது, மனிதர்களை நேசி என்பது குறைவானது என அவர் சொல்லவில்லை. நேசிக்க வேண்டிய விதத்தில் தான் வித்தியாசம் காண்பிக்கின்றார். அதாவது கர்த்தரை முழுவதுமாகவும், அவர் சாயலில் உண்டாக்கப்பட்ட மனிதர்களை ஒருவரையொருவர் தன்னைப்போல நேசிக்கச் சொல்கின்றார். அதனால் உன்னை போல் பிறனையும் நேசி என்ற கட்டளையை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. ஏனெனில், அது கர்த்தரை நேசிப்பதற்கான கட்டளைக்கு ஒப்பான (சமமான) முக்கியத்துவம் வாய்ந்த கட்டளையாகும்.

யோவான் 15:12 'நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது.' ஆண்டவராகிய இயேசுவும், அவருடைய அடியார்களாகிய அப்போஸ்தலர்களுக்கும், நமக்கும் 'நான் உங்களை நேசிப்பது போல நீங்களும் பிறரை நேசியுங்கள்' என்பதனை கட்டளையாக கொடுத்துள்ளார். மேலும், பிறரிடத்தில் அன்புகூருகிறவன் நியாயபிரமாணத்தினை நிறைவேற்றுகிறான் என ஆவியானவர் திருவுளம் பற்றுவதிலிருந்து அதின் முக்கியத்தினை அறிய முடிகின்றது. ரோமர் 13:8 'ஒருவரிடத்திலொருவர் அன்புகூறுகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நிறைவேற்றுகிறான்.

யோவான் புத்தகம் ஆண்டவர் இயேசு மற்றவர்களிடத்தில் எவ்வாறு அன்பாக இருந்தார், எப்படி தன்னை போல பிறரையும் நேசித்தார் என்பதனை சொல்வது போல, 1 யோவான் புத்தகம் தன்னைப் போல பிறனையும் நேசிக்க வேண்டிய அவசியத்தினை சொல்லுகின்ற அன்பின் புத்தகமாகும். அதில் மற்றவர்களிடத்தில் அன்பாக இருப்பவர்களின் நிலை பற்றியும், அவர்கள் பெறப்போகும் வெகுமதியினைப் பற்றியும் மற்றும் அன்பாக இல்லாதவர்களின் நிலைப்பற்றியும், அவர்கள் அடையப் போகும் தண்டனை பற்றியும் தெளிவாக கூறப்பட்டுள்ளது. 1 யோவான் 3:14,15 'நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக் கிறோமென்று அறிந்திருக்கிறோம்; சகோதரனிடத்தில் அன்பு கூராதவன் மரணத்திலே நிலை கொண்டிருக்கிறான். தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்.

நாம் யாரையெல்லாம் நம்மை நேசிப்பது போல நேசிக்க வேண்டும் என கேள்வி நமக்குள் எழும்புமென்றால். பைபிள் அதற்கும் பதிலளிக்கின்றது. நாம் நம்மை எதிரியாக எண்ணி நடத்துபவர்களை, நம்மை துன்பப்படுத்துகிறவர்களை, நம்மை சபிக்கிறவர்களை மற்றும் நம்மை அவமானப்படுத்திய அனைவரையும் நாம் நம்மை நேசிப்பது போல நேசிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். நம்மை நேசிப்பவர்களை மாத்திரம் நேசிப்பதல்ல, நம்மை நேசிக்காதவர்களையும் நேசிக்க வேண்டும். இதை செய்வது கடினமாக தோன்றலாம். ஒன்றை மனதில் வைப்போம் நேசிக்க எவ்வளவேனும் தகுதியற்ற என்னை ஆண்டவர் இயேசு நேசித்துக்கொண்டே இருக்கின்றார். இந்த சத்தியம் நம்மை நமது பிதாவை போல பூரண சற்குணடையோராக மாற்ற ஊக்கமாக உதவி செய்யும். மத்தேயு 5:44-48 'உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார். உங்களைச் சிநேகிக்கிறவர் களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா? ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்.

### 1. ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்

ரோமர் 12:10 'சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள்.

நான் என்னைப் போல் பிறனையும் நேசிப்பதை எவ்விதம் வெளிப் படுத்துவது என்ற கேள்வி நமக்குள் இருக்குமானால், பைபிள் அதற்கும் பதில் தருகின்றது. நான் என்னைப்போல் பிறனையும் நேசிப்பதை வெளிப்படுத்த, முதலாவதாக, பிறருக்கு முந்திக்கொண்டு மரியாதை கொடுக்க வேண்டும்.

நாம் எப்பொழுது முந்திக்கொண்டு மரியாதை செய்வோம்? கிறிஸ்துவின் சிந்தை (பிலி 2:5-8).

நம்மைவிட மற்றவர்களை நாம் மேலானவர்களாக எண்ணும் போது தான் இது சாத்தியமாகும். பிலி 2:3 'ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்.

நாம் யாரையும் அற்பமாக எண்ணக் கூடாது என்பதே பிதாவின் விருப்பம் மற்றும் நமக்கான எச்சரிக்கை. மத்தேயு 18:10 'இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவ தூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.'

நாம் யாரையாவது அற்பமாக மற்றும் மதிப்பு குறைவானவர்களாக எண்ணுவது என்பது பாவம். மேலும், நாம் யாரை அவ்வாறு எண்ணுகின்றோமோ, அவர்கள் கர்த்தரிடம் நெருங்கட; தடையாக, இடையூறாக மாறக்கூடிய அபாயம் இருக்கின்றது. ஏனெனில், யூதர்கள் யாரை அற்பமாக எண்ணினார்களோ, அவர்களை தேவ ஆலயத்திற்கும், தேவ சமூகத்திலிருந்தும் புறம்பே தள்ளினார்கள். அநேகருக்கு இடறல் உண்டாக்கினார்கள். அதினிமித்தம் ஆண்டவர் இயேசு அவர்களை அநேக முறை கடிந்துகொண்டார் (மத்தேயு 18:6, 23:15). தாங்கள் ஆபிரகாமின் சந்ததி என்று பெருமை பேசினபடியால், யோவான் திருமுழுக்கினரும் கடிந்துக்கொண்டார் (மத்தேயு 3:9). அப்போஸ்தலாகிய பவுலும், பேதுருவை கடிந்துகொண்டார் (கலா 2:13-15). ஆகையால், நம் எல்லாருக்கும் ஒரே தகப்பன் ஆதாம், ஒரே தாய் ஏவாள் ஆகியோரிடமிருந்து உண்டானவர்கள் என்ற சத்தியத்தின் சிந்தையுடன், எல்லாரையும் சமமாக நம்மில் ஒருவராக, நம்மை நேசிப்பது போலவே நேசித்து முந்திக்கொண்டு கனம் செய்கின்றவர்களாக இருப்போம்.

**2. ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யுங்கள்**

கலாத்தியர் 5:13,14 'நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அனுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்.'

நம்மைத் போல பிறரையும் நேசிப்பதை வெளிப்படுத்த, நாம் அன்பினாலே ஒருவருக்கொருவர் பணிவிடை செய்கின்றவர்களாக இருக்க வேண்டும். கர்த்தாதி கர்த்தரும், இராஜாதி ராஜாவுமாகிய ஆண்டவர் இயேசு பணிவிடை பெறும்படி வராமல், பணிவிடை (ஊழியம்) செய்ய தான் வந்தேன் என்று சொன்னார் (மாற்கு 10:42–45).

மேலும், சேவை கொள்வதில் அல்ல, சேவை செய்வதில் தான் உண்மையான மகிழ்ச்சி உள்ளது என்று யோசித்தார் மற்றும் காண்பித்தார் (யோவான் 13:1–17). நம் மீது கொண்ட அன்பினாலே, நம்மை மீட்கும்படியாக தம்மை தாமே தாழ்த்தி அடிமையின் உருவெடுத்து வந்தால் (பிலி 2:5–8). நாம் நமது ஆண்டவர் இயேசுவை போல, தாழ்மையுள்ளவர்களாய் மற்றவர்களிடத்தில் அன்புகூதசிவதினாலே பணிவிடை பெறுகின்றவர்களாக அல்லாமல் செய்கின்றவர்களாக இருப்போம்.

**3. ஒருவருக்கொருவர் கீழ்ப்படியுங்கள்**

எபேசியர் 5:21 'தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.

நம்மை போல பிறரையும் நேசிப்பதை வெளிப்படுத்த, நாம் ஒருவருக்கொருவர் தெய்வ பயத்தோடே கீழ்ப்படிகின்றவர்களாக இருப்போம். அது என்ன தெய்வ பயத்தோடே கீழ்ப்படிவது? ஒருவர் சத்தியத்தின்படி கர்த்தருடைய வார்த்தையை சொன்னால் அதற்கு நாம் கீழ்ப்படிகின்றவர்களாக இருக்க வேண்டும். அதாவது, அந்த காரியம் செயல் கர்த்தருக்கு உகந்ததாக, அவருடைய வார்த்தையின்படியே இருக்குமென்றால் அதற்கு நாம் கீழ்ப்படிந்து ஆகவேண்டும். அதுவே தெய்வ பயத்தோடே கீழ்ப்படிவதாகும்.

கீழ்ப்படிதல் என்பது மூன்று வகைப்படும், ஒன்று பரிசுக்காக கீழ்ப்படிவதாகும். அதாவது கர்த்தர் தருகின்ற ஆசீர்வாதம் மற்றும் நன்மைகளுக்காக கீழ்ப்படிவது (உபா 28:1–14). இரண்டாவது, பயத்தினாலே கீழ்ப்படிவதாகும். கீழ்ப்படியாததினால் வரப்போகின்ற தண்டனைக்கும், தீமைக்கும் தங்களுக்கு வந்துவிடக்கூடாது என்ற பயத்தினாலே கீழ்ப்படிவதாகும் (உபா 28:15–68). இந்த இரண்டு வகையான கீழ்ப்படிதல் தான் நியாயப்பிரமாணத்திலே இஸ்ரவேலர்கள் செய்தது.

மூன்றாவது கீழ்ப்படிதல் என்பது பாசத்தினாலே கீழ்ப்படிவதாகும். அதாவது, கர்த்தர் மீது நாம் கொண்ட அன்பினாலே அவருக்கு அடிபணிவதாகும். இதை தான் ஆண்டவர் இயேசு போதித்தார். யோவான் 14:22,24 'நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள்.' இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக; ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம். என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ள மாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையத ாயிருக்கிறது.

பிதா நமக்கு தரப்போகின்ற பரிசு (பரலோகம்) அல்லது தண்டனை (நரகம்) ஆகியவற்றிற்காக கீழ்ப்படியாமல், அவர் நம் பிதா, நம்மை படைத்தவர், அவர் தான் நமக்கு எல்லாம் என்ற பாசத்துடன் கீழ்ப்படிகின்றோமா என்று சிந்தித்துப் பார்ப்போம். நாம் மற்றவர்களிடம், அன்பினாலே, தெய்வ பயத்துடன் கீழ்ப்படிகின்றவர்களாக இருந்து (1 பேதுரு 5:5), நம்மைப் போல பிறரையும் நேசிக்கின்றவர்களாக இருப்போம்.

✝

---

## ஜாக்கிரதையாகயிருங்கள்

- *உங்கள் எண்ணங்களை குறித்து ஜாக்கிரதையாக இருங்கள்*
  *ஏனென்றால், அவைகள் தான் வார்த்தைகளாகின்றன*
- *உங்கள் வார்த்தைகளை குறித்து ஜாக்கிரதையாக இருங்கள்*
  *ஏனென்றால், அவைகள் தான் செயல்களாகின்றன*
- *செயல்களை குறித்து ஜாக்கிரதையா இருங்கள்*
  *ஏனென்றால், அவைகள் தான் பழக்கங்களாகின்றன*
- *உங்கள் பழக்கவழக்கங்களை குறித்து ஜாக்கிரதையாக இருங்கள்*
  *ஏனென்றால், அவைகள் தான் உங்கள் குணாதிசயங்கள் ஆனுன்றன.*
- *உங்கள் குணாதிசயங்களை குறித்து ஜாக்கிரதையாக இருங்கள்.*
  *ஏனென்றால், அவைகள் தான்-உங்கள் நித்தியத்தை தீர்மானிக்கின்றன.*

# விசுவாசத்தின் கதவு

# *The Door of Faith*

*Bro. B. Arjunan*

உலகத்தில் உள்ள அனைவரையும் தேவன் இரட்சிக்கும்படியாக திட்டமிட்டுள்ளார். ஆகையால், விசுவாசத்தின் கதவு இப்பொழுது திறக்கப்பட்டுள்ளது. **எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்** என பேதுரு தம்முடைய பிரசங்க வாக்கியத்தில் குறிப்பிட்டுள்ளார் (அப்.10:35). குறிப்பாக, யூதர்கள் தங்களுக்கு மட்டுமே தேவனுடைய இரட்சிப்பு இருப்பதாக எண்ணிக் கொண்டிருந்தனர்.

புறஜாதிகளும் இரட்சிக்கப்படும்படியாக தேவன் திட்டம் கொண்டார். உலகத்தில் எவர்கள் அவருக்குப் பயந்து நீதியைச் செய்கிறார்களோ அப்படிப்பட்டவர்களை கர்த்தர் நேசிக்கிறார். அவர்களுக்கு தம்முடைய வழியைப் போதிக்கிறார். ஆகையால், சத்தியவான் எவனும் அவருடைய சத்தம் கேட்கிறான். '**பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்**' என்று அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடுகிறார் (1யோவா.4:14). ஆம், உலகத்தை இரட்சிக்கும்படியாக தேவன் தம்முடைய குமாரனை தெரிந்து கொண்டார். பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன் இந்தக் கடைசி நாட்களில் தம்முடைய குமாரன் மூலமாக திருவுளம்பற்றினார். 'உலகத்தை ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்' (யோவா.3:17). இயேசுவின் பிறப்பு உலகத்திற்கு கிடைத்த நற்செய்தியாக இருந்தது. ஏனெனில் அவர் மூலமாக உலகத்தை இரட்சிக்க தேவன் அவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தார். இயேசு வராமலிருந்தால் உலகத்திற்கு மீட்பு என்பதில்லை. அவராலே உலகம் இரட்சிப்படுகிறது என காண்கிறோம்.

இயேசுவானவர் யூதா கோத்திரத்தில் தோன்றினார் என்பது பிரசித்தமாயிருக்கிறது. ஆனால், அந்த யூதர்கள் இயேசுவின் போதனைகளை நிராகரித்தனர். பேதுரு தனது முதல் பிரசங்கத்தில் குறிப்பிடும்போது; 'ஆகையால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்' (அப்.2:36). எந்த கோத்திரத்தில் இயேசுவானவர் தோன்றினாரோ அந்தக் கோத்திரத்தாரே இயேசுவை சிலுவையில் அறைந்து கொலைசெய்ய அதிக

காரணமாயிருந்தார்கள். இந்த யூதர்களுக்கு ஆண்டவருடைய போதனைகள் முரண்பாடாகத் தோன்றியது. அநேக பழைய ஏற்பாட்டு சம்பவங்களையும் ஆண்டவர் தம்முடைய போதனைகள் மூலமாக எடுத்துரைத்தார். மேலும், தான் தேவனிடத்தில் வந்தவர் என்பதை அவர்களுக்கு நிரூபிக்க அநேக அடையாளங்களையும், அற்புதங் களையும் செய்தார். அவர்களோ அவரை புறம்பாக்கிப் போட்டார்கள். இன்றைக்குங்கூட யூதர்கள் ஆலய வழிபாடுகளை செய்துச் நியாயப் பிரமாணத்தின்படி வாழவும், மோசேயின் கட்டளைகளைக் கைக் கொள்ளவும் பழைய பிரமாணத்தின்படி ஜீவிக்கவுமே விரும்புகின்றனர். மேலும், எருசலேமைக் குறித்து கர்த்தர் சொல்லும்போது; 'எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று' என்கிறார் [லூக்.13:34]. அந்தப்படியாக அனுப்பப்பட்டவர்களை தாம் நேசித்த ஜனங்கள் புறம்பாக்கிப் போட்டார்கள். ஆண்டவர் தம்முடைய சீடர்களை அனுப்பும்போது கூட இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு போங்கள் என்று முதலாவது அவர்களிடத்தில் அனுப்பினார்.

பவுல், பர்னபா போன்றோர் அவர்கள் மத்தியில் பேசும்போது அநேகர் விசுவாசித்தனர். அப்படிப்பட்டவர்களுக்கு அவர்கள் சில புத்திமதியான வார்த்தைகளைக் கொடுத்தனர். 'ஜெபஆலத்தில் கூடின சபை கலைந்து போனபின்பு, யூதரிலும் யூதமார்க்கத்தமைந்த பக்தியுள்ளவர்களிலும், அநேகர் பவுலையும் பர்னபாவையும் பின்பற்றினார்கள். அவர்களுடனே இவர்கள்பேசி, தேவனுடைய கிருபையிலே நிலைகொண்டிருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொன்னார்கள். [அப்.13:43]. சிலர் பொறாமை கொண்டு எதிரிடையாக பேசினார்கள். எல்லா இடங்களிலும் பொறாமைப் படக்கூடிய ஜனங்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய நியமத்திற்கு எதிராக நின்றார்கள். 'அப்பொழுது பவுலும், பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்ல வேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்தியஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்' என்று சென்றுவிட்டார்கள் [அப்.13;46]. மேலும், 'யூதர்கள் பக்தியும் கனமுள்ள ஸ்திரீகளையும், பட்டணத்து முதலாளிகளையும் எடுத்துவிட்டு, பவுலையும் பர்னபாவையும் துன்பப்படுத்தும்படி செய்து, தங்கள் எல்லைகளுக்குப் புறம்பாக அவர்களைத் துரத்திவிட்டார்கள்' [அப்.13;50]. ஆதி முதலாக தேவன் அவர்களைத் தெரிந்துகொண்டு ஆசீர்வதித்து வந்தார். அவர்களோ அதற்கு அபாத்திரமாக போனார்கள். அப்போஸ்தலர்களும் முதலாவது அவர்களுக்கே சுவிசேஷத்தை

அறிவிக்கும்படியாக சென்றார்கள். அவர்களோ அந்த சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல், அப்போஸ்தலர்களை துன்பப்படுத்தவும், தங்களுடைய எல்லைகளை விட்டுப்போகும்படியாகவும் செய்தார்கள். அப்போஸ்தலர்களோ ஏற்றுக்கொள்ளாத இடங்களில் உங்கள் கால்களில் படிந்த தூஷியையும் உதறிப் போடுங்கள் என்று ஆண்டவர் சொன்னபடி அந்த பட்டணங்களைவிட்டு புறஜாதியார் நாடுகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கும்படியாகக் கடந்து சென்றார்கள்.

புறஜாதிகள் கர்த்தருடைய வசனத்தை கேட்பதில் மிகவும் தீவிரமாக இருந்தார்கள். அப்போஸ்தலர்கள் யூதருடைய ஜெபஆலயத்திலிருந்து புறப்படுகையில், அடுத்த ஓய்வுநாளிலே இந்த வசனங்களைத் தங்களுக்குச் சொல்லவேண்டும் என்று புறஜாதியார் வேண்டிக் கொண்டார்கள்' (அப்.13:42). அப்போஸ்தலர்கள் போதித்தது யூதர்களுடைய ஜெபஆலயத்தில் அதை வாஞ்சையோடு கேட்டவர்கள் புறஜாதிகள். அப்பொழுது விசுவாசத்தின் கதவு திறக்கப்பட்டுள்ளதை அறிகிறோம். இந்த சந்தோஷத்தை அப்போஸ்தலர்கள் மூப்பர்களுக்கும் சபையாருக்கும் தெரியப்படுத்தினார்கள். 'அவர்கள் அங்கே சேர்ந்தபொழுது சபையைக் கூடிவரச் செய்து, தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளையும், அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்ததையும் அறிவித்து, அங்கே சீஷருடனேகூட அநேகநாள் சஞ்சரித்தார்கள்' என அப்.14:27,28 வசனங்களில் படிக்கிறோம். முதல் நூற்றாண்டு காலத்தில் புறஜாதிகளுக்கும் விசுவாசத்தின் கதவு திறக்கப்பட்டதைக் குறித்து அப்போஸ்தலரும், சபையாரும் மிகவும் சந்தோஷப்பட்டு புறஜாதி நாடுகளுக்கு தொடர்ந்து சென்று சுவிசேஷத்தை சொல்லுவதில் தீவிரமாக இருந்து செயல்பட்டனர். ஆகையினாலே, நம்மைப்போன்ற புறஜாதிநாடுகளும் கர்த்தரையும் அவருடைய வல்லமையுள்ள வசனங்களையும் அறிந்துகொண்டது. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டுமென தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய விருப்பமில்லை. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டுமென தேவன் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் என காண்கிறோம்.

கொர்நேலியு வீட்டாரின் இரட்சிப்பு விஷயத்தில் பேதுருவுக்கு சில காரியங்கள் உணர்த்தப்பட்டது. 'வானம் திறந்திருக்கிறதாகவும் நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும், அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டு மிருகங்களும், ஊரும் பிராணிகளும் இருக்கிறதாகவும் கண்டான்.

அல்லாமலும்; பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று. அதற்குப் பேதுரு: அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான். அப்பொழுது; தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரம் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. மூன்றாந்தரம் அப்படியே உண்டாயிற்று. பின்பு அந்தக்கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது' (அப்.10:11-16).

இந்த தரிசனத்தின்படி பேதுரு உணர்த்தப்பட்டு கொர்நேலியுவின் வீட்டாருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்படியாக அனுப்பப்பட்டான். கொர்நேலியுவின் வீட்டில் கூடியிருந்தவர்களை பேதுரு நோக்கி: 'அந்நிய ஜாதியானோடே கலந்து அவனிடத்தில் போக்குவரவாயிருப்பது யூதனானவனுக்கு விலக்கப்பட்டிருக்கிறதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; அப்படியிருந்தும் எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார் என்றும் சொன்னான். மேலும்,கொர்நேலியுவே, உன் ஜெபம் கேட்கப்பட்டது, உன் தானதருமங்கள் தேவசந்நிதியில் நினைத்தருளப்பட்டது. யோப்பா பட்டணத்துக்கு ஆள் அனுப்பி, பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை வரவழைப்பாயாக, அவன் கடலோரத்திலே தோல்பதனிடுகிறவனாகிய சீமோனுடைய வீட்டிலே தங்கியிருக்கிறான்; அவன் வந்து உன்னிடத்தில் பேசுவான் என்றார். 'அந்தப்படியே நான் உடனே உம்மிடத்திற்கு ஆள் அனுப்பி னேன்; நீர் வந்தது நல்ல காரியம்; தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவசமூகத்தில் கூடியிருக்கிறோம் என்றான். அங்கே பேதுருவின் பிரசங்கத்தை கேட்டு தங்களைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்தார்கள். அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான் எனக் காண்கிறோம்.

இச்செய்தியை வாசிக்கும் அன்பு வாசகரே, நீ கர்த்தராகிய இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் அறிந்துள்ளாயா? அவர் உனக்காக சிலுவையில் மரித்தார். அவருடைய மரணத்தினாலே நாம் பாவமன்னிப்பைப் பெறுகிறோம். உலகத்தில் உள்ள யாவரையும் தேவன் இரட்சிக்கும்படியாக தம்முடைய குமாரனை சிலுவையில் மரிக்கும் படியாக ஒப்புக்கொடுத்தார். புறஜாதிகளுக்கும் விசுவாசத்தின் கதவு இப்பொழுது திறக்கப்பட்டுள்ளது. இதை நீ விசுவாசித்தால் கொர்நேலியு வீட்டாரைப்போல நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். இன்றே இரட்சிக்கப்பட உங்களை சுவிசேஷத்திற்கு ஒப்புக்கொடுங்கள்.

# தேவனுடைய உடைந்த இருதயம்
# God's broken heart
*Terry Wheeler*

ஓசியா புத்தகம் பின்வரும் கண்ணோட்டத்தில் பார்த்தால் உண்மையாகவே தனித்துவம் வாய்ந்த ஒரு புத்தகமாக இருக்கிறது: இங்கே தேவன் ஓசியா தீர்க்கதரிசியை அன்பு, வேதனை, கைவிடப்பட்ட நிலை, மீட்டமைத்தல் போன்றவைகளை உள்ளடக்கிய பயணத்தில் உட்படுத்துகிறார். ஓசியா தீர்க்கதரிசனம் உரைப்பதற்கு முன்பாக , பதிவு செய்யப்பட்ருக்கிற வசனங்களின்படி ஒரு  சோர ஸ்திரீயை விவாகம் பண்ணும்படி கர்த்தரால் கட்டளையிடப்பட்டார்.

எதிர்பார்க்கப்பட்டபடி, ஓசியா விவாகம் பண்ணின பெண் அவருக்கு உண்மை இல்லாதவளாகளாக இருந்தபடியால், துரோகத்தை ஓசியாவால் சகித்துக் கொள்ள வேண்டியதாய் இருந்தது. கடைசியாக, அந்த ஸ்திரீ ஓசியாவை விட்டுச் சென்றாள். பின்பு, அவள் சிலரால் கடத்தப்பட்டு அடிமையாக விற்கப்பட்டாள். பின்பு ஓசியா அந்த ஸ்திரீயைக் கண்டுபிடித்து வெள்ளிக்காசுகள் மற்றும் வாற்கோதுமையை கொண்டு அவளை மீட்டார். மேலும், ஓசியா அவளை நோக்கி: நீ வேசித்தனம் பண்ணாமலும், ஒருவனையும் சேராமலும் அநேக நாள் எனக்காகக் காத்திரு, உனக்காக நானும் காத்திருப்பேன் என்றார் (ஓசியா 3:3).



தேவன் ஓசியாவின் சோர்ந்து போன ,உடைந்து போன இருதயத்தைக் கொண்டு உண்மை இல்லாத இஸ்ரவேலுக்கு தீர்க்க தரிசனம் உரைத்தார். ஓசியாவின் துக்கம் நிறைந்த குரலை அதை வாசிப்பவர்களால் உணர முடியும். அவள் பாகால்களுக்குத் தூபங் காட்டி, தன் நெற்றிப்பட்டங் களினாலும், ஆபரணங்களினாலும்

தன்னைச் சிங்காரித்துக் கொண்டு, தன் நேசரைப் பின்தொடர்ந்து, என்னை மறந்துபோன நாட்களினிமித்தம் அவளை விசாரிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்' (ஓசியா 2:13). 'எப்பிராயீமே, உனக்கு என்ன செய்வேன்? யூதாவே, உனக்கு என்ன செய்வேன்? உங்கள் பக்தி காலையில் காணும் மேகத்தைப்போலவும், விடியற்காலையில் தோன்றும் பனியைப் போலவும் ஒழிந்து போகிறது' (ஓசியா 6:4). 'எப்பிராயீமே, நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்?

தேவனை உடைந்த இருதயத்தோடு இப்படிப் பேச வைப்பது எவ்வளவு சோகமானது, எவ்வளவு பயங்கரமானது என்பதை எண்ணிப் பாருங்கள். தேவன் நம்மில் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார் என்பது எத்தனை ஆச்சரியமானது! ✝

## நான்

- பவுலைப் போல பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி இலக்கை நோக்கித் தொடருவேன் (பிலி. 3:13)
- தாவீதைப் போல எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுப்பேன் (சங்கீதம் 121:1)
- ஆபிரகாமைப் போல என் தேவனை முழுமையாக நம்புவேன் (யாக்கோபு 2:23)
- ஏனோக்கைப் போல தேவனோடு தினமும் சஞ்சரிப்பேன் (ஆதியாகமம் 5:22)
- யோசபாத்தைப் போல தேவனைத் தேட என் இருதயத்தை நேராக்குவேன் (II நாளா. 19:2,3)
- தானியேலைப் போல எப்போதும் தேவனோடு உறவாடுவேன் (தானியேல் 6:10)

# தேவன் அறிந்திருக்கிறார்
## God is Aware
*Cliff Holmes*

**நா**ம் எங்கே இருக்கிறோம், என்ன செய்து கொண்டிருக்கிறோம், என்ன நினைக்கிறோம் என்பவைகளைப் பற்றி எல்லாம் எப்போதுமே தேவன் அறிந்திருக்கிறார். தேவன் எப்போதுமே நம்மோடு இருக்கிறார். ‘அவருடைய கண்கள் மனுஷருடைய வழிகளை நோக்கியிருக்கிறது. அவர்களுடைய நடைகளையெல்லாம் அவர் பார்க்கிறார்

(யோபு 34:21). அவர் நம் எண்ணங்களையும், வார்த்தைகளையும் அறிந்திருக்கிறார்.‘என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்‘(சங்கீதம் 139:4). அவருடைய பார்வைக்கு மறைவானது ஒன்றும் இல்லை. ‘அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமும், வெளியரங்கமுமாயிருக்கிறது அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்‘(எபிரேயர் 4:13).



**தேவன் சகலத்தையும் அறிந்திருக்கிறார்.**

‘நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்‘(1 யோவான் 3:20). நம்முடைய சோதனைகள், கவலைகள், உடைந்த இருதயங்கள், வியாதிகள் போன்ற எல்லா வற்றையும் தேவன் அறிந்திருக்கிறார்.

இத்தகைய சர்வ ஞானியிடம் இருந்து ஆறுதலைப் பெறுவது எவ்வளவு ஆச்சரியமான காரியம்! அதனால் தான் பரிசுத்த வேதாகமம் அத்தகைய தேவனைப் பற்றி இவ்விதமாகச் சொல்கிறது. ‘ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப் படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! (ரோமர் 11:33). அவருடைய ஜாக்கிரதையான கண்களின் கீழ் பரிசுத்தவான்கள் பாதுகாப்பாக வாசம் செய்ய முடியும். தேவனுடைய கரங்கள் தான் இந்த பிரபஞ்சத்தை பிடித்துக் கொண்டு அவருடைய பிள்ளைகளை நன்றாய் பாதுகாக்கிறது.

# தேவன் அப்போஸ்தலர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பரிசுத்த ஆவியானவர்

## The Holy spirit promised to the Apostles

*Raymond Elliott*

ஒரு வேதவாக்கியப் பகுதியை புரிந்து கொள்ளும் முயற்சியில் இரண்டு கேள்விகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். ஒன்று பேசுகிறவர், இரண்டாவது யாருக்குப் பேசப்படுகிறது என்பது. இது வேத வாக்கியங்களை விரிவாக விளக்க வழி வகுக்கும். நோவாவைப் பேழையை கட்ட கட்டளையிட்டது தேவன் தான் என்பதை புரிந்து கொள்வதில் நமக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. (ஆதியாகமம் 6). ஆபிரகாமிடம் அவன் குமாரனாகிய ஈசாக்கை பலிபீடத்தில் பலியாக செலுத்தும்படி சொன்னது தேவன் தான் (ஆதியாகமம்22). அதைப்போல் அந்த பணக்கார வாலிபனிடம் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று ஏழைகளுக்கு கொடுக்கும்படியாக சொன்னது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தான்( மாற்கு 10). இந்த உண்மை பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு பல்வேறு பட்ட சபைகளுக்கும் தனிநபர்களுக்கும் நிருபங்களை எழுதிய தேவ தாசர்களுக்கும் பொருந்தும். பரிசுத்த ஆவியானவர் சம்மந்தமாக புதிய ஏற்பாட்டில் அதிகமாக தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிற வசன பகுதிகளில் ஒன்று (யோவான் 14 –16) அதிகாரங்களில் இடம் பெற்றுள்ளது.

(யோவான் 14 –16) அதிகாரங்களின் பின்னணி இயேசு கிறிஸ்து தம்முடைய 12 அப்போஸ்தலர்களோடு பஸ்காவைப் புசித்த அந்த நிகழ்வு தான் (மத்தேயு 26:20; மாற்கு 14:17; லூக்கா 22:14). எனவே, இங்கே பேசுகிறவர் இயேசு கிறிஸ்து, பேச்சை கேட்கிறவர்கள் அவருடைய 12 அப்போஸ்தலர்கள். இயேசு அவர்களிடம் தாம் உலகை விட்டுக் கடந்து போன பிறகு சத்தியத்தை பிரசங்கிக்க அவர்களை எல்லா விதத்திலும் வழிநடத்தத் தேற்றரவாளன் ஒருவர் அனுப்பப்படுவார் என்பதைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார். பல்வேறுபட்ட மார்க்கப் பிரிவினை கூட்டத்தின் தலைவர்கள் இயேசு பரிசுத்த ஆவியானவரைப் பற்றி அப்போஸ்தலர்களிடம் சொன்னவைகள் எல்லா விசுவாசிகளுக்கும் பொருந்தும் என்று தவறாக போதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

உதாரணமாக, வருடம் தோறும் எல்லா நாளும் அருமையான ஆவிக்குரிய கருத்துக்களை வெளிப்படுத்தும் பத்திரிகை ஒன்றில் ஒரு ஆசிரியர் இவ்விதமாக ஆணித்தரமாக எழுதியிருந்தார். இயேசு பரமேறி பிதாவினிடத்தில் திரும்பிப்போனபோது, பரிசுத்த ஆவியை நம்மை எல்லாவற்றுக்குள் வழிநடத்தவும், நம்மைத் தேற்றவும் எல்லா காரியங்களையும் நம் நினைவுக்கு கொண்டு வரவும் அனுப்பினார் என்று

எழுதினார். அது மாத்திரமல்லாமல், ஆவிக்குரிய பயணத்தில் நமக்கு விசேஷித்த வல்லமை உண்டென்றும், நாம் ஒரு பெரிய மலையை எதிர்கொண்டால் கூட பயப்படாமலும், பதறாமலும் இருந்து தேவன் நமக்கு தந்திருக்கிற வல்லமையை பயன்படுத்துங்கள் என்று எழுதினார். அவர் அதோடு நின்று விடாமல், அத்தகைய சூழ்நிலையில் என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு என்று சொல்லுங்கள் என்றும் எழுதியிருக்கிறார்.

மேற்சொல்லப்பட்ட வார்த்தைகளை எழுதின அந்த மார்க்கப் பிரிவினை கூட்ட கிறிஸ்தவரின் நேர்மையையும், உண்மையையும் நாம் ஒத்துக்கொண்டாலும் கூட யோவான்14:26 ல் இடம்பெற்றுள்ள வார்த்தைகளை அவர் தவறாகப் புரிந்து கொண்டு அதைத் தவறாக பயன்படுத்தியிருக்கிறார் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். ‘என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்‘[யோவான் 14:26]. மேலும், யோவான்16:13 ல் இவ்விதமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்‘ [யோவான் 16:13]. ஆகவே, பரிசுத்த ஆவியானவர் கீழ்க்காணும் காரியங்களில் அப்போஸ்தலர்களுக்கு உதவி செய்வார்.

1 பரிசுத்த ஆவியானவர் எல்லாவற்றையும் போதிப்பார் 2 அப்போஸ்தலர்கள் எவைகள் அறிய வேண்டும் என்று இயேசு விரும்பினாரோ அவைகளை பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு நினைப்பூட்டுவார் 3 சகல சத்தியத்திற்குள்ளும் அவர்களை நடத்துவார் 4 மேலும், பரிசுத்த ஆவியானவர் வரப்போகிற காரியங்களை அப்போஸ்தலர்களுக்கு அறிவிப்பார்.

லூக்கா 24:49 ன் படி இயேசு பரமேறுவதற்கு முன்பாக இந்த வார்த்தைகளை அப்போஸ்தலர்களிடம் பேசினார்‘என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்‘ [லூக்கா 24:49]. அப்போஸ்தலர் 1:4 ல் இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர்களிடம் இவ்விதமாகச் சொன்னார். ‘அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி; யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான். நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் [அப்போஸ்தலர் 1:4].. மேலும், இயேசு தொடர்ந்து இவ்விதமாகச் சொல்லுகிறார் ✝

(அப்போஸ்தலர்1:8). அப்போஸ்தலர் 2:1–4 வசனங்களில் கர்த்தர் அப்போஸ்தலர்களுக்கு வாக்குத்தத்தம் செய்தபடியே அந்த 12 அப்போஸ்தலர்களும் பெந்தெகொஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட காரியங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

1 கொரிந்தியர் 2 :10 ல் அப்போஸ்தலனாகிய பவுல், இவ்விதமாக எழுதினார்' நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்'. இங்கே பவுல் தனக்கும் மற்ற அப்போஸ்தலர்களுக்கும் வெளிப்படுத்தப்பட்டவைகள் எல்லாம் ஆவினாலே வெளிப்படுத்தப்பட்டது என்று சொன்னார். மேலும், தொடர்ந்து பவுல் இவ்விதமாக எழுதினார். நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம். (1 கொரிந்தியர் 2:12,13).

பவுல் தான் கிறிஸ்துவின் ரகசியம் சம்மந்தமாக அறிவிக்கின்ற காரியங்களை கர்த்தரிடமிருந்து வெளிப்பாடு மூலமாக பெற்றுக் கொண்டதாகச் சொல்கிறார் (எபேசியர் 3:3–6). மேலும் பவுல் தான் பிரசங்கித்த சுவிசேஷம் சம்மந்தமாக (கலாத்தியர் 1:11–12) வசனங்களில் எழுதியிருக்கிறார். 11 மேலும், சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை. மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார். (கலாத்தியர் 1:11,12). பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்களும், புதிய ஏற்பாட்டு வேத வாக்கியங்களும் தேவ ஆவியினால் ஏவப்பட்டவைகள்தான்( 2 தீமோத்தேயு 3:16,17).

சபை ஆரம்பிக்கப்பட்ட நாட்களில் தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தைகள் சில தேவ தாசர்களிடம் மாத்திரம் தான் இருந்தது. பிற்பாடு, தேவ ஆவியினாலே ஏவப்பட்ட மனிதர்கள் பல்வேறுப்பட்ட நிருபங்களை எழுதிய போது ஏவப்பட்ட வார்த்தைகள் எல்லா மனிதர்களிடத்திலும் இருந்தன. எழுத்து வடிவத்திலும் இருந்தன. கடைசியாக, நிறைவானது வந்து குறைவானது ஒழிந்து போகும் காலம் வந்தது (1 கொரிந்தியர் 13:9,10). அதாவது, மனிதனுக்காக வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தம் இப்போது முழுமையாக இருக்கிறபடியால், அது மனிதனுக்குள்

பாதியாக, இந்நாட்களில் இல்லை. கடைசியாக, யூதா தன்னுடைய சிறிய நிருபத்தில் இவ்விதமாக எழுதுகிறார். 'பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது' (யூதா 3). ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசம் சதாகாலத்திற்கும் கொடுக்கப்பட்டி ருக்கிறபடியால், இன்றைய நாட்களிலே தேவனிடமிருந்து கூடுதலான வெளிப்பாடுகள் எதுவும் நமக்கு அவசியமில்லை. நம் இரட்சிப்புக்குத் தேவையான எல்லா சத்தியத்தையும் வெளிப்படுத்தும் பரிசுத்த ஆவியானவரின் பணி நிறைவேறிவிட்டது.

✝

## எலும்புகளில் அக்னி


- ✿ எரேமியா ஒருபோதும் தேவனுடைய அழைப்பை சந்தேகப்படவில்லை.
- ✿ எரேமியாவுக்கு தேவனால் தன் வாயில் அக்கினி வைக்கப்பட்டது தெரிந்திருந்தது.
- ✿ எரேமியா பிரச்சனைகளுக்கு மத்தியிலும் தன்னை ஊழியத்தில் அர்ப்பணித்துக் கொண்டான்.
- ✿ எரேமியாவுக்கு தன் சத்துருக்களால் வரும் பிரச்சனை களைவிட தேவன் பெரியவர் என்பது தெரிந்திருந்தது.
- ✿ எரேமியா தன் சோர்வுகளையும் தாண்டி தேவன் மீது விசுவாசம் கொண்டான்.

**தேவனுடைய வார்த்தை**

# எது சிலுவையின் மேல் ஆணியடிக்கப்பட்டது?

# What was nailed to the cross?

*Larry murdock*



**கொ**லோசெயர் 2:14 யை எப்போதாவது வாசித்திருக்கிறீர்களா? அதில் நாம் இவ்விதமாக வாசிக்க முடியும்.' நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து,'சங்கீதம் 19:7 ன் படி 'கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ,ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. அப்படி இருக்கும்போது தேவனுடைய பிரமாணம் அல்லது கட்டளை புதிய ஏற்பாட்டில் ஏன் சிலுவையின் மேல் ஆணியடிக்கப்பட்டதாக எழுதப்பட்டிருக்கிறது? எது சிலுவையின் மேல் ஆணியடிக்கப்பட்டது. தேவனுடைய குறைவற்ற பிரமாணமா சிலுவையின் மேல் ஆணியடிக்கப்பட்டது?

ஆத்துமாவை உயிர்ப்பிக்கிற தேவனுடைய வேதம் அல்லது பிரமாணம் மோசேயால் கொடுக்கப்பட்டது, அது பழைய ஏற்பாட்டில் சாட்சியாக இருந்தது. அப்போஸ்தலனாகிய பவுல் நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது என்று சொன்னார். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில்

வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே' (கலாத்தியர் 3:24,25). புதிய ஏற்பாட்டின் நாட்களில் உபாத்தி என்பவர் எஜமானுடைய பிள்ளைகளைப் பள்ளிக்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்லும் வேலையாளாக இருந்திருக் கிறார். இன்றைய நாட்களில் நாம் அவர்களை வாகன ஓட்டுநர்களாக அழைக்கிறோம். எனவே, நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்து வினிடத்தில் கொண்டு செல்லும் ஒரு வாகன ஓட்டுனரை போலத்தான் இருந்திருக்கிறது. பவுல் தீமோத்தேயிடம் பழைய ஏற்பாட்டு பரிசுத்த வேத எழுத்துக்களை தீமோத்தேயு சிறுவயது முதல் அறிந்தவன் என்று குறிப்பிடுவதை நாம் வாசிக்க முடியும். கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத் தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவ னென்றும் உனக்குத் தெரியும்'2 தீமோத்தேயு 3:15). எப்படி மாணவர்கள் இரண்டாம் வகுப்புக்கு செல்வதற்கு முன்பாக முதலாம் வகுப்புக்கு செல்ல வேண்டுமோ அல்லது பல்கலைக்கழகத்திற்கு செல்வதற்கு முன்பாக மேல்நிலைப்பள்ளி படிப்பை முடிக்க வேண்டுமோ அதேபோலத்தான் ஜனங்கள் மாபெரும் போதகராகிய கிறிஸ்துவினிடத்தில் வருவதற்கு முன்பாக பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்களை அறிந்திருக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் இன்று தேவைப்படும் தேவனுடைய பிரமாணத்தி லிருந்து எதைக் கற்றுக் கொள்கிறார்கள்? வேதாக நியாயப் பிரமாணத்திற்கு ஏற்ற கிரியை என்று எதை அழைக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். முதலாவது, பவுல் நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியை பற்றி என்ன சொல்லுகிறார் என்று கவனிப்போம். 'அன்றியும் நியாயப்பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப் பிரமாணத்தின்படி செய்கிற போது, நியாயப்பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள். 'அவர் களுடைய மனச்சாட்சியும் கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங் களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள். என் சுவிசேஷத்தின் படியே, தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் நாளிலே இது விளங்கும் '(ரோமர் 2:14–16).

எனவே, இங்கே பவுல் தேவனுடைய பிரமாணத்தைப் பெற்றிராத வர்கள் நியாயப்பிரமாணத்துக்கு ஏற்ற கிரியைகளைச் செய்து வந்தார்கள் என்று உறுதியாகச் சொல்லுகிறார். நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை என்றால் என்ன? நியாயப்பிரமாணத்துக்கு ஏற்ற கிரியை என்பது அந்தப் பிரமாணம் ஏற்படுத்தும் ஒரு வகையான நடத்தை விதி ஆகும்.

புறஜாதிகள் இஸ்ரவேலர்களுடைய பலி முறைமையையோ, லேவி கோத்திரத்தின் ஆசாரியர்களையோ பின்பற்றவில்லை. அதுபோல், அவர்கள் ஓய்வு நாளை ஆசரிக்கவும் இல்லை, யூத பண்டிகைகளைக் கொண்டாடவும் இல்லை. அவர்களுக்கு என்று வேறு பலி முறைமையும் ஆசாரித்துவ முறைமையும் இருந்தது. எனவே, நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியை என்பது ரோமர்2:15 ன் படி அவர்களுடைய மனச்சாட்சியும் கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லை யென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப் பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக் கிறதென்று காண்பிக்கிறார்கள் என்று பார்க்கிறோம். அப்படியென்றால், நமக்கு விரோதமாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தை குலைத்து அதை சிலுவையின் மேல் ஆணி அடித்து என்ற வசனப் பகுதியின் பொருள் என்ன? இந்த வசனம் கொலோசெயர் 2:14 ல் இடம் பெற்றுள்ளது. நம்முடைய பாடம் கொலோசெயர் 2 ஆம் அதிகாரம் ஒன்றாம் வசனத்தில் இருந்தே தொடங்குகிறது. இருந்தபோதிலும், நாம் எட்டாம் வசனத்திலிருந்து கவனம் செலுத்தலாம். லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கை யாயிருங்கள். அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும், உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல' (கொலோசெயர் 2:8). இங்கே மனிதர்களுடைய பாரம்பரியம் தேவனுடைய பிரமாணத்தோடு போட்டி போடுகிறது.

சிலர் பாரம்பரியத்தை ஒருபோதும் மறந்து விடக்கூடாது அதையும் பிடித்துக் கொள்ள வேண்டும், தேவனுடைய வார்த்தையையும் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் வைத்துக் கொண்டு தள்ளாடுகிறார்கள். மேலும், இங்கே உலக வழிபாடுகள் என்பது உலகப் பிரகாரமான சிந்தையைத்தான் குறிக்கிறது. இது மனித இனத்தின் மிகச்சிறந்த எண்ணங்களை உள்ளடக்கியதாகும். ஆனாலும், இவைகள் இந்த உலகத்துக்குரியவைகளாய் இருக்கின்றன.. கிறிஸ்துவின் கட்டளைகள், தேவனுடைய பிரமாணங்கள் போன்றவை களெல்லாம் இந்த உலகில் மனிதர்களுடைய இதயங்களில் தேவனுடைய ஆளுகை சம்மந்தமானவைகளாகும். மேலும், இவைகள் எல்லாம் பரத்துக்குரியவைகளாகவும் மற்றும் தெய்வீக பாரம் பரியங்களாகும். எனவே தான், இங்கே அப்போஸ்தலன் லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று சொல்கிறார்.

மேலும், பவுல் தொடர்ந்து ஜனங்களுடைய இருதயங்களில் கிறிஸ்துவின் பிரமாணம் மனிதர்களுடைய சிந்தனைகளை விட மிகச் சிறந்தது என்று விளக்குகிறார். ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும், சகல துரைத்தனங்களுக்கும், அதிகாரத்துக்கும் தலைவரா யிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள். [கொலோசெயர் 2:9,10]. நண்பர்களே, மனித பாரம்பரியம் மற்றும் மனித தத்துவ ஞானத்தின் உண்மையான ஆதாரம் சாத்தான் மற்றும் அவனுடைய சக்தி வாய்ந்த முகவர்களும் தான். அது சரிதான், இவைகள் எல்லாம் அதிகாரங்களாகவும், வானமண்டலங்களில் உள்ள பொல்லாத ஆவிகளாகவும் அழைக்கப்படுகின்றன. அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியர் ஆறாம் அதிகாரத்தில் இவைகளுக்கு எதிராக கிறிஸ்தவர் களுக்கு போராட்டம் உண்டு என்று சொல்கிறார். '**ஏனெனில், மாம்சத் தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங் களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனை களோடும் நமக்குப் போராட்டம் உண்டு**'[எபேசியர் 6:12]. இவைகள் மனிதனுடைய பாரம்பரியங்களிலும், தத்துவ ஞானங்களிலும் இருக்கின்ற ஆவிக்குரிய சக்திகளாகும். இவைகள் தான் உங்களை நித்திய சுதந்திரத்திலிருந்து வஞ்சிக்க முயற்சிக்கின்றன.

ஆகவே, 'லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும், உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றின தல்ல. ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும், சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரண முள்ளவர்களாயிருக்கிறீர்கள். அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்த சேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்து விட்ட தினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள். ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம் பண்ணப் பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதன மில்லாமையினாலேயும் மரித்தவர் களாயிருந்த உங்களையும் அவரோடே உயிர்ப்பித்து, அக்கிரமங் களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து, நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து, துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து

கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையில் வெற்றி சிறந்தார்'(கொலோசெயர் 2:8–15).

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஏற்கனவே அவருடைய போட்டியாளர்களை தோற்கடித்து விட்டார். நீங்கள் அவரிடத்தில் உண்மை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக அவருடன் போட்டியிட்ட எல்லோரையும் அவர் தோற்கடித்தார். மேலும், அவர் துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் பலம் இழக்கச் செய்தார். அவர்களுடைய ஆயுதங்கள் என்னவாயிருந்தன? இயேசு கிறிஸ்து தம்முடைய சத்துருக்களின் கைகளில் இருந்து பறித்த முக்கியமான ஆயுதம் மரணம் தான். **மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்.** (1 கொரிந்தியர் 15:55,56). தேவனுடைய பிரமாணம் மனந்திரும்பாத பாவிக்கு இரண்டாம் மரணம் அவசியமென்று சொல்லுகிறது. ஆம், இரண்டாம் மரணம்! இந்த மரணம் தான். தேவனுடைய பரதீசில் இருக்கிற ஜீவ விருட்சத்தில் இருந்து நம்மைப் பிரிக்கிறது. கிறிஸ்து சிலுவையில் மரித்த மரணம் தான் இது.

உங்களுக்கான தண்டனையையும், எனக்கான தண்டனையையும் இவ்வுலகில் இதுவரை வாழ்ந்த எல்லோருடைய தண்டனையையும் இயேசு கிறிஸ்து அந்தக் கோரக் குருசில் நீக்கிப் போட்டார். நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவனுடைய பழைய ஏற்பாட்டு ஜாதிகளுக்கு எதிராக இருந்த சடங்காச்சார விதிகளைத் தான் எடுத்து போட்டார். உண்மை யாகவே பழைய ஏற்பாட்டின் சடங்காச்சார விதிகள் புறஜாதிகளை கண்டித்தன. எனவே, கிறிஸ்து நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்தார். எனவே தான். பவுல் தொடர்ந்து இவ்விதமாகச் சொல்கிறார். 'ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வு நாட்களையுங் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. அவைகள் வருங்காரியங் களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது'(கொலோசெயர் 2:16,17)

தேவன் இஸ்ரவேலர்களுக்கு போஜனம், பானம், பண்டிகைகள் , மாதப்பிறப்பு, மற்றும் ஓய்வு நாட்களைக் குறித்து கட்டளைகள் நிழலாக இருந்தன. அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினதாகும். கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்த போது, நாம் நிழல்களைப் பார்ப்பதில்லை. மாறாக, நாம் கிறிஸ்துவின் நிஜத்தைப் பார்க்கிறோம். நாம் அவருடைய சீடர்களாக மாறி அவருடைய கட்டளைகளை கைக்கொள்கிறோம். கிறிஸ்துவின் கட்டளைகள் ஒருபோதும் மனித நடத்தைக்கான தேவனுடைய பிரமாணங்களின் மதிப்பையும், மகத்துவத்தையும் குறைக்காது. இந்த கிறிஸ்தவ காலத்தில், நம் ஆராதனை முறைமைகள் புதிய ஏற்பாட்டில் என்ன கட்டளைகள் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவைகளைப் பின்பற்றுகிறதாகத்தான் இருக்க வேண்டும். ✝

### இரட்சிப்பு

# நேர்மையான பெற்றோர்

# Honest parents

*Cecil may , Jr*

**ஓ**ர் நேர்மையுள்ள வாலிபன் கிறிஸ்துவை தரித்துக் கொள்ள கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்னும் சத்தியத்தை வேதாகமத்தில் கண்டான் (கலாத்தியர் 3:27). இருந்த போதிலும், அந்த வாலிபன் ஞானஸ்நானம் பெறத் தயங்கினான். அவன் தன் நேர்மையான பெற்றோரை நேசித்து அவர்களை கனப்படுத்தினான். அவர்களும் ஞானஸ்நானம் பெறவில்லை. எனவே, அவன் பெற்றோர்களை பரலோகம் அழைத்துச் செல்ல ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்பினான்.



இந்த வாலிபனுடைய பெற்றோர் கிராமத்தில் ஒரு கடை வைத்திருந்தார்கள். அப்பொழுது அவனுடைய ஆசிரியர் ஓர் ஆலோசனை கொடுத்தார். உன் பெற்றோர் நடத்தி வரும் கடையில் எடை இயந்திரம் பழுதாகி அது சரி செய்யப்படாமல் இருக்கிறது என்று வைத்துக் கொள். வாடிக்கையாளர்கள் வந்து ஒவ்வொருமுறை பொருள்கள் வாங்கும் போதும் அந்த எடை இயந்திரத்தில் வைத்தால் அது சரியான அளவை காட்டாது. எனவே, வாடிக்கையாளர்கள் வாங்கும் பொருள்களுக்கு என்ன விலை கொடுக்கிறார்களோ அதற்குத் தகுந்த பொருட்களை அவர்கள் எடுத்துச் செல்வதில்லை.

இப்படி நாட்கள் கடந்து செல்லும்போது ,அரசாங்கத்தின் எடை மற்றும் அளவுகளின் துறையில் இருந்து ஒருவர் வந்து அந்த எடை இயந்திரம் செயல்படாமல் இருந்ததை கண்டறிந்து கடை உரிமையாளர் களிடம் சொன்னால், அந்த இயந்திரத்தை அவர்கள் மாற்றுவார்கள் தானே? நீ இப்போது காண்கிற சத்தியத்தை அவர்களும் கண்டால் அதற்கு கீழ்ப்படிவார்கள் தானே? நீயும் சத்தியத்திற்கு கீழ்ப்படிய விரும்புவாய் தானே?

**இரட்சிப்பு**

## நம் கர்த்தருடைய எச்சரிக்கை

# Our Lord's warning

*Ron Boatwright*

எல்லாவற்றையும் அறிந்திருக்கிற இயேசு கிறிஸ்து நித்தியத்தில் பெரும்பாலான ஜனங்கள் இழக்கடிக்கப்படுவார்கள் என்று சொல்லி இருக்கிறார். மத்தேயு 7:13,14 வசனங்களில் அவர் இவ்விதமாகச் சொல்லுகிறார். **இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள், கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது, அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக் கிறவர்கள் சிலர் மத்தேயு 7:13,14). வேதாகமத்தின்படி பெரும்பாலான** மக்கள் இழக்கடிக்கப்படுவார்கள். நாம் இந்த எச்சரிப்பை லேசாக எடுத்துக் கொள்ளக் கூடாது. சிலர் தான் இரட்சிக்கப்படுவார்கள் என்று நம் கர்த்தர் சொன்னார்.

எப்படி சிலர் இரட்சிக்கப்படுவார்கள்? I பேதுரு 3:20 இவ்விதமாக சொல்லுகிறது. 'அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்த போது, கீழ்ப்படியாமற் போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்' நோவாவின் நாட்களில் இப்பூமியில் சுமார் 20 கோடி மக்கள் வாழ்ந்து இருக்கலாம் என்று குறைந்த பட்ச மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் அந்த 20 கோடி மக்களில் வெறும் 8 பேர் மாத்திரமே இரட்சிக்கப்பட்டார்கள். இது எவ்விதத்திலும் பொருந்தவில்லையே. ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லோரும் மனமந்திரும்ப வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார் என்று II பேதுரு 3:9 சொல்லுகிறது. அதேபோல் மத்தேயு 7:13,14 ல் நம் கர்த்தர் நித்திய ஜீவனை ஒரு சிலர் மாத்திரமே கண்டுபிடிப்பதாகச் சொல்கிறார். உலகில் உள்ள பெரும்பாலான மக்கள் அக்கினி ஒருபோதும் அணையாத நித்திய நரகத்தில் தான் தங்கள் நாட்களை கழிப்பார்கள். நரகம் எவ்வளவு பயங்கரமா இருக்கும் என்பதை மனித இனத்தால் புரிந்து கொள்ளவே முடியாது.

நித்தியத்திற்கு இரண்டு பாதைகள் தான் உண்டு . நாம் ஒவ்வொரு வரும் ஏதோ ஒரு பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். நாம் பரலோகத்தை தவறவிட்டால், என்றென்றும் தீப்பிடித்து எரிகிற நரகத்தில் தூக்கி எறியப்படுவோம். நரகத்தில் தூக்கி எறியப்படுகிற காரியத்தை பற்றி சோகமான ஒரு காரியம் என்னவென்றால், அப்படி நாம் தூக்கி எறியப்படாமல் அதை தவிர்த்து இருக்கலாம் என்பதுதான். நாம் நரகத்தை தவிர்ப்பதற்கு கர்த்தர் எத்தனையோ வழிகளை நமக்காகச் செய்திருந்தாலும் கூட, பெரும்பாலான மக்கள் இழுக்கடிக்கப்படுவார்கள் என்பது வேதனைக்குரிய ஓர் உண்மை. நாம் நரகம் போவதற்கு தேவன் ஒருபோதும் காரணம் அல்ல, அதற்கு நாமே காரணம். ஒருவர் நரகத்தில் தூக்கி எறியப்படுகிறார் என்றால் அவர் அதற்காக வேறு யாரையும் குற்றம் சாட்ட முடியாது. அவன் தன்னைத் தானே குற்றம் சாட்டிக் கொள்ள வேண்டியதுதான். நாம் நம் வாழ்க்கையின் எல்லா வகையிலும் லட்சியமாகிய பரலோகம் போவதற்கு ஆயத்தமாவோம்.

✝

---

## கிறிஸ்தவர்கள் எவைகளில் பெருக வேண்டும்?

- **விசுவாசத்தில்** பெருக வேண்டும்
  (II கொரிந்தியர் 8:7)

- **நம்பிக்கையில்** பெருக வேண்டும்
  (ரோமர் 15:13)

- **அன்பில்** பெருக வேண்டும்
  (பிலிப்பியர் 1:9)

- **நற்கிரியைகளில்** பெருக வேண்டும்
  (II கொரிந்தியர் 9:8)

- **கர்த்தருடைய கிரியைகளில்** பெருக வேண்டும்
  (I கொரிந்தியர் 15:58)

இரட்சிப்பு

# மனிதன் போய் சேருமிடம்

## Man's destiny

*Ernest S.underwood*

**ப**ல வருடங்களுக்கு முன்பாக, தொலைக்காட்சியில் விண்கலம் ஒன்று விண்வெளியில் தரையிறங்குவதை கண்டேன். தொலைக்காட்சி நிகழ்ச்சியின் இடைவேளையின் போது ஒரு பிரபலமான விளம்பரம் வந்தது. அது காலை சிற்றுண்டியின் போது குடிக்கும் ஒரு குளிர்பான விளம்பரமாயிருந்தது. அந்த விளம்பரத்தில் நடித்தவர் மனிதன் போய் சேரும் இடத்தைப் பற்றியும், அதை எப்படி அடைய முடியும் என்பது பற்றியும் சில நிமிடங்கள் பேசினார். மேலும், அந்த நபர் மனிதன் போய் சேருமிடம் நட்சத்திரங்களின் மத்தியில் இருக்கிறது என்றும் அங்கே மனிதன் விண்கலத்தின் மூலமாக போக முடியும் என்றும் சொன்னார்.

வேதாகமம் மனிதன் இறுதியாக போய் சேரும் இடம் பற்றிப் பேசுகிறது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனிதனுக்கு முன்பாக இரண்டு வழிகள் தான் உண்டு என்று சொல்கிறார். ஒன்று விரிவான வழி, மற்றொன்று இடுக்கமான வழி. மேலும், இயேசு என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்றும் சொல்லியிருக்கிறார்.

ஆம், மனிதன் போய்ச்சேரும் இடம் ஒன்று உண்டு. கீழ்ப்படியாதவர்களுக்கும், உண்மை இல்லாதவர்களுக்கும் அந்த இடம் நித்திய நரகமாகும். ஆனால், நீதிமான்களுக்கும் ,தேவனை நேசிப்பவர்களுக்கும் அவருடைய கட்டளைகளை கைக்கொள்கிறவர்களுக்கும் அந்த இடம் நித்திய மகிழ்ச்சி அளிக்கும் பரலோகமாகும். முதலில் குறிப்பிடப்பட்ட அந்த நித்திய நரகத்திற்கு போக ஒருவர் எந்த முயற்சியையும் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. எதையும் செய்யாமல், எதையும் விசுவாசிக்காமல், எதற்கும் கீழ்ப்படியாமல் இருந்தாலே போதுமானது. இரண்டாவது, குறிப்பிடப்பட்டிருக்கும் பரலோகத்திற்கு விண்கலத்தின் மூலமாகப் போக முடியாது. இயேசு கிறிஸ்துவின் மூலமாகவும், அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிவதின் மூலமாகவும் தான் அங்கே போய்ச்சேர முடியும். ஏனெனில், நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்று இயேசு மொழிந்துள்ளார். [யோவான். 14:6]. நீங்கள் போக விரும்பும் இடம் எது?



இரட்சிப்பு

# துரிதமான நியாயத்தீர்ப்பு

## Swift judgment

*Denny Petrillo*

'**து**ர்க்கிரியைக்குத்தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால், மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங் கொண்டிருக்கிறது [பிரசங்கி 8:11]. பொதுவாக, பெற்றோர்கள் பிள்ளைகள் தவறு செய்யும்போது உடனடியாக தண்டிப்பதையே விரும்புவார்கள். இது பிள்ளைகள் தவறு செய்தால் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்கிற பயத்தை உண்டாக்கும். ஆனால், தேவன் மனிதர்கள் பாவம் செய்யும்போது நேரடியாக கண்டிப்பதில்லை. அதே நேரத்தில் தேவன் எந்த ஒரு பாவியையும் தண்டிக்காமல் விடுவதுமில்லை. இங்கே சாலொமோன் சொல்லும் கருத்து என்னவென்றால், துர்க்கிரிகளுக்குத்தக்க தண்டனை மனிதர்களுக்கு உடனடியாக கிடைக்காதபடியால் மனிதர்களுடைய இருதயம் பொல்லாப்பை செய்யத் துணிகரம் கொண்டிருக்கிறது என்பதாயிருக்கிறது. காரியம் இப்படியாயிருக்க தேவன் ஏன் இவ்விதமாய் கிரியை செய்கிறார்?




அப்போஸ்தலனாகிய பேதுரு இது குறித்துச் சொல்லும் போது இப்படியாகச் சொல்கிறார். **தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டு மென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்**' [2 பேதுரு 3:9]. இதைக் குறித்து பவுல் எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாய் இருக்கிறது என்று சொல்கிறார் [1 தீமோத்தேயு 2:4]. வானத்தையும், பூமியையும் உண்டாக்கின சர்வ வல்ல தேவன் நாம் செய்யும் தவறுகளுக்கு

உடனடியாகத் தண்டனை கொடுப்பதில்லை. அவர் நம்மை உடனடியாக தண்டித்தால், நாம் மனம் திரும்புவதற்கு நேரமே கிடைக்காது, தேவனுக்கு சேவை செய்வதற்கும் சமயம் கிடைக்காது. இங்கே உண்மை பாவத்தின் சம்பளம் மரணம் என்பதாய் இருக்கிறது [ரோமர் 6:23].

இங்கே சாலமோன் கவனித்த காரியம், மனிதர்கள் துர்க்கிரியைகளில் ஈடுபடும்போது, தண்டனை உடனே கிடைக்காமல் இருக்கிறபடியால் அதையே அவர்கள் வாய்ப்பாக பயன்படுத்தி இன்னும் அதிகமான துர்க்கை களில் ஈடுபடுகிறார்கள். இருந்தபோதிலும், தேவனுக்கான இருதயம் உடையவர்களுக்கு நேரம் என்பது ஓர் ஈவாக இருக்கிறது. அந்தக் காலகட்டத்தில் அவர்கள் அவசியமான சில திருத்தங்களை செய்து கொள்கிறார்கள்[ ரோமர் 2:4]. பிரசங்கி 8:12 ல் சொல்லப்பட்டு இருக்கிறவைகளை அறிந்து கொள்ளுங்கள். '**பாவி நூறுதரம் பொல்லாப்பைச் செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள்** என்று அறிந்திருக்கிறேன் [பிரசங்கி 8:12]. துன்மார்க்கன் ஒருபோதும் நன்றாய் இருப்பதில்லை என்பதை வேதாகமம் உறுதியாகச் சொல்வது மாத்திரமல்லாமல் நம்முடைய நடைமுறை வாழ்க்கையிலும் அதைப் பார்த்துக் கொண்டு வருகிறோம். ✝

---

**எதற்காக ஆராதனை?**

1. வேத வாக்கியங்களை அறிந்து கொள்ள நம் மனது திறக்கும்படி...
(லூக்கா24:45)

2. கிறிஸ்துவினால் உண்டாகும் சமாதானமும் திருப்தியும் கிடைக்கும்படி...
(பிலிப்பியர் 4:7)

3. நம்முடைய ஆவிக்குரிய அனலை பற்ற வைத்துக் கொள்ளும்படி
(மத்தேயு24 12)

4. நம்முடைய ஆவிக்குரிய பசியை தீர்த்துக் கொள்ளும்படி...
(மத்தேயு 24:12)

5. வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தத்தக்கதான அனுபவத்தை இழந்து போகாதபடி... (யோவான் 20:31),

# வசன ஆராய்ச்சி

**( 1கொரிந்தியர் 14:20-40)**

*Jerry Bates*

1. 20 சகோதரரே, நீங்கள் புத்தியிலே ........துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ ........... 1 கொரிந்தியர் 14:20.
2. அப்படியிருக்க, அந்நிய பாஷைகள் ....... அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது. தீர்க்க தரிசனமோ .......அடையாளமாயிராமல், விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது. 1 கொரிந்தியர் 14:22
3. எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லுகையில், அவிசுவாசியொருவன் அல்லது கல்லாதவனொருவன், உள்ளே பிரவேசித்தால், அவனுக்கு என்ன நடந்திருக்கும்? 1 கொரிந்தியர் 14:24
4. முதல் நூற்றாண்டில் சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து, எல்லாரும் அந்நிய பாஷைகளிலே பேசிக் கொள்ளும்போது, கல்லாதவர்களாவது, அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால், அவர்கள் கூடியிருந்தவர்களைப் பார்த்து என்ன நினைத்தார்கள்? 1 கொரிந்தியர் 14:23
5. சகலமும் ......... செய்யப்படக் கடவது வசனம் 26
6. அந்நிய பாஷையில் பேசுவதைக் குறித்து பவுல் கொடுத்த விதிமுறை என்ன? (வசனம் 27)
7. அர்த்தம் சொல்லுகிறவர் இல்லாவிட்டால் அந்நிய பாஷையில் பேசுகிறவர் என்ன செய்ய வேண்டும்? (வசனம் 28)
8. சபையாய் கூடி வந்திருக்கையில் ஒரே நேரத்தில் எத்தனை பேர் பேச வேண்டும்? (வசனம் 29,30)
9. தேவன் .........தேவனாயிராமல், ...........தேவனாயிருக்கிறார், பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது. 1 கொரிந்தியர் 14:33
10. சபையிலே ஸ்திரீகள் பேசுவது எப்படி இருக்கும்? (வசனம் 35).
11. ஸ்திரீகள் யாரிடத்தில் விசாரிக்ககடவர்கள்? (வசனம் 35)
12. பவுல் கொரிந்தியர்களுக்கு எவைகளை எழுதினார்? (வசனம் 37).
13. சகலமும்......... ......... செய்யப்படக்கடவது (வசனம் 40).

‘சகோதரரே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள். துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர் களாயுமிருங்கள்.

மறுபாஷைக்காரராலும், மறுஉதடுகளாலும் இந்த ஜனங்களிடத்தில் பேசுவேன். ஆகிலும், அவர்கள் எனக்கு செவிகொடுப்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார் என்று வேதத்தில் எழுதியிருக்கிதே.

அப்படியிருக்க, அந்நியபாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது. தீர்க்கதரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது.

ஆகையால், சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து, எல்லாரும் அந்நிய பாஷைகளிலே பேசிக்கொள்ளும்போது, கல்லாதவர்களாவது, அவிசு வாசிகளாவது உள்ளே பிரவேசித்தால், அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்களல்லவா?

எல்லாரும், தீர்க்கதரிசனஞ் சொல்லுகையில், அவிசுவாசியொருவன், அல்லது கல்லாதவனொருவன், உள்ளே பிரவேசித்தால், அவன் எல்லாராலும் உணர்த்துவிக்கப்பட்டும், எல்லாராலும் நிதானிக்கப்பட்டும் இருப்பான்.

அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும். அவன் முங்குப்புற விழுந்து, தேவனைப் பணிந்துகொண்டு, தேவன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று அறிக்கையிடுவான்.

நீங்கள் கூடிவந்திருக்கிறபோது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடு கிறான். ஒருவன் போதகம்பண்ணுகிறான், ஒருவன் அந்நியபாஷை பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான். சகோதரரே, இது என்ன? சகலமும் பக்திவிருத்திக் கேதுவாகச் செய்யப்படக்கடவது.

யாராவது அந்நியபாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டுபேர் மட்டில் அல்லது மிஞ்சினால் மூன்று பேர்மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும்.

அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்.

தீர்க்கதரிசிகள் இரண்டுபேராவது, மூன்றுபேராவது பேசலாம், மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள். அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால், முந்திப் பேசினவன் பேசாமலிருக்கக்கடவன்.

எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் தேறுகிறதற்கும், நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனஞ்சொல்லலாம்.

தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கி யிருக்கிறதே.

தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனா யிருக்கிறார், பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது.

சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள். பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். வேதம் அப்படியே சொல்லுகிறது.

அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள். ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே.

தேவவசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? அது உங்களிடத்திற்கு மாத்திரமா வந்தது? ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது, ஆவியைப் பெற்ற வனென்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன். ஒருவன் அறியாதவனாயிருந்தால், அவன் அறியாதவனாயிருக்கட்டும். இப்படியிருக்க, சகோதரரே, தீர்க்கதரிசனஞ் சொல்ல நாடுங்கள், அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கு தடைபண்ணாதிருங்கள். சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படக்கடவது' (1 கொரிந்தியர் 14:20–40).

✝

### தேவனுடைய வார்த்தை

**உணர்வுகள் வரும், உணர்வுகள் போகும் உணர்வுகள் வஞ்சிக்கும் தன்மை கொண்டவைகள். என்னுடைய உத்திரவாதம் தேவனுடைய வார்த்தை தான். வேறு எதுவும் நம்பிக்கைக்கு உரியதல்ல. தேவனுடைய மாறாத வார்த்தைகளில் நான் நம்பிக்கை வைப்பேன். ஆவியும், சரீரம் பிரியும் வரை எல்லாமே அழிந்து போனாலும் அவருடைய வார்த்தைகள் என்றென்றும் நிலைத்து நிற்கும்.**

# இவ்விதமாகத்தான் இருந்தது

## The way it was

*Ronald D. Reeves*

அப்போஸ்தலனாகிய பவுல் தன் கடந்த காலத்தை இரண்டு விதமாகத் தொடர்புபடுத்துகிறார். முதலாவது, அவர் இவ்விதமாகச் சொன்னார். **சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை. ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்**' [பிலிப்பியர் 3:13,14]. அதே நேரத்தில் பவுல் இவ்விதமாகவும் சொன்னார். **பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமானது. அவர்களில் பிரதான பாவி நான்** 1தீமோத்தேயு 1:15]. அவருடைய பழைய யூத சிலாக்கியங்களை, சாதனைகளை அவர் நஷ்டம் என்று விட்டு அவைகளைக் குப்பையுமாக எண்ணினார். அவைகளையெல்லாம் அவர் தன் மனதில் இருந்தே எடுத்துப் போட்டு விட்டார். ஆனால், கிறிஸ்துவையும் ,கிறிஸ்தவர் களையும் உபத்திரவப்படுத்தினதைப் பொறுத்தவரை கிறிஸ்துவுக்கு விரோதமாக தான் திட்டமிட்டு செய்த பாவங்களை அவர் மறக்கவில்லை. .அவைகள் அவருடைய மனதை வாட்டிக் கொண்டிருந்தன. எனவே, இங்கே பவுல் தன்னுடைய கடந்த காலத்தை இரண்டாக தொடர்புபடுத்து கிறார்,ஒன்றில் அவர் கடந்த காலத்தை அடியோடு மறந்து விட்டார். ஆனால், மற்றொன்றில் கடந்த காலம் அவருக்குள்ளையே இருந்தது.

மேற்ச்சொல்லப்பட்ட பவுலின் கடந்த கால சம்பவங்களை அடிப் படையாக வைத்து கர்த்தருடைய சபையின் வரலாற்றையும், தனிப்பட்ட அங்கத்தினர்களின் வரலாற்றையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். நம் கடந்த காலத்தை நாம் சற்று திரும்பி பார்க்கும் போது,தனிப்பட்ட ரீதியிலும் ,சபையாகவும் நாம் சில காரியங்களை அதாவது பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நோக்கி தொடர்கிற பிள்ளைகளாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் காலத்தில் நாம் செய்த சில காரியங்களை உறுதியாக பற்றிக்கொண்டு கர்த்தருடைய திராட்சைத் தோட்டத்தில் தொடர்ந்து கனி கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும். கடந்த காலத்தில் நாம் செய்த நற்கிரியைகளைத் தொடர்ந்து செய்வது தற்காலத்தில் விசேஷித்த கவனம் கொடுக்க வேண்டிய ஒன்றாகும்.

அநேக பிராந்திய சபைகள் ஓர் எளிமையான தொடக்கத்தைக் கொண்டுத் தான் பெரிய சபைகளாக வளர்ந்திருக்கின்றன. ஆரம்பத்தில் அந்த சபைகளில் குறைந்த அளவு பொருளாதார வளங்கள் மற்றும்

வசதிகள் போன்றவைகளே இருந்தன. காலப்போக்கில் இந்தப் பிராந்திய சபைகள் எண்ணிக்கையில் மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்ததன் காரணமாக ,பொருளாதார ரீதியாக மிகவும் செழிப்பான ஒரு நிலையை அடைந்தன. குறுகிய காலகட்டத்தில் பிராந்திய சபைகள் எண்ணிக்கை ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் பெரிய வளர்ச்சியை அடைந்திருக்க முடியாது. இவ்வளவு பெரிய வளர்ச்சிக்கு பின்னால் நற்கிரியைகள் இன்னும் அநேக பிரயாசங்கள் இருந்திருக்கும். ஆனால், சமீப காலமாக சில பிராந்திய சபைகள் எவ்வித மாற்றம் ,முன்னேற்றமும் இல்லாமல் முன்பிருந்த அதே நிலையிலேயே ஆவிக்குரிய பிரகாரமாகவும், எண்ணிக்கை பிரகாரமாகவும் இருப்பது வேதனை அளிக்கிறது. காலப்போக்கில் உண்மையாகவே சில பிராந்திய சபைகள் ஆவிக்குரிய பிரகாரமாகவும் எண்ணிக்கை பிரகாரமாகவும், வளர்ச்சி குன்றியிருப்பதை நம்மால் காண முடிகிறது. ஏன் இப்படி நடக்கிறது, இது தவிர்க்கப் பட்டிருக்கலாமே? ஏன் இப்படி எல்லாம் நடக்கிறது என்பதை நம்மால் புரிந்து கொண்டு, நாம் சபைகளின் வளர்ச்சி குன்றாமல் இருக்க உறுதியான முயற்சிகளை நம்மால் எடுக்க முடியும்.

இப்போது நான் கடந்த காலங்களில் வளர்ச்சி அடைந்த சபைகள் எவைகளில் கவனம் செலுத்தினார்கள் என்பதை கீழ்க்கண்டவாறு உங்கள் பரிசீலனைக்கு வைக்கிறேன்.1 அனுதின வாழ்வில் உண்மை . மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்த சபையின் அங்கத்தினர்கள் சமுதாயத் தில் கிறிஸ்தவ தாக்கத்தை ஏற்படுத்துகிறவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அனுதின வாழ்வில் நன்மைக்காக நிற்கிறவர்களாகவும், தங்கள் குடும்பங்களைத் தேவ பக்திக்கேற்ற ரீதியில் நடத்துகிறவர் களாகவும் இருக்கிறார்கள்.

2 கிறிஸ்துவினிமித்தம் உறுதியான அர்ப்பணிப்பு. வளர்ச்சி அடைந்த சபைகள் கிறிஸ்துவின் நிமித்தம் சபையின் வளர்ச்சிக்கு தங்கள் உண்மையான அன்பையும் , அர்ப்பணிப்பையும் வழங்குகிறார்கள். சபை அங்கத்தினர்கள் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் என்னும் தேவனுடைய வார்த்தையை லேசாக எடுத்துக் கொள்ளாமல் அதை பற்றிப் பிடித்துக் கொள்கிறார்கள்.

3. தேவனுடைய ராஜ்யத்தில் உற்சாகமாக ஈடுபடுதல். வளர்ச்சி அடைந்த சபைகளில் உள்ள அங்கத்தினர்கள் சபைக்கடுத்த காரியங்களை சிலர் மாத்திரம் செய்வதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். இப்படிப்பட்ட பிராந்திய சபைகளில் பெரும்பாலானவர்கள் ஏசாயா தீர்க்கதரிசி இதோ, அடியேன் இருக்கிறேன்:என்னை அனுப்பும் என்று சொன்னது போல சொல்கிறார்கள். உண்மையான தனிப்பட்ட ஆவிக்குரிய வளர்ச்சி. வளர்ச்சியடைந்த பிரதேச சபைகள் இதில் சிறந்து விளங்குகின்றன. ஏனென்றால், இங்கே அங்கத்தினர்கள் ஆவிக்குரிய அறிவை பெற்றுக் கொள்வதற்கும் ஆவிக்குரிய சிந்தை உடையவர்களாக

இருப்பதற்கும் உறுதியான முயற்சிகளை எடுக்கிறார்கள்.5 தியாகப்பூர்வமான கிறிஸ்தவ வாழ்வு. வளர்ச்சி அடைந்த சபைகளில் உள்ள அங்கத்தினர்கள் சபையின் நன்மைக்காக தனிப்பட்ட தியாகங்களைச் செய்ய தயங்குவதில்லை. இவர்கள் நேரம்,பணம் , தாலந்துகள் மற்றும் தனிப்பட்ட உறவுகளை கூட தியாகம் செய்ய தயங்குவதில்லை.8 புதிய ஏற்பாட்டு சபை மீதான அன்பு. வளர்ச்சி அடைந்த சபைகளுக்கு இழந்து போன ஒவ்வொரு ஆத்துமா மீதும் உண்மையான அன்பு இருக்கிறது. இழந்து போன ஆத்துமாக்களைத் தேடுகிற காரியத்தில் இவர்கள் சமுதாயம், இனம் ,போன்றவைகளை தடைகளாக இருக்க அனுமதிப்பதில்லை.

வரலாற்றுப் பூர்வமாக எடுத்துப் பார்த்தால் கூட மேற்சொல்லப்பட்ட காரியங்கள் தான் வளர்ச்சி அடைந்த சபைகளுக்கு வழி வகுத்திருக்கின்றன. தேவனுடைய ராஜ்ஜியத்தில் நாம் செய்ய வேண்டிய கடமைகளை உண்மையாகவே செய்ய வேண்டுமென்றால், சபை வளர்ச்சி அடையக் காரணமாக இருந்த காரியங்களை நாம் பற்றிப் பிடித்துக் கொண்டு உற்சாகமாக செயல்பட வேண்டும். நாம் கூட அப்போஸ்தலனாகிய பவுலோடு சேர்ந்து ‘**நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்**‘என்று சொல்வோமாக. ✝

## சமாதானம் என்பது என்ன?

**1. அது சோதனைகள் அழுத்தும் போது உண்டாகும் அமைதி.**

**௨. அது தேவன் சிறந்ததை அறிந்திருக்கிறார் என்கிற நம்பிக்கை தரும் அமைதி.**

**௩. அது சலசலப்பில்லாத அமர்ந்தத் தன்மையினால் வருவது.**

**4. அது எதைப் பற்றியும் கவலைப்படாத அமைதியால் கிடைப்பது.**

**5. அது தேவன் மீது நமக்கிருக்கும் நல் நம்பிக்கையின் ஆதாரம்.**

# தேவன் தம்முடைய சித்தத்தை எல்லோருக்கும் ஒரே விதமாக வெளிப்படுத்தியிருக்கிறார்

# God has revealed His will for all people alike

*Sunny David*

**அ**நேக ஜனங்கள் புரிந்து கொள்வதற்கு வேதாகமம் தான் மிகக் கடினமான புத்தகம் என்று நம்புகிறார்கள். ஆனால், உண்மை என்னவென்றால் எல்லா இடங்களிலும் இருக்கிற மனிதருக்கு வேதாகமம் என்பது தேவனுடைய செய்தியை உள்ளடக்கிய புத்தகமாயிருக்கிறது. மனிதனுடைய சிருஷ்டிகராகிய தேவன், வேதாகமத்தின் பக்கங்கள் மூலமாக தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தி எல்லா மனிதர்களோடும் பேசிக் கொண்டிருக்கிறார். ஒருவரும் அறியாமையில் கெட்டுப்போகாமல், எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்புகிறபடியால் எல்லோரும் அவருடைய சித்தத்தை அறிந்து அதைப் பின்பற்ற வேண்டும் என்று அவர் விரும்புகிறார் [2பேதுரு 3:9]]. தேவன் பட்சபாதம் உள்ளவர் அல்ல [அப்போஸ்தலர் 10:34] எனவேதான், அவர் தம்முடைய சித்தத்தை எல்லோரும் பின்பற்றும் வகையிலே வெளிப்படுத்தியிருக்கிறார்.

மறுமுனையில், இதை அவரால் செய்ய முடியாவிட்டால் அவர் சர்வ வல்ல தேவன் என்று நம்மால் எப்படி சொல்ல முடியும்? மனிதனை உண்டாக்கிய தேவனுக்கு மனிதனை விட அவனைப் பற்றி நன்றாகத் தெரியும். மனிதனால் எதை, எப்படிப் புரிந்து கொள்ள முடியும் என்பதைப் பற்றியும் அவருக்கு துல்லியமாகத் தெரியும். மனிதர்களாகிய நமக்கு நம் பிள்ளைகளோடு எப்படிப் பேசவேண்டும் என்று தெரியுமோ, அதைப்போல் தேவனும் தம்முடைய பிள்ளைகளோடு எப்படிப் பேச வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார். எனவேதான், அவர் தம்முடைய சித்தத்தை எல்லா மனிதர்களும் ஒரே விதமாகப் புரிந்து கொள்ளும்படி வெளிப்படுத்த வல்லவராய் இருக்கிறார். அவருடைய வார்த்தைகளை உள்ளடக்கிய வேதாகமம் பல்வேறுபட்ட இடங்களில் இருக்கிறவர்களுக்கு வித்தியாசமான காரியங்களை செய்யச் சொல்வதில்லை.

சீனாவிலோ, அமெரிக்காவிலோ இருக்கும் ஒரு தனி மனிதனுக்கு எதைச் சொல்லுகிறதோ, அதை இங்கே இந்தியாவிலே நான் வாசிக்கும் மொழியில் எனக்குச் சொல்லுகிறது.

இயேசு கிறிஸ்து தேவனுடைய வார்த்தை ராஜ்யத்தின் விதை என்று போதித்தார் [லுக்கா 8:11]. ஒரு விதை எங்கே விதைக்கப்பட்டாலும் அதன் ஒரே வகை கனியையே கொடுக்கும், அதைப் பற்றி ஒரு குழப்பம் இல்லை. இங்கே கேரட் விதைகளை விதியுங்கள், அப்போது கேரட்களை மாத்திரமே அறுப்போம். உருளைக்கிழங்கையோ அல்லது தக்காளியையோ நிச்சயமாக அறுக்க மாட்டோம்.

ஆனால், இங்கே எழுப்பப்படும் கேள்வி என்னவென்றால் , எல்லோரும் வேதாகமத்தை பின்பற்றுவதாக சொல்லிக் கொள்ளும்போது ஏன் இத்தனை வேறுபட்ட சபைகள், உபதேசங்கள், ஆராதனை முறைகள் இவ்வுலகில் கிறிஸ்துவை பின்பற்றுபவர்கள் மத்தியில் காணப் படுகின்றன? அவைகளைப் பற்றி எல்லாம் வேதாகமம் போதிக்காத படியால் அவைகள் எல்லாம் தேவனுடைய சித்தத்தின்படி உண்டான வைகள் அல்ல என்பதுதான் எளிய பதிலாய் இருக்கிறது. இயேசு கிறிஸ்து தம்முடைய சபையைக் கட்டின பிறகு, அவருடைய சபை பின்பற்ற வேண்டிய உபதேசங்களைப் போதிக்கவும், தம்முடைய அப்போஸ்தலர் களுக்கு அதிகாரம் கொடுத்தார் (மத்தேயு16:18; எபேசியர் 1:22,23;4:4). பல்வேறு காலக்கட்டங்களில் வாழ்ந்த மனிதர்கள் தேவனுடைய வார்த்தையை மாற்றவும், அதோடு சிலவற்றை கூட்டவும் தொடங் கினார்கள் (அப்போஸ்தலர் 20:28–30;1 தீமோத்தேயு 4:1–4; 2 தீமோத்தேயு 4:1–4). வேதாகமத்தோடு அநேக காரியங்கள் கூட்டப்பட்டிருக்கிற படியால் இன்றைய நாட்களில் ஜனங்கள் போதிக்கப்படுகிறகவைகளை எல்லாம் நம்பும் அவல நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். இருந்த போதிலும், வேதாகமம் அவைகளைப் பற்றி மௌனமாக இருக்கிறது. மனிதனால் உண்டாக்கப்பட்ட உபதேசங்களும், போதனைகளும் திரும்பத் திரும்ப போதிக்கப்படுகின்றன. அவைகளை உலகில் உள்ள அநேகர் அனுசரிக்கிறார்கள். அநேகர் மனிதனால் உண்டாக்கப்பட்ட உபதேசங்களை வேதாகம உண்மைகளாக ஏற்றுக் கொள்வது வேதனைக்குரிய ஒன்றாகும்.

அவ்வப்போது தெளிவான போதனைகளும், உபதேசங்களும் வேதாகமத்திலிருந்து ஜனங்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும் போது, அவர்கள் பெரும்பாலும் அவைகளை விசுவாசிக்க விரும்பு வதில்லை. ஜனங்கள் மனித உபதேசங்களில் வேரூன்றியிருக்கிற படியால், வேதாகம உண்மைகள் அவர்களுக்கு பொய்களாகத் தோன்றுகிறது. ஆனால், அதே நேரத்தில் மனிதனால் உண்டாக்கப்பட்ட உபதேசங்களும்,போதனைகளும் அநேகரால் வேதாகம உண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று கிறிஸ்து தாமே போதித்திருக்கிறார் (மாற்கு 16:16). இது புரிந்து கொள்வதற்கு மிக சுலபமாகத்தான் இருக்கிறது. இருந்தபோதிலும், பெரும்பாலான ஜனங்கள் ஒருவர் விசுவாசித்தால் மாத்திரமே இரட்சிக்கப்படுகிறார் ஞானஸ்நானத்துக்கு அவசியம் இல்லை என்பதை விசுவாசிக்க விரும்புகிறார்கள்.

'என் சபையைக் கட்டுவேன்'என்று கிறிஸ்து சொன்னார்( மத்தேயு 16:18). மேலும், அப்போஸ்தலர் 2:47 ன் படி அவர் இரட்சிக்கப்படுகிறவர்களைத் தம்முடைய சபையிலே சேர்க்கிறார். ஆனாலும், இன்றைய நாட்களில் ஜனங்கள் எல்லா சபைகளும் ஒன்று தான் என்று நம்புகிறார்கள். கிறிஸ்து தம்முடைய சபையை எருசலேமில்

கட்டினப்பிறகு பல்வேறுப்பட்ட சபைகளை மனிதர்கள் கட்டியிருக்கிற படியால் அவர்கள் அப்படி நம்புகிறார்கள். மனிதன் தனக்கென பல சபைகளையும், உபதேசங் களையும், ஆராதனை முறைகளையும் கண்டுபிடித்திருக்கிறான். இன்று மனிதனுடைய கட்டளைகளும், கொள்கைப் புத்தகங்களும், பல விதங்களில் பரவிக் கிடக்கிறபடியால், பலருக்கு வேதாகமத்தைப் புரிந்து கொள்வது கடினமாகிவிட்டது.

எல்லோரும் அந்த மனித உபதேசங்களைப் போதிப்பதிலிருந்து வெளியேறி, வேதாகமத்திற்குத் திரும்பி அதை மாத்திரம் வாசித்து , அது சொல்கிறதை மாத்திரம் செய்தால் எவ்வித குழப்பமும் பிரிவினையும் இராது. அப்போது ஆரம்பத்தில் இருந்தபடியே அனைவரும் கிறிஸ்தவர்களாகத்தான் இருப்பார்கள் [அப்போஸ்தலர் 11:26]. கிறிஸ்து கட்டின சபையின் அங்கத்தினர்கள் கிறிஸ்து போதித்தபடியே எல்லா இடங்களிலும் ஆராதிப்பார்கள் [யோவான் 4:24]. இன்றைய நாட்களில் ஜனங்கள் வேதாகமத்தை எல்லோரும் ஒரே விதமாக புரிந்து கொள்ளவில்லை என்றால் , அது தேவனுடைய தவறல்ல. அது மனிதனுடைய தவறுதான். தேவன் தம்முடைய வார்த்தையின் மூலமாக பேசியிருக்கிறார், அதைக் கேட்டு அவருடைய சித்தத்தின்படி செய்வது நம்முடைய கடமையாக இருக்கிறது. ✝

*தேவன் எப்போதுமே தம்முடைய குமாரருடைய ஜெபத்தை கேட்கிறார். எனவே, எனக்குள் தேவகுமாரன் உருவாக்கப்பட்டால் மட்டுமே தேவன் என் ஜெபத்தை கேட்பார். அப்படி கிறிஸ்து நமக்குள் உருவாக்கப்பட நாம் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய வேண்டும். நாம் தேவனுடையவர்களானால் ஒழுக்க நெறிகளும் நற்பண்புகளும் நம்மால் தீர்மானிக்கப்படுவதில்லை. அவைகள் தேவனால் ஏற்படுத்தப்படுகின்றன. அவைகள் தான் நம் வாழ்க்கையை ஆளுகின்றன. தேவனுடைய பிரமாணங்களின்படி வாழ்வை அமைத்துக் கொள்ளும் போது சந்தோஷத்திற்கும் சமாதாளத்திற்கும் குறைவிருக்காது.*

# ஒரு மூப்பருடைய கருவிப் பெட்டிக்குள் என்ன இருக்கிறது?

# What Is In an Elder`s Tool box?

Neil Richey

**பொ**துவாக எல்லா இடங்களிலும் மூப்பர்கள் தாங்கள் எடுத்துச் செல்லும் கருவிகளை வைத்துக் கொள்ள ஒரு பெட்டியைக் கொண்டு செல்வார்கள். இது, சபையை மேய்க்கும் மூப்பர்கள் தங்கள் பணிகளை வெற்றிகரமாகச் செய்ய உதவியாயிருக்கும். ஒரு மூப்பருடைய பெட்டியில் நாம் கீழ்க்காணும் பொருள்களைக் காண முடியும்.

ஒவ்வொரு மூப்பருடைய கருவிப் பெட்டியிலும் தலையணை அவசியமாக இருக்க வேண்டும். ஒரு மூப்பர் தேவனோடு நெருக்க மான உறவு வைத்திருக்கவில்லையென்றால், கர்த்தருடைய சபை யிலே அவர் எப்படி மூப்பராயிருக்க முடியுமென்று எனக்குத் தெரிய வில்லை. அர்ப்பணிப்புள்ள ஜெப ஜீவியமில்லாமல் தேவனோடு நெருக் கமான உறவை வைத்துக்கொள்ளவே முடியாது. மூப்பர்கள் முழங்கால் படியிட்டு ஜெபிப்பதில் அதிக நேரத்தைச் செலவழிக்க வேண்டும். அதற்காகத்தான், மூப்பர்களுக்கு முழங்காலின் கீழ்வைப்பதற்குத் தலையணை அவசியமாகும்.

wendell winkler என்பவர் ஒரு மூப்பருக்குக் கீழே பணிபுரிந்த அனுபவத்தைப் பற்றிச் சொல்லும்போது, தான் குறிப்பிடும் அந்த மூப்பர் தன்னுடைய வீட்டருகில் உள்ள தன் தோட்டத்தில் ஒரு ஜெப அறை யைக் கட்டினார், ஒவ்வொரு நாளின் காலை வேளையிலும் அந்த மூப் பர், ஜெப அறையில்தான் அதிகமான நேரம் இருப்பார் என்றார். ஒரு சம யம் wendell winkler ஒரு சுவிசேஷக்கூட்டத்தில் ஜெபத்தில் வழி நடத் தும்படியாகக் கேட்டுக் கொள்ளப்பட்டார். ஜெபம் முடிந்த பிறகு அந்த சபையின் பிரசங்கியார் சகோ winkler – ரிடமாகச் சாய்ந்து, நான் இந்த ஜெபத்தைக் கேட்பதற்காகவே இவ்வளவு தூரம் பயணம் செய்தேன் என்றாராம்.

எத்தனை மூப்பர்கள், பிரசங்கியர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் ஜெபித்திற்கென்று ஜெப அறையைக் கட்டியிருக்கிறார்கள்? நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து உன் கதவைப் பூட்டி அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்

பண்ணு என்றுள்ளது (மத்தேயு 6:6). எப்படி ஜெபிக்க வேண்டுமென்று தெரிந்திரிக்கிற மேய்ப்பர்கள் நமக்குத் தேவை.

ஒவ்வொரு மூப்பருடைய கருவிப்பெட்டியிலும் ஒரு அலை பேசி இருக்க வேண்டும். ஒரு மேய்ப்பர் என்பவர் மந்தையைப் பராமரிக் கிறவராக இருக்கிறார். சபை அங்கத்தினர்கள் பரபரப்பான வாழ்க்கை முறையில் இருக்கிறபடியால், அவர்களை வீடுகளில் சந்திப்பதென்பது கடினமான காரியம். சிலரை தொலை பேசியில் தொடர்பு கொள்வது கூட கடினமாகும். அவர்களுக்கெல்லாம் மூப்பர்கள், நலமாயிருக்கிறீர் களா? புதன்கிழமை உங்களைச் சந்திக்க வர முடியவில்லை, நாம் இந் தவாரம் ஜெபிப்பதற்காக ஒன்றுகூடலாமா என்று குறுஞ்செய்தியை அலைபேசியின் வாயிலாக அனுப்புவதன் மூலமாக, மூப்பர்கள் சபை அங்கத்தினர்களின் ஆத்துமாக்களுக்காக அக்கறைப்படுகிறீர்கள் என் பதைக் காட்ட முடியும்.

ஒவ்வொரு மூப்பரும் உறுதித்தன்மையுடைவராயிருக்க வேண்டும். மூப்பத்துவம் என்பது ஓர் அற்புதமான அனுபவமாக இருந்தாலும் கூட, அது அதிக சோர்வை ஏற்படுத்துகிற பணியாக வும் இருக்கிறது. Franklin camp என்பவர் சொல்லும்போது, இவ்வுல கில் மூப்பர்களை விடப் பெரிதான பதவியை இதுவரை எந்தவொரு மனிதனும் வகிக்கவில்லை என்று சொன்னார். இந்தப் பணியில் எந் தளவுக்குப் பொறுப்பு இருக்கிறதோ, அந்தளவுக்கு விமர்சனங்களும் வந்து சேரும்.

உள்ளூர் சபையின் அங்கத்தினர்கள் தொடர்ச்சியாக மூப்பர் களை விமர்சிப்பதைப் பார்த்து நான் ஆச்சரியப்படுகிறேன். மூப்பர்கள் சபையின் ஆவிக்குரிய மற்றும் எண்ணிக்கை அடிப்படையிலான வளர்ச்சிக்காகப் பாடுபடும்போது சபையில் யாரோ ஒருவர் அதை விமர் சிப்பதற்கும், பரிகாசம் செய்வதற்கும் தயாராக இருப்பார்கள். ஆனால், இதே நபர்தான் சபை அங்கத்தினர்களைக் குறித்து மூப்பர்களிடம் புகார் கொடுப்பவராகவுமிருப்பார். இதினிமித்தம் அந்த மூப்பர் விமர்சனங் களைக் கண்டு விழி பிதுங்கி தன் பொறுப்பை விட்டு விடுவது அல்லது அதிருப்தியான அந்த அங்கத்தினரைச் சபையை விட்டு விலக்குவது என்று இந்த இரண்டில் ஒன்று நிச்சயம் நடக்கும். இன்றைய நாட்களில் சபைகளில் விமர்சனங்களைக் கண்டு துவண்டு போகாமலிக்கிற மூப்பர்களே அவசியமாயிருக்கிறார்கள். ஆம், மூப்பர்கள் உறுதித் தன்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு மூப்பருடைய கருவிப்பெட்டியிலும் Tissue paper இருக்க வேண்டும். ஒரு மனிதனால், இரக்கமில்லாமல் ஒரு வெற்றிகரமான மூப்பராக இருக்கவே முடியாது. நாம் வாழ்கின்ற இக்காலகட்டத்தில் ஜனங்கள் அதிகமாகக் காயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஜனங்களிடத்தில் மூப்பர்கள் அவர்களுடைய சூழ்நிலைக்கு இறங்கி அவர்களோடு சேர்ந்து அழ வேண்டும் (ரோமர் 12:15).

தோராயமாக ஒவ்வொரு 27 நிமிடத்திற்கும் ஒருமுறை ஒரு தம்பதி பிரிந்து விடுகிறார்கள். சில இடங்களில் தம்பதிகளுக்கிடையே பிரச்சனை ஏற்பட்டு, மனைவி தன் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு தன் தாய்வீட்டிற்குப் போய்விடுகிறாள். இதினிமித்தம் கணவன் அல்லது மனைவி நீதிமன்றம், காவல் நிலையம் என்று அலைந்து திரிய வேண்டியதாகி விடுகிறது.

கணவனை விட்டுப் பிரிந்த அந்தப் பெண் அல்லது அந்த ஆண் வேறொரு நபருடன் வாழத் தொடங்குகின்றனர். இத்தகைய சூழ்நிலையை எப்படிக் கையாளுவீர்கள்? நிச்சயமாகவே, இதை இரக்கத்தோடு தான் கையாள வேண்டியதாயிருக்கிறது.

சில இல்லங்களில் மனைவிமார்கள் சிறந்த கிறிஸ்தவர்களாயிருப்பதற்கு முழு முயற்சி எடுப்பார்கள். ஆனால், அதற்கு மாறாகக் கணவன் எவ்வித ஒத்துழைப்பையும் கொடுப்பதில்லை. அது மட்டுமில்லாமல், தன் உண்மைத் தன்மையில் மனைவி நிலைத்திருக்க முயற்சிக்கும்போது ஒவ்வொரு நாளையும் சவாலான ஒன்றாக அந்த நபர் மாற்றி விடுகிறார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மனைவியானவள் குடும்ப உறவைவிட்டு வெளியேறாமல் அதைப் பொறுத்துக் கொண்டிருக்கச் செய்வது எப்படி? நிச்சயமாக இரக்க மனதோடுதான் செய்ய முடியும்.

மரணம் அதன் கோரமுகத்தைக் காட்டும் போது அதினிமித்தம் மரித்துப்போன ஒருவனுடைய மனைவி தன் கணவனோடு ஒரு நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்ததை நினைத்து அழுது புலம்பிக் கொண்டிருக்கும்போது அவளருகே இருந்து அவளை ஆறுதல் படுத்துவது யார்? ஆம், நிச்சயமாகவே அது பிரசங்கியர்தான். மேலும், பாதிப்புக்குள்ளான அந்தப் பெண் மந்தைமீது அக்கறைப்படும் ஒரு மேய்ப்பனுடைய இரக்கத்தினை உண்மையாக உணர வேண்டும். இரக்க குணத்தோடு பணி செய்வது ஒவ்வொரு மேய்ப்பனுடைய பொறுப்பாயிருக்க வேண்டும். ✝

ஆராதனை

# இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்

## Pray persistently

*D.A Adenugba*

இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்' [கொலோசெயர் 4:2]. கிறிஸ்தவர்கள் எப்போதும் தங்களுக்காகவும், ஆட்சியாளர்கள் உட்பட எல்லோருக் காகவும் ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் சக கிறிஸ்தவர்களுக்காகவும், கிறிஸ்தவர்களல்லாதவர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுலும் கூட கொலோசெ கிறிஸ்தவர்களுக்காக இவ்விதமாக ஜெபித்தார். 'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தி, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்' [கொலோசெயர் 1:5].

அதிகாரத்தில் இருப்பவர்கள் கூட நம் ஜெபங்களில் விடுபடக் கூடாது. உண்மையாகவே, அவர்களை நம் ஜெபங்களில் நினைவு கூரவேண்டும். 'நாம் எல்லாப் பக்தியோடும், நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும்[1 தீமோத்தேயு 2:2].

இயேசு கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் யாவருக்காகவும் ஜெபிப்பதில்லை. ஆனால், அவர்கள் நமக்காக பரிந்து பேசுகிறார்கள் [ரோமர் 8:26, 34]. ஜெபமானது பிதாவாகிய தேவனுக்கு இயேசு கிறிஸ்து மூலமாகத்தான் ஏறெடுக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் மூலமாகவோ அல்லது மரணம் நியமிக்கப்பட்டிருக்கிற எந்த ஒரு மனிதன் மூலமாகவோ ஏறெடுக்கப்படுவதில்லை.

சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்துவதற்காக இயேசு கிறிஸ்து ஓர் உவமையையே ஒதுக்கி விட்டார் [லூக்கா 18:1-8]. ஒருவர் தன்னுடைய விண்ணப்பத் திற்கு பதிலை பெற்றுக் கொள்வதற்கு ஒருமுறை மாத்திரம் விண்ணப் பித்தால் அது போதுமானதல்ல. எனவே, தொடர்ந்து அவர் விசுவாசத் தோடு இயேசு கிறிஸ்து மூலமாக விண்ணப்பங்களை ஏறெடுத்துக் கொண்டே இருக்க வேண்டும் [மத்தேயு 21:22]. உண்மையாகவே,ஜெபம் ஆச்சரியமூட்டும் பலன்களைக் கொண்டு வருகிறது.

இடைவிடாத ஜெபத்தினால் அசாதாரண ஆசீர்வாதங்களை நம்மால் பெற்றுக் கொள்ள முடியும். இந்த உவமையில் சொல்லப்பட்டிருக்கும் நியாயாதிபதி ஜனங்களுக்கு சரியான நேரத்தில் நியாயஞ்செய்யும் ஆட்சியாளரைக் குறிக்கிறது. ஆனால், துரதிருஷ்டவசமாக ஆட்சி யாளர்களில் பலர் தேவனுக்குப் பயப்படாதவர்களும்,மனுஷரை மதியாதவர் களுமாகத்தான் இருக்கிறார்கள். மேலும், அவர்கள் அன்பு காட்டப்பட வேண்டிய, அக்கறைப்படவும் வேண்டிய விதவைகளை, திக்கற்றவர் களை, அந்நியர்களை ஒடுக்குகிறார்கள் [யாத்திராகமம்22:22; உபாகமம் 10;18]. ஏபால் பர்வதத்தில் இருந்து வந்த சாபங்களில் இதுவும் ஒன்று [உபாகமம்27:19]. ஜெபத்தைப் பற்றி போதிக்கும் நோக்கத்திற்காக இந்த உவமையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நியாயாதிபதி தேவனை அடையாளப்படுத்துகிறார். இந்த தேவனிடத்தில் தான் அவருடைய பிள்ளைகள் இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டும். ஏனென்றால், நம்முடைய தேவன் அநீதி உள்ளவர் அல்லவே [லூக்கா 18:6].

இடைவிடாமல் தேவனிடத்தில் விண்ணப்பிப்பதன் மூலமாக, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கிறது. நாம் சோர்ந்து போகாமல் ஜெபித்தால் கேட்டதைப் பெற்றுக் கொள்வோம். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமக் கிறிஸ்தவர்களுக்கு எழுதின நிருபத்தில்' நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள், உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள், ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்' என்று எழுதினார் [ரோமர் 12:12]. நாம் ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருக்க வேண்டும் என்று கொலோசெயர் 4:2 ல் வாசிக்கிறோம்

எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத் தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்'[எபேசியர் 6:18].

நாம் ஜெபிக்கும் பொழுது, நம் விண்ணப்பங்களை தேவனுக்குத் தெரியப்படுத்துகிறோம்[ பிலிப்பியர் 4:6]. கூச்சல் குழப்பத்தினாலோ, ஆடல் பாடலினாலோ, மேளதாளத்தினாலோ அல்ல , ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினாலே நம் விண்ணப்பங்களை தேவனுக்கு தெரியப்படுத்த வேண்டும். அதைப்போல் ஜெபத்தில் வீணான வார்த்தைகளைத் திரும்பத் திரும்ப உச்சரிக்கக் கூடாது. அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள், அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்.

அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள், உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். [மத்தேயு 6:7,8].

பவுல் சகோதரர்களிடத்தில் ஜெபிக்கும்படியாக கேட்டுக்கொண்டபோது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டதை நம்மால் வாசிக்க முடியும். கடைசியாக, சகோதரரே, உங்களிடத்தில் கர்த்தருடைய வசனம் பரம்பி மகிமைப்படுகிறதுபோல, எவ்விடத்திலும் பரம்பி மகிமைப்படும்படிக்கு, துர்குணராகிய பொல்லாத மனுஷர் கையினின்று நாங்கள் விடுவிக்கப்படும்படிக்கும், எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள். விசுவாசம் எல்லாரிடத்திலுமில்லையே. [2 தெசலோனிக்கேயர் 3:1,2]. சில துன்மார்க்கமான மனிதர்கள் தேவனுடைய வார்த்தையை வெறுப்பார்கள், அது பரவாமல் இருக்கத் தடை செய்வார்கள். அந்த வகையில் பவுலின் ஜெப வேண்டுகோள் பொருத்தமானது தான் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். நம்முடைய ஜெபங்களும் கூட தேவனுக்கு நேரடியாக தெரிவிக்கும் வகையில், குறிப்பாக இருக்க வேண்டும். எப்பாப்பிராவும் கொலோசெய கிறிஸ்தவர்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் நிலை நிற்க வேண்டும் என்று ஜெபித்திருக்கிறார் [கொலோசெயர் 4:12]. எப்பொழுதும் ஜெபியுங்கள்; சோர்ந்து போகவும் வேண்டாம், களைத்துப் போகவும் வேண்டாம். ஜெபத்தில் வீணான வார்த்தைகளை அலப்ப வேண்டாம். சகோதர, சகோதரிகளுக்காகவும், கிறிஸ்தவர்களல்லாதவர்களுக்காகவும், ஆளுகிறவர்களுக்காகவும் ஜெபியுங்கள்.'இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்' [1 தெசலோனிக்கேயர் 5:17]. ✝

---

## கிறிஸ்து சிலுவையில் அறைந்த பாவங்கள்

முகாந்திரமில்லாத பகை யோவான் 15:25 ; சங்கீதம் 35:19

பண ஆசை - மத்தேயு 26:13,14; தீமோத்தேயு 6:10.

அறியாமை - (லூக்கா 22:34: அப்போஸ்தலர் 3:17)

பொய் - மத்தேயு 26:59 ; நீதிமொழிகள் 6:17

பொறாமை - மத்தேயு 27:18; மத்தேயு 26:4.

வாழ்வதற்கான உபதேசம்

# ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகள்

## Things proper for sound doctrine

*Wayne barrier*



**தீ**த்து ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் போதிக்கும்படி போதிக்கப்பட்டார், உற்சாகப்படுத்தப்பட்டார். இதைப் பற்றிய காரியங்கள் தீத்து 2:1–15 வசனங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

‘நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப்பேசு. முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும், நல்லொழுக்கமுள்ளவர்களும் தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும், அன்பிலும், பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமாயிருக்கும்படி புத்திசொல்லு. முதிர்வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே பரிசுத்தத்திற்கேற்ற விதமாய் நடக்கிறவர்களும், அவதூறுபண்னாதவர்களும், மது பானத்திற்கு அடிமைபடாதவர்களுமாயிருக்கவும், தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்திசொல்லு.

அப்படியே, பாலிய புருஷரும் தெளிந்த புத்தியுள்ளவர்களா யிருக்கவும் நீ புத்திசொல்லி, நீயோ எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியை களுக்கு மாதிரியாகக் காண்பித்து, எதிரியானவன் உங்களைக்குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத் தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ள வனும் குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக.

வேலைக்காரர் நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரிக்கத்தக்கதாக, தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருந்து எதிர்த்துப் பேசாமல், எல்லாவற்றிலும் பிரியமுண்டாக நடந்து கொள்ளவும், திருடாமலிருந்து சகலவிதத்திலும் நல்லுண்மையைக் காண்பிக்கவும் புத்திசொல்லு.

ஏனெனில், எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிகஇச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும், நீதியும், தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.

அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச்செய்ய பக்தி வைராக்கி யமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்.

இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள். ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடாதிருப்பாயாக' தீத்து 2:1–15)

இந்த நிருபத்தில் பவுல் தீத்துவுக்கு சில முக்கியமான பணிகளைக் கொடுக்கிறார். முதலாவது, பவுல் தீத்துவிடம் பட்டணங்கள்தோறும் மூப்பர்களை ஏற்படுத்தும்படியாகவும், பின்பு அவர்களுடைய பணி குறித்து கலந்து ஆலோசிக்கும்படியாகவும், கடைசியாக ஒவ்வொரு கிறிஸ்தவருக்குமான தேவனால் ஏற்றுகொள்ளபடத்தக்க ஆரோக்கிய மான நடத்தை குறித்த விளக்கம் அளிக்கும்படியாகவும் தீத்து போதிக்கப்பட்டார். மேலும், நம்முடைய இரட்சிப்பு தேவனுடைய கிருபையால் உண்டானது என்றும் இயேசு கிறிஸ்துவின் தியாகம் அவருடைய ராஜ்யத்தில் அவருக்கு சேவை செய்ய நமக்கு சிலாக்கியத்தை அளித்திருப்பது தீத்துவுக்கு போதிக்கப்பட்டது. தேவன் ஏற்றுக் கொள்ளக்கூடிய வாழ்க்கையை வாழ்வதற்கு வாலிபர்களுக்கும், வயோதிகர்களுக்கும் தேவையான தேவ ஆலோசனையை வழங்கும்படி பவுலால் தீத்து பணிக்கப்பட்டார்.

## வாழ்வதற்கான உபதேசம்

# சமநிலையான

# Balanced

*Dean Kelly*

**நா**ம் சம நிலையாக இருப்பது குறித்து அடிக்கடி கேள்விப்படுகிறோம். நாம் சமச்சீரான உணவை உட்கொள்ள வேண்டும் என்று நமக்கு சரியாக சொல்லப்பட்டிருக்கிறது. நாம் ஒரே வகையான உணவை உட்கொள்ளக்கூடாது, நல்ல ஆரோக்கியத்தைப் பேண வேண்டும் என்று சொன்னால் பல வகையான உணவுகளை உள்ளடக்கிய சமச்சீரான உணவை உட்கொள்ள வேண்டும். அதேபோல், நாம் சம நிலையான பிரசங்கம் பற்றியும் கேள்விப்படுகிறோம். அதுவும் ஒரு முக்கியமான பாடம்தான். இந்த ஒரு பாடத்தைக் குறித்து சிந்தித்தபோது அநேக காரியங்கள் என் மனதில் தோன்றின.

முதலாவது, சரீரப்பிரகாரமான ஆகாரத்தில் யாரோ ஒருவர் சமச்சீரான உணவு உண்ணுவதைப் பற்றி பேசும்போது, நம் ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கக்கூடிய பல்வேறு வகையான உணவை உட்கொள்ள வேண்டும் என்று தான் அவர் பொருள்படுகிறார். அங்கே அவர் நல்ல ஆகாரத்தையும், விஷத்தையும் சமச்சீராக உட்கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. அதேபோல் நம் பிரசங்கத்திலும், போதனையிலும் சமநிலையை வகிக்க வேண்டும். இங்கே உண்மையான சமநிலை என்பது தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும் அறிவிக்க வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்( அப்போஸ்தலர்20:26,27). தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல், எல்லா வற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி, நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன்'. நம்முடைய பிரசங்கமும் போதனையும் புகழை அடிப்படையாக வைத்து அமையாமல், சத்தியத்தை அடிப்படையாக வைத்து அமைய வேண்டும்.

இரண்டாவது, பிரசங்கத்திலும், போதனையிலும், எழுத்திலும் சமநிலையில் இருந்து விலகுவது சாத்தியமாய் இருக்கிறபடியால் அது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சில வேளைகளிலே நமக்குப் பிடித்தமான ஒரு தலைப்பை எடுத்துக் கொண்டு அதை மையப்படுத்தி மாத்திரம் பேசி மற்ற காரியங்களைச் சேர்க்காமல் விட்டு விடுகிறோம். பிரசங்கத்திலும் நாம் இந்தப் பிரச்சினையை காண்கிறோம். உதாரணமாக, ஒரு பிரசங்கியார் தனக்குப் பிடித்தமான கிருபை என்னும் தலைப்பை எடுத்துப் பிரசங்கிக்கும்போது, கீழ்ப்படிதலுக்கு கொடுக்க வேண்டிய

முக்னுயத்துவத்தில் தவறி விடுகிறார். அதுபோல் கீழ்ப்படிதல் எனும் தலைப்பை எடுத்து பிரசிங்கிக்கும் போது, தேவனுடைய கிருபைக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தைக் கொடுக்கத் தவறி விடுகிறார். எனவே, இங்கே இது அல்லது அது என்பதல்ல, இரண்டும் என்பது தான் தேவையாருக்கிறது. நாம் தேவனுடைய தயவையும், கண்டிப்பையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆவிக்குரிய பிரகாரமாக நம் அனை வருக்கும் சத்தியத்தின் சமச்சீரான ஆகாரம் அவசியமாய் இருக்கிறது.

மூன்றாவது, அன்பாகவும், அதே நேரத்தில் சத்தியத்தோடு சமரசம் ஆகாமலும் இருப்பதன் மூலமாக சமநிலை வகிக்க வேண்டும். நம்மிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு எப்படி பதிலளிக்க வேண்டும் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். 5 புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக. [கொலோசெயர் 4:5,6]. நாம் என்ன பதில் அளிக்க வேண்டும் என்பதையும் அறிந்திருக்க வேண்டும். கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள். உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்‘[1 பேதுரு 3:15]. யாரோ ஒருவர் அடிக்கடி சத்தியத்திலிருந்து வழி விலகி விடுகிறார். சில வேளைகளில், சத்தியத்தை போதிக்கிறவர்களுடைய மனநிலையின் காரணமாக சிலர் வழி விலகிச் சென்று விடுகிறார்கள். ஒருவர் சுவிசேஷ செய்தியை நிராகரித்து விட்டால் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது, நாம் அதற்குப் பொறுப்பும் அல்ல. இருந்தபோதிலும், மனப்பான்மையின் காரணமாக அல்லது சரியாக யோசித்துப் பேசப்படாத வார்த்தைகளினால் யாராவது சத்தியத்தை விட்டு விலகிச் சென்றால் அதற்கு நாம் தான் பொறுப்பாளிகளாக இருக்கிறோம்.

நான்காவது, கொலோசேயர் நான்காம் அதிகாரம் கிறிஸ்துவுக்கு வெளியே இருப்பவர்களோடு இடைப்படுவது பற்றி பேசுகிறது. ஆனால், அந்த விதி சபைக்குள் இருப்பவர்களுக்கும் பொருந்தும். சில வேளைகளில், சகோதரர்களுக்கிடையே ஏதோ ஒரு காரியத்தில் உடன்பாடு எட்டாத போது ஒருவருக்கொருவர் கடுமையான வார்த்தைகளை வீசுவதை நாம் பார்க்கிறோம். நாம் வேத வாக்கியங்களை புரிந்து கொள்வதற்கு ஒரே வழி தான் இருக்கிறது, நாம் அவைகளை வித்தியாசமாகப் புரிந்து கொள்வதில்லை. ஒவ்வொரு வேத வாக்கியமும் தேவன் கொடுத்த அர்த்தத்தை உள்ளடக்கியிருக்கிறது. நமக்கு ஒரு காரியத்தில் கருத்து வேறுபாடு ஏற்படும் போது, இரண்டு சாத்தியக்கூறுகள் தான் உண்டு:1 நம்மில் ஒருவர் தவறான நிலையில் இருக்கலாம்

மற்றவர்கள் சரியான நிலையில் இருக்கலாம் அல்லது நாம் இரண்டு பேருமே தவறானவர்களாக இருக்கலாம். எப்படிப்பார்த்தாலும் தேவனுடைய வார்த்தையே சரியானது. நாம் பல்வேறுப்பட்ட காரியங் களை விவாதிக்கும்போது, தனிப்பட்ட தாக்குதலிலோ ஒருவருடைய பெயரை குறிப்பிடுவதிலோ ஒரு போதும் ஈடுபடக் கூடாது. கொலோசேயர் 4:6 யை அதாவது ‘உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தின தாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக ‘ என்னும் வசனத்தை கிறிஸ்துவுக்கு வெளியே இருப்பவர்களுக்கு மாத்திரமல்ல சகோதர சகோதரிகள் மத்தியிலும் பயன்படுத்தினால் தவறில்லை என்று நான் நம்புகிறேன். பேதுரு பவுல் தன்னை வெளிப்படையாக கண்டித்த பிறகும் கூட( கலாத்தியர் 2) பிரியமான சகோதரன் என்று அழைக்கிறார். இங்கே பேதுருவின் மனப்பான்மையைப் பாருங்கள். அதோடு கூட, அவர்கள் இருவருக்கும் இடையே இருந்த அன்பு அங்கே அசைக்கப்பட வில்லை என்பது கவனிக்கப்படத்தக்கது. “அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர் களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். எபேசியர் 4:15. அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக் களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது‘ (எபேசியர் 4:15,16).

✝

## சுவிசேஷம் என்பது என்ன?

**நாம் செய்யும் செயல்களாலும்**

**நாம் பேசும் வார்த்தைகளாலும்**

**ஒவ்வொரு நாளும் சுவிசேஷ புத்தகத்தின் ஓர் அதிகாரத்தை நாம் எழுதிக் கொண்டிருக்கிறோம்.**

**மனிதர்கள் அவைகள் உணமையுள்ளவைகளா அல்லது உண்மையற்றவைகளா என்பதை நம்மிடமிருந்து தொடர்ந்து வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது சொல்லுங்கள் உங்களைப் பொறுத்தவரை எது சுவிசேஷம்?**

வாழ்வதற்கான உபதேசம்

# கடினமான நேரங்களை எதிர்கொள்ளுதல்
# Facing adversity

*Tim Lunn*

**நா**ம் விழுந்து போன உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; வேதாகமமும் (ஆதியாகமம் 3) நம் தனிப்பட்ட அனுபவமும் இதை தெளிவாக்குகின்றன. இது உண்மையாயிருக்க, எல்லா ஜனங்களும் ,தேவனுடைய ஜனங்கள் உட்பட எல்லோரும் அவ்வப்போது கடினமான நேரங்களை எதிர்கொள்வதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. சில வேளைகளில் கடினமான வேளைகளை நாமே வரவழைத்துக் கொள்கிறோம். ஆனால், பல வேளைகளிலே நம்முடைய தவறு எதுவுமே இல்லாவிட்டாலும் கூட நாம் கடினமான வேளைகளை எதிர்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. கடினமான அல்லது எதிரான என்பதற்கான பொருள் நமக்குத் தெரியாமல் இருக்காது. நாம் எல்லோரும் இவைகளை அனுபவித்திருப்போம். நம்மில் சிலர் மற்றவர்களை விட அதிகமாக கூட அனுபவித்துயிருப்போம். ஆனால், நம் தேவனுக்கும் உண்மை உள்ளவர்களாக இருந்து கொண்டு கடினமான வேளைகளை எப்படி எதிர்கொள்வோம்? இது சவாலான ஒன்றுதான்.

ஒருவர் தன் வாழ்க்கையில் எப்படிப்பட்ட எதிரான சூழ்நிலையை எதிர்கொள்வார் என்பதை அவர் தீர்மானிக்க முடியாவிட்டாலும் கூட, தனக்கு வரும் எதிரான சூழ்நிலையை எப்படி எதிர்கொள்வது என்பதை அவரால் தீர்மானிக்க முடியும் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இது உண்மையாக இருக்குமானால், கிறிஸ்தவர்கள் கடினமான காலத்தை எதிர்கொள்ளும்போது நினைவில் கொள்ள வேண்டிய வேதாகம உண்மைகள் என்ன?

கிறிஸ்தவர்கள் மாறாத தேவனை சேவிக்கிறார்கள். மல்கியா சொல்வதைக் கேளுங்கள்: '**நான் கர்த்தர், நான் மாறாதவர்**' (மல்கியா 3:6). இது புதிய ஏற்பாட்டிலும் எதிரொலிக்கிறது(எபிரேயர் 13 : 8)இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்'. நாம் கடினமான காலத்தை எதிர்கொள்ளும் போது இவ்வசனங்களை நினைவில் கொள்வது முக்கியமானதாகும்.

தேவனுடைய ஜனங்கள் கடினமான வேளைகளை எதிர்கொள்ளும் போது, பல்வேறுபட்ட உணர்வுகளை அனுபவிக்கிறார்கள். இவைகளுள் சந்தேகம், பயம் மற்றும் சோர்வு போன்றவைகள் உள்ளடக்கம். இவைகள் எல்லாம் ஒருவர் தேவனிடத்தில் கொண்டிருக்கும் விசுவாசத்தின் மீது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். சில வேளைகளில் இவைகள் தேவனுடனான நம்முடைய உறவில் விரிசலை ஏற்படுத்தி, நம்முடைய நித்திய இரட்சிப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும்.

## சந்தேகம்

தேவனுடைய ஜனங்கள் கடினமான வேளைகளின் வழியாக கடந்து வரும்போது தேவன் நம்மை மறந்துவிட்டாரோ, அல்லது நமக்கு உதவி செய்ய அவர் இருக்கிறாரா என்கிற சந்தேகத்தை கூட சில வேளைகளில் எழுப்பி விடுகிறது. இதுதான் சந்தேகத்தின் தாக்கமாய் இருக்கிறது. இந்த சந்தேகத்தை வளர விட்டு, வேறு சில எதிர்மறையான காரியங்கள் உருவாகாமல் இருக்க, இந்த சந்தேகத்தை முற்றிலுமாக போக்க,நாம் நினைவில் கொள்ள வேண்டிய வேதவாக்கியங்கள் உண்டு. அதில் ஒரு வசனம் இவ்விதமாகச் சொல்லுகிறது. **யாக்கோபே, இஸ்ரவேலே, இவைகளை நினை, நீ என் தாசன், நான் உன்னை உருவாக்கினேன், நீ என் தாசன், இஸ்ரவேலே, நீ என்னால் மறக்கப்படுவதில்லை**'(ஏசாயா 44:21). ஒருவேளை இந்த வாக்குத்தத்தம் சிலுவையின் மறுபுறத்தில் வாழ்ந்த ஜனங்களுக்கு செய்யப்பட்டிருந் தாலும் கூட இது இன்று நமக்கும் உண்மையாயிருக்கிறது. 'ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே (எபிரேயர் 6:10). இவ்வசனம் நாம் செய்த, செய்து வருகின்ற நற்கிரியை களைத் தேவன் மறப்பதில்லை என்றும், அந்த வகையில் தேவன் ஒருபோதும் தம்முடைய பிள்ளைகளை மறப்பதில்லை என்பதையும் நினைவூட்டுகிறது.

தேவனுடைய ஜனங்கள் சோர்வடையும் போது, பெலன் குன்றிப் போகும்போது, எல்லாம் கைமீறிப் போய்விட்டது என்று உணரும் போது நாம் சேவிக்கும் தேவன் நம்மோடு இருக்கிறார் என்றும், நாம் தொடர்ந்து முன்னோக்கிச் செல்ல நமக்கு அவர் வல்லமையை தருவார் என்றும் விசுவாசிக்க வேண்டும். விசுவாசம் எப்போதுமே எளிதாக வருவதில்லை. விசுவாசத்திற்கு அப்போது சில தடைகள் வந்து கொண்டு தான் இருக்கின்றன. இருந்தபோதிலும்,தேவனுடைய ஜனங்கள் அந்தத் தடைகளை மேற்கொள்ள தேவன் தொடர்ந்து பெலன் அளித்துக் கொண்டுதான் வருகிறார்.

சிலவேளைகளில், நம்முடைய விசுவாசம் உறுதியாக இருக்க வேண்டிய அளவுக்கு இருப்பதில்லை. நம்முடைய விசுவாசம் அவ்வப் போது தன் மகன் சுகம் பெற வேண்டும் என்பதற்காக இயேசுவிடத்தில் கொண்டு வந்த தகப்பனைப்போல் இருக்கிறது. அதனால்தான் 'இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்'(மாற்கு 9:23). அதற்கு விசுவாச குறைச்சல் உள்ள அந்த தகப்பன் என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும் என்றான். இந்தத் தகப்பன் விசுவாசமே இல்லாத மனிதனாக இருந்திருந்தால் தன் மகனை இயேசுவிடம் கொண்டு வந்திருக்க மாட்டான். விசுவாசம் இருந்தது. ஆனால், இருக்க வேண்டிய அளவுக்கு இல்லாமல் இருந்தது.

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் பல வேளைகளிலே சோர்ந்து போகிறோம். ஆனால், நம் பரலோகத்தின் தேவன் ஒருபோதும் சோர்ந்து போவதில்லை என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இதைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி சொல்வதை கவனியுங்கள். 'பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமில்லை, இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது. சோர்ந்து போகிறவனுக்கு அவர்பெலன் கொடுத்து, சத்துவமில்லாத வனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். ஏசாயா 40:28,29. வேதாகமத்தின் தேவன் தம்முடைய ஜனங்களுக்கு பாதிப்பு உண்டாக்கும் எந்த ஒரு சோதனையையும், துன்பத்தையும், பாடுகளையும் விட மிகப் பெரியவர் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இது ஏசாயாவின் நாட்களிலும் உண்மையாய் இருந்தது, இப்போதும் உண்மையாய் இருக்கிறது.

யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின் நாட்களிலே அவனும், ஜனங்களும் மிகப் பயங்கரமான சத்துருவாகிய அசீரிய ராஜ்யத்தை எதிர் கொண்டார்கள். யூதாவின் குடிமக்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்த எசேக்கியராஜா அவர்கள் சேவித்த தேவனை பற்றி அவர்களுக்கு நினைப்பூட்டினார் (2 நாளாகமம் 32:7,8). இந்த இரண்டு வசனங்களிலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிற சத்தியம் ஒருவேளை பரிச்சயமானவை களாக இருக்கலாம். ஆனால், அப்படி பரிச்சயமாகத்தான் இருக்க வேண்டும். இந்த சத்தியம் தேவனுடைய பரிசுத்த வேதாகமத்தின் பக்கங்களில் எல்லாம் எதிரொலிக்கிறது. பவுல் ரோமாபுரி கிறிஸ்தவர் களுக்கு என்ன சொன்னார் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா? **தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோத மாயிருப்பவன் யார்?** (ரோமர் 8:31). இதை நாம் விசுவாசிக்க வேண்டும்.

**பயம்**

கடினமான காலகட்டங்களை நாம் எதிர்கொள்ளும்போது,பயம் ஏற்படுவது இயற்கைதான். ஆனால் ,கிறிஸ்தவர்கள் பயத்தால் ஆட்கொள்ளப்பட வேண்டிய அவசியமில்லை. பயம் நம்மை முடக்கவோ அல்லது அழிக்கவோ நாம் அனுமதிக்க கூடாது. ஏனென்றால், பலதரப்பட்ட பாடுகளை நாம் எதிர்கொள்ளும்போது நமக்கு உதவுவதாகவும், நம்மோடு இருப்பதாகவும் நாம் சேவிக்கும் மாறாத தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். வேதாகமம் சொல்வதை கவனியுங்கள்: 'நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன், திகையாதே, நான் உன் தேவன், நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன், என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்(ஏசாயா 41:10). தீர்க்கதரிசி 13 ஆம், வசனத்திலும் இதே கருத்தை தெரிவிக்கிறார். 13 உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய

நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன் (ஏசாயா 41:13). தேவனுடைய நிலைத்திருக்கும் பிரசன்னம் மற்றும் உதவி சம்மந்தமான சத்தியம் புதிய ஏற்பாடு முழுவதும் எதிரொலிக்கிறது. இயேசு கிறிஸ்து பரமேறுவதற்கு சற்று முன்பாக அவருடைய சீஷர்களுக்கு மிகப்பெரிய பொறுப்பை கொடுத்தார் (மத்தேயு 28:18–20).

இது பற்றி வேதாகமம் வேறு என்னவெல்லாம் கவனியுங்கள். ' **நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.** அதினாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லலாமே. (எபிரேயர் 13:5,6). இந்த வார்த்தைகள் யோசுவா ஜனங்களை வழி நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட உடனே அவரை உற்சாகப் படுத்தும் விதத்தில் தேவனால் சொல்லப்பட்ட வார்த்தைகளாகும் (யோசுவா1:5). இங்கே எவ்வித சந்தேகம் இன்றி யோசுவா பயந்ததை நம்மால் புரிய முடிகிறது. இருந்தபோதிலும், தேவனுடைய நிலைத்திருக்கும் பிரசன்னத்தைப் பற்றிய வாக்குத்தத்தம் அவருடைய உள்ளத்தில் ஊடுருவி பயத்தைப் போக்கியது. தேவனுடைய ஜனங்கள் எல்லோருக்குமான இந்த வாக்குத்தத்தத்தின் மீதான விசுவாசத்திற்கு இன்றும் வல்லமை உண்டு.

ஒரு சந்தர்ப்பத்தில் யவீரு என்னும் பேர் கொண்ட ஒரு மனிதன் இயேசுவினிடத்தில் வந்தான். அவனுடைய குமாரத்தி மிகவும் சுகவீனமாயிருந்து மரணத்தருவாயில் இருந்தபடியால் இவன் நம்பிக்கை அற்ற நிலையிலும், பயத்திலும் இருந்தான். இயேசு இந்த யவீருவின் வீட்டுக்கு வருவதற்கு முன்பாகவே ஜனங்கள் இவரிடத்தில் மிக துக்ககரமான செய்தியை கொண்டு வந்தார்கள். '...உம்முடைய குமாரத்தி மரித்துப் போனாள், இனி ஏன் போதகரை வருத்தப்படுத்துகிறீர் என்றார்கள்'. அதற்குப் பிரதியுத்தரமாக இயேசு கிறிஸ்து மிகுந்த துக்கத்தில் இருந்த யவீருவிடம் 'பயப்படாதே விசுவாசமுள்ளவனாய் இரு என்றார்' (மாற்கு 5:36). தேவனுடைய ஜனங்கள் தேவனைச் சார்ந்து ,அவரை தொடர்ந்து விசுவாசித்தால் பயத்தால் அவர்களை ஒருபோதும் அழிக்கவே முடியாது. இவ்விதமாக யவீருவின் விண்ணப்பத்திற்கு இயேசு கிறிஸ்துவால் பதில் அளிக்கப்பட்டது.

## சோர்வு

சோர்வு என்னும் வார்த்தை நம்பிக்கையின்மை, உற்சாகமின்மை போன்ற பொருள்களை கொடுக்கிறது. கிறிஸ்தவர்களும் கூட கடினமான நேரங்களை எதிர்கொள்ளும் போது சோர்வடைவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளது. மாபெரும் தேவ மனிதர்கள் கூட எதிரான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும்போது சோர்வடைந்து இருக்கிறார்கள். மோசே சோர்வின் உச்சியில் தேவனிடம் சொன்ன வார்த்தைகளை கவனியுங்கள்' **அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: நீர் இந்த ஜனங்கள் எல்லாருடைய பாரத்தையும் என்மேல் சுமத்தினதினால், உமது அடியா னுக்கு உபத்திரவம் வரப்பண்ணினதென்ன, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடையாதேபோன தென்ன? இவர்களுடைய பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக் கொடுத்த தேசத்துக்கு நீ இவர்களை முலையுண்கிற பாலகனைத் தகப்பன் சுமந்துகொண்டுபோவதுபோல, உன் மார்பிலே அணைத்துக் கொண்டுபோ என்று நீர் என்னோடே சொல்லும்படி இந்த ஜனங்களையெல்லாம் கர்ப்பந்தரித்தேனோ? இவர்களைப் பெற்றது நானோ?** '(எண்ணாகமம் 11:11,12). மோசே மிகவும் சோர்வடைந்து தான் தேவனிடம் இந்த வார்த்தைகளைப் பேசி இருக்கிறார். அவர் இந்த வார்த்தைகளை பேசிவிட்டு தேவனிடம் இவ்விதமாக விண்ணப்பித்தார் (எண்ணாகமம் 11:14,15). மற்றொரு சந்தர்ப்பத்தில், எலியா தீர்க்கதரிசி மிகவும் சோர்வடைந்து இவ்விதமாக ஜெபித்தார். "அவன் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம்போய், ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி: **போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும், நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று** சொல்லி, '(1 இராஜாக்கள் 19:4). இந்த மாபெரும் தேவ மனிதன் சரியானதற்கு நின்றதற்காகப் பலவிதமான பாடுகளை எதிர் கொண்டார். இதனால் தான் ஒருவர் மாத்திரமே விசுவாசமுள்ளவராக வாழ்வதாக உணர்ந்தார். தேவன் மோசேயையோ அல்லது எலியாவையோ இரட்சிக்கவில்லை. மாறாக, அவர்களுடைய விண்ணப்பங்களுக்கு செவி கொடுத்து, அவர்களுடைய தேவைகளை சந்தித்து உதவினார். இந்த இரு தேவ மனிதர்களுக்கு மாத்திரமல்ல, இன்னும் அநேக தேவ மனிதர்களுக்கு அன்றும் சரி, இன்றும் சரி தேவன் அவர்களுடைய தேவைகள் எல்லாவற்றையும் சரியான நேரத்திலே சந்தித்து அவர்களை காப்பாற்றி இருக்கிறார்.

# செயல்பாடா அல்லது சாதனையா ?

# Activity or Accomplishment?

*Robert johnson*

John Henry Fabre என்பவர் 1823–1915 காலகட்டத்தில் வாழ்ந்த ஒரு பிரெஞ்சு பூச்சியியல் நிபுணர். அவர் பூச்சியியல் துறையில் பிரசித்தி பெற்ற ஒரு நிபுணராக இருந்தார். அவர் பலரால் நவீன பூச்சியியல் துறையின் தந்தையாக கருதப்படுகிறார். இன்று வரை நீடித்திருக்கும் அவருடைய புகழுக்கான காரணங்களில் ஒன்று அவருடைய தனித்துவம் வாய்ந்த போதிக்கும் திறனும், பூச்சிகளின் வாழ்வு பற்றிய அவருடைய எழுத்து நடையும்தான். இந்த பூச்சியியல் வல்லுநர் பூச்சிகளின் வாழ் வரலாற்றைப் பற்றி விவரமாகவும், மிக நுணுக்கமாகவும் எழுதுவதில் கைதேர்ந்தவர். அவர் பூச்சிகளைப் பற்றி எழுதிய கட்டுரைகளை எல்லாம் தொகுத்து '**விஞ்ஞான உண்மைக்காக என் ஆர்வம்**' என்னும் புத்தகத்தை சாதாரண மொழி நடையில் எழுதி எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.



பூச்சியியல் வல்லுநரான இந்த John Henry Fabre இரை தேடி ஊர்வலம் போல் ஊர்ந்து போகும் கம்பளிப் பூச்சிகளின் வாழ்க்கை முறையையும் பழக்க வழக்கங்களையும் உற்று நோக்கினார். அதன் பிறகு, ஊர்ந்து போகும் கம்பளிப் பூச்சிகளை வைத்து வழக்கத்திற்கு மாறான ஒரு சோதனை ஒன்றை நடத்தினார். ஒரு பூந்தொட்டியின் நடுவில் இந்த கம்பளி பூச்சிகளை வரிசையாக வட்ட வடிவில் வைத்து, அந்த பூந்தொட்டியின் நடுவில் பைன் மர இலைகளை வைத்தார். இந்த இலை கள் தான் கம்பளிப் பூச்சிகளின் பிரதான ஆகாரமாகும். இப்போது இந்த கம்பளிப் பூச்சிகள் வட்ட வடிவிலான அந்த பூந்தொட்டியை மணிக் கணக்கில் சுற்றின, நாள் கணக்கில் சுற்றின, ஏழு

நாட்கள் சுற்றிலும் வந்தன. கடைசியாக, அவைகளெல்லாம் செத்து மடிந்தன. ஆறு அங்குல இடைவெளியில் ஆகாரம் இருந்தும் கூட, இந்த கம்பளிப் பூச்சிகளால் அந்த ஆகாரத்தை உட்கொள்ள முடியவில்லை. இந்த கம்பளிப் பூச்சிகள் தொடர்ச்சியாக, சுறுசுறுப்பாக அந்த பூந்தொட்டியைச் சுற்றி சுற்றி வந்தும் உயிர் வாழ அவசியமான ஆகாரத்தை அவைகளால் எடுக்க முடியவில்லை.

இப்படியாக அநேகர் வாழ்வில் பல காரியங்களைப் புரிந்து கொள்ளாமல் குழம்பிக் கொள்கிறார்கள். நாம் இந்த வாழ்க்கையில் என்ன செய்கிறோம் என்பதைப் பற்றி அக்கறைப்படுவது மாத்திரமல்ல, அந்த செயல்கள் நம்மை எங்கே கொண்டு போகிறதென்றும் அக்கறைப்பட வேண்டும். இந்தக் கம்பளி பூச்சியை போல சிலர் ஏதேதோ செய்து சுற்றித் திரிகிறார்கள், ஆனால், முக்கியமானதை கோட்டை விட்டு, வாழ்க்கை யின் லட்சியத்தைப் புரிந்து கொள்ளாமலே மரித்துப் போகிறார்கள். ஒரு கிறிஸ்தவனைப் பொறுத்தவரை கிறிஸ்து தான் ஜீவன் [பிலிப்பியர் 1:21].

நாம் இந்த உலகில் வாழ்வதற்கான நோக்கமே நித்திய ஜீவன் தான் [பிலிப்பியர் 3:20]. நாம் இந்த உலகத்தில் ஆவிக்குரிய பிரகாரமாக வாழா விட்டால், தேவனுக்கு முதலிடத்தை நம் வாழ்வில் கொடுக்காவிட்டால், நம்முடைய செயல்கள் எல்லாமே வீணாகிவிடும். நாம் பார்ப்பதற்கு பரபரப்பாக இருப்பது போல் தோன்றலாம். ஆனால், வாழ்க்கை எதைப் பற்றியது என்பதை புரிந்து கொள்ளத் தவறி விடுவோம்.

நாம் இந்த கம்பளிப் பூச்சிகளிடமிருந்து ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் பல திட்டங்களை தீட்டி, அங்கும் இங்கும் ஓடி, ஓய்வெடுக்க ஒரு நிமிடம் கூட இல்லாமல் பல காரியங்களில் ஈடுபடலாம். இவைகளால் நம் விலை உயர்ந்த நேரம்தான் வீணடிக்கப்படும். அநேகமாக, சாலமோன் ஞானி தான் இக்கருத்தை சிறப்பாக வெளிப் படுத்தி இருக்க வேண்டும்.“ என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடைபண்ணவில்லை, என் இருதயத்துக்கு ஒரு சந்தோஷத்தையும் நான் வேண்டாமென்று விலக்கவில்லை. நான் செய்த முயற்சிகளிலெல்லாம் என் மனம் மகிழ்ச்சி கொண்டிருந்தது, இதுவே என் பிரயாசங்கள் எல்லாவற்றினாலும் எனக்கு வந்த பலன். என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன், இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமாயிருந்தது, சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை. [பிரசங்கி 2:10–11]. நாம் நித்திய ஜீவனை பெற்றுத் தரும் இனிவரும் உலகத்திற்காக வாழ வேண்டும். ‘நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு 1 தீமோத்தேயு 6:19.

இந்தக் கம்பளி பூச்சிகள் சுற்றி சுற்றிப் போனால் இலக்கை அடைந்து விடலாம் என்று தங்களுக்குத் தெரிந்தவைகளை செய்தன. ஆனால், அவைகள் இலக்கை அடையவில்லை. அவைகளை விட காரியங்களை ஞானமாகச் செய்யும் ஆற்றலை நாம் பெற்றிருக்கிறோம். அப்படித் தானே? எனவே, செயல்பாட்டையும், நிறைவேற்றுதலையும் குழப்பிக் கொள்ள வேண்டாம், சரியானதை நாம் செய்து கொண்டே இருக்க வேண்டும்.'வார்த்தைகளினாலாவது கிரியைகளினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள் (கொலோசெயர் 3:17).

பல விதங்களில் பார்க்கும்போது, ஊர்ந்து செல்லும் இந்த கம்பளிப் பூச்சிகள், நம் பலருடைய வாழ்க்கையே பிரதிபலிக் கின்றன. நாம் தொடர்ச்சியாக பரபரப்பாக பலவிதமான காரியங்களில் ஈடுபடுவது எளிதானது தான். இங்கே கேள்வி என்னவென்றால், உண்மையாகவே நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்? உண்மையாகவே, நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? பலர் செயல்பாட்டுக்கும், நிறை வேற்றுதலுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் போட்டு குழப்பிக் கொண்டு வாழ்க்கையில் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றுவதில் பரபரப்பாக இருக்கிறார்கள். ✝

---

## தேவனின் நாமங்கள்

எல் எமெத் - **சத்தியபரன்** (சங்கீதம் 31:5)

எல் ரஹீம் - **இரக்கமுள்ள தேவன்** (உபாகமம் 4:31)

எல் சேலா - **கன்மலையாகிய தேவன்** (சங்கீதம் 42:9)

எல் கிப்போர் - **வல்லமையுள்ள தேவன்** (ஏசாயா 10:21)

எல் மஉஸ் - **என் அரணான தேவன்** (II சாமுவேல் 22:33)

எல் ஹக்காதோல் - **மகத்துவமுள்ள தேவன்** (உபாகமம் 10:17)

அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை

# ஒவ்வொரு நாளும் ஜெபிக்க வேண்டிய 4 ஜெபங்கள்.

## 4 prayers to pray every single day


*Jack Wilkie*

அமெரிக்க ஜனாதிபதியான George Washington யைப் பற்றி எல்லாவற்றையும் நான் உங்களுக்கு விவரமாக அறிவிக்க கூகுள் தேடு பொறியைத் தட்டினால் போதுமானது . அப்படிச் செய்யும்போது அமெரிக்க ஜனாதிபதியின் பிறந்த நாளையும், பிறந்த இடத்தையும், அவருடைய பெற்றோரின் பெயர்களையும், மனைவியின் பெயரையும், அவருடைய சாதனைகளைப் பற்றியும் என்னால் சொல்ல முடியும்.

இருந்த போதிலும் கூட, George Washingtonயைப் பற்றி முழுமையாக தெரியும் என்று ஒருவரால் சொல்லவே முடியாது. அப்படிச்சொல்ல முடியுமா என்ன? அதற்குப் பதிலாக, அவரைப் பற்றி எனக்குத் தெரியும் என்று வெறுமனே தான் சொல்ல முடியும்.

ஆனால், என் மனைவியைப் பற்றி எல்லா தகவல்களையும் என்னால் துல்லியமாகச் சொல்ல முடியும். நான் என் மனைவியை உண்மையாகவே முழுமையாக அறிந்திருக்கிற படியால் அதைக் குறித்து யாரும் சந்தேகப்பட மாட்டார்கள். என்னால் என் மனைவியின் ஆள்த்துவ பற்றியும், வேறுபட்ட சூழ்நிலைகளில் அவள் எப்படியாக நடந்து கொள்கிறாள் என்பது பற்றியும் என்னால் துல்லியமாகச் சொல்ல முடியும்.

பெரும்பாலான சமயங்களில் நாம், தேவனைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளாமலேயே, அவரைப் பற்றி எங்களுக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லிக் கொள்கிறோம்.



நாம் அனுதினம் வேதத்தை வாசிக்கலாம், தேவனிடம் விண்ணப்பங்களை ஏறெடுக்கலாம். அப்படி இருந்தும் கூட, நம் அன்றாட வாழ்வில் தேவனை முழுமையாக அறியாமலும், அவருடைய பிரசன்னத்தை உணராமலும் இருப்பதற்கு வாய்ப்புண்டு. பல சந்தர்ப்பங்களில் நமக்கும், தேவனுக்கும் இடையே உள்ள இடைவெளி அதிகரித்து, நாம் வெகு தூரமாய் இருப்பதை நாம் உணர்ந்து இருப்போம்.

இதற்கான பிரதான காரணங்களில் ஒன்று, நம்முடைய ஜீவியங்களில் கிரியை செய்வதை நாம் உணராமல் இருப்பது தான். நம் அன்றாட வாழ்வில் நாம் அவருக்காக வாழாமல் இருப்பதினால் தான் அதை உணராமல் இருக்கிறோம். நம்முடைய நோக்கங்களில் தேவன் பங்கு வைக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். ஆனால், வேதாகமம் தேவனுடைய நோக்கத்தில் நாம் பங்கு வகிக்கும் வாய்ப்பு நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறதாகச் சொல்கிறது. கீழ்க்காணும் நான்கு ஜெபங்களை அனுதினம் ஏறெடுப்பதன் மூலமாக தேவனுடனான ஆவிக்குரிய உறவில் மிகப்பெரிய வளர்ச்சி ஏற்படும்.

## ரகசிய பாவங்கள்

நான் ரகசியமாக செய்து கொண்டிருக்கும் பாவங்களை நான் காண எனக்கு உதவி செய்யும். சங்கீதக்காரன் சங்கீதம்19:12 மற்றும் 139:23,24 வசனங்களில் ஜெபித்தது போல நாம் ஜெபித்தால், தேவனுடனான நம்முடைய நடையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இது நாம் தாழ்மையாய் இருக்கவும், கிறிஸ்தவ வாழ்வில் வளர்வதற்கு இன்னும் இடமிருக்கிறது என்பதையும் கற்றுத் தருகிறது. இது இயேசுவின் கிருபையையும், அனுதினம் அதை நாம் சார்ந்து இருக்கிறோம் என்பதையும் நினைவூட்டுகிறது. நமக்கான தேவனுடைய நோக்கம் நம்மைப் பரலோகத்திற்குக் கொண்டு செல்வது மாத்திரமில்லாமல், நாம் கிறிஸ்துவைப்போல் மாற வேண்டும் என்பதாக இருக்கிறது (ரோமர் 8:29). அதற்கான உதவிக்காக நாம் தேவனைத் தேடும் போது, மாற்றத்திற்கான, வளர்ச்சிக்கான வாய்ப்புகளை நாம் ஏராளமாய் காண முடியும். சுருக்கமாகச் சொன்னால், இவ்வகையான ஜெபத்தை நாம் திரும்பத் திரும்ப ஏறெடுக்கும் போது, தேவனுடைய கரம் நம் மீது இருப்பதை காண முடியும்.

## உற்சாகப்படுத்துதல்

நான் உற்சாகப்படத்தக்க சக கிறிஸ்தவர்களைக் காண உதவி செய்யும். ஒருவரிலொருவர் அன்பாய் இருங்கள் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யுங்கள் போன்ற கட்டளைகள் எல்லாம் புதிய ஏற்பாடு முழுவதும் பரவியிருப்பதை நம்மால் பார்க்க முடியும். அவைகள் நம்மை உற்சாகப்படுத்துவது மாத்திரமில்லாமல், கிறிஸ்தவம் என்பது ஒரு தனிப்பட்ட முயற்சியுடைய மார்க்கமல்ல என்பதையும் போதிக்கிறது. நாம் கிறிஸ்துவினிடத்தில் கொண்டிருக்கும் அன்பு, நம்முடைய இருதயங்களை நிரப்பி, நமக்குத் தந்திருக்கிற குடும்பத்தை நேசிக்க வழி வகுக்கிறது. மேலும், இந்த அன்பு, சக கிறிஸ்தவர்கள் இடத்திலான நம்முடைய பொறுப்புகளை நினைப்பூட்டுகிறது.

## சுவிசேஷத்தை அறிவித்தல்

நான் சுவிசேஷத்தை அறிவிக்கத்தக்கதாக ஜனங்களைக் காண எனக்கு உதவி செய்யும் [மத்தேயு 28:19 மற்றும் மாற்கு 16:15] வசனங்களில் இடம் பெற்றுள்ள உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்னும் பிரதான கட்டளை தேவனுடைய ஜனங்கள் ஊழிய வாஞ்சை உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை நமக்குப் போதிக்கிறது. நாம் எங்கெல்லாம் போகிறோமோ, அங்கெல்லாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் சுமந்து செல்கிறோம். நாம் இந்த ஜெபத்தை எப்போதெல்லாம் ஏறெடுக்கிறோமோ, அப்போதெல்லாம் நாம் இந்த கடமையை ஏற்றுக் கொண்டு நிறைவேற்ற தேவனுடைய உதவியைக் கோருகிறோம்.

நற்செய்தியைப் பணி கடினமானதாக இருக்கிறபடியால், பிற்பாடு என்று சொல்லி ஒத்தி வைத்து விடுகிறோம். நாம் மோசே போல துரிதமாக சாக்குப்போக்குகளை சொல்லலாம். ஆனால், நம்முடைய நாவுகளை உண்டாக்கினது தேவன் தான் என்பதை மறந்து விடுகிறோம். அதைப்போல் செய்தியைத் தருகிறதே தேவனாக இருக்கிறபடியால், நம்மோடு இருந்து தம்முடைய வல்லமையை வெளிப்படுத்துவார். எனவே, இத்தகைய ஜெபங்களை ஏறெடுப்பது ஒவ்வொரு காரியத்தையும் மனதில் வைத்து, சுவிசேஷப் பணியில் ஊக்கமாய் ஈடுபட நம்மை நினைப்பூட்டும்.

ஒரு குறிப்பிட்ட மக்களின் பெயர் சொல்லி அவர்களுக்காக ஜெபியுங்கள். இப்படிச் செய்வது கிறிஸ்துவை அவர்களோடு பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பங்களைத் தேட வழி வகுக்கும். நாம் இவ்விதமாக ஜெபிக்கும்போது, நாம் யாருக்காக ஜெபிக்கிறோமோ அவர்களுடைய ஆத்துமாக்கள் விலைமதிப்புள்ளதென்றும், அவர்களுடைய நித்தியம் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் கருதுகிறோம்.

## சார்ந்திருத்தல்

உம்மோடு இன்னும் நெருக்கமாக கிட்டிச்சேர எவைகள் எல்லாம் அவசியப்படுகிறதோ அவைகளை எல்லாம் செய்யும் ஒரு நபர் செய்யும் மிக கடினமான ஜெபம் இதுவாகத்தான் இருக்க முடியும். நாம் இதை தேவனிடம் கேட்கும் போது, நம்முடைய சௌகரியங்களை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு, தேவனுக்கு நம்மை முற்றிலுமாக அர்ப்பணிக்க ஆயத்தமாக வேண்டும். இது 2 கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்தில் பவுல் கிறிஸ்தவனிடத்தில் நெருக்கமாக கிட்டிச் சேர்க்கும் எந்த ஒரு பெலவீனம், உபத்திரவமும் பாடுகளும் நல்லது தான் என்று சொன்னார். இதைத்தான் பவுல் என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார் [2 கொரிந்தியர் 12:7].

பவுல் சொன்னது போல நாம் எல்லோரும் சொல்ல முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், உண்மையாகவே இணக்கமாக நடக்க விரும்பினால், தேவனுக்காக எந்த விலையையும் கொடுக்க விரும்பினால் இந்த விண்ணப்பமானது நம் ஜெபத்தின் அன்றாட அம்சமாகிவிடும். ஆம், இடைப்பட்ட காலத்தில் நாம் சில சௌகரியங் களை இழந்து போக நேரிடும். ஆனால், இவ்வுலகில் எதுவுமே ஈடுசெய்ய முடியாத தேவனுடனான நெருக்கத்தை நாம் பெற்றுக் கொள்வோம்.

நாம் தேவனைப் பற்றி எப்படிப் பேசுகிறோம் என்பது நம் தனிப்பட்ட முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டதாகும். தேவன் நமக்கு உதவி செய்வதும், நம்மோடு நெருக்கமாக இருக்கும்படியாய் வாக்குத்தத்தம் செய்திருப்பதும் அவருக்காக வாழ எடுக்கும் முயற்சிகளோடு சம்பந்தப்படுத்தப்படுகிறது. நாம் உண்மையாகவே தேவனை அறிய விரும்பினால், அவருடைய கரம் நம் ஜீவியங்களில் இருப்பதைக் காண விரும்பினால், நாம் செய்யும் மிக சிறந்த காரியம் நம்மை நாம் அவருக்கு முற்றிலுமாக அர்ப்பணித்து, அவர் நம் ஜீவியங்களுக்கு வழிகாட்ட அனுமதிப்பது தான். ✝

## நல்ல ஊழியக்காரன்

**ஒரு நல்ல ஊழியக்காரன் கீழ்ப்படிகிறவனாயிருக்கிறான்**
**(எபிரெயர் 5:8)**

**ஒரு நல்ல ஊழியக்காரன் ஜாக்கிரதையுள்ளவனாயிருக்கிறான்**
**(Iதீமோத்தேயு 2:15)**

**ஒரு நல்ல ஊழியக்காரன் தாழ்மையுள்ளவனாயிருக்கிறான்**
**(Iபேதுரு 5:5)**

**ஒரு நல்ல ஊழியக்காரன் தைரியமுள்ளவனாயிருக்கிறான்**
**(யோவான் 1:6,7)**

**ஒரு நல்ல ஊழியக்காரன் தன் எஜமானை மாத்திரம் பிரியப்படுத்துகிறான் (கலாத்தியர் 1:10).**

# நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்கள்?

1. ஞானமுள்ள மகன் தகப்பனுடைய போதகத்தைக் கேட்கிறான்: பரியாசக்காரனோ கடிந்துகொள்ளுதலுக்குச் செவிகொடான். [நீதிமொழிகள் 13:1]

2. மனுஷன் தன் வாயின் பலனால் நன்மையைப் புசிப்பான்: துரோகிகளின் ஆத்துமாவோ கொடுமையைப் புசிக்கும். [நீதிமொழிகள் 13:2]

3. தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்: தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான். [நீதிமொழிகள் 13:3]

4. சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது: ஜாக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்மாவோ புஷ்டியாகும். [நீதிமொழிகள் 13:4]

5. நீதிமான் பொய்ப்பேச்சை வெறுக்கிறான்: துன்மார்க்கனோ வெட்கமும் இலட்சையும் உண்டாக்குகிறான். [நீதிமொழிகள் 13:5]

6. நீதி உத்தம மார்க்கத்தானைத் தற்காக்கும்: துன்மார்க்கமோ பாவியைக் கவிழ்த்துப்போடும். [நீதிமொழிகள் 13:6]

7. ஒன்றுமில்லாதிருக்கத் தன்னைச் செல்வனாகப் பாராட்டுகிறவனும் உண்டு; மிகுந்த செல்வமிருக்கத் தன்னைத் தரித்திரனாகப் பாராட்டுகிறவனும் உண்டு. [நீதிமொழிகள் 13:7]

8. மனுஷருடைய ஐசுவரியம் அவன் பிராணனை மீட்கும்: தரித்திரனோ மிரட்டுதலைக் கேளாதிருக்கிறான். [நீதிமொழிகள் 13:8]

9. நீதிமான்களின் வெளிச்சம் சந்தோஷிப்பிக்கும்; துன்மார்க்கரின் தீபமோ அணைந்துபோம். [நீதிமொழிகள் 13:9]

10. அகந்தையினால்மாத்திரம் வாது பிறக்கும்: ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்திலோ ஞானம் உண்டு. [நீதிமொழிகள் 13:10]

11. வஞ்சனையால் தேடின பொருள் குறைந்துபோம்: கைப்பாடாய்ச் சேர்க்கிறவனோ விருத்தியடைவான். [நீதிமொழிகள் 13:11]

12. நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப் பண்ணும்: விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம்போல் இருக்கும். [நீதிமொழிகள் 13:12]

13. திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான்: கற்பனைக்கு பயப்படுகிறவனோ பலனடைவான். [நீதிமொழிகள் 13:13]

14. ஞானவான்களுடைய போதகம் ஜீவ ஊற்று: அதினால் மரணக்கண்ணிகளுக்குத் தப்பலாம்;. [நீதிமொழிகள் 13:1–14].

# தலைமுறைகள்

## Generations

*Rebecca Rushmore*

சில வாரங்களுக்கு முன்பாக, நான் ஞாயிறு காலை வேத பாட வகுப்பை நடத்துவதற்கு முன்பாக புதிதாக சில பிள்ளைகளை அந்த வகுப்பில் சேர்ப்பதற்காக கதவைத் திறந்து கொண்டு ஒருவர் உள்ளே வந்தார். அது வேறு யாரும் அல்ல, எனக்கு நன்றாகப் பரிச்சயமான ஒரு மூதாட்டி தான். தன் பேரக் குழந்தைகளை அழைத்துக் கொண்டு ஞாயிறு காலை வேத பாட வகுப்பிற்குள் நுழைந்தார். சுமார் பத்து வருடங்களுக்கு முன்பாக, இந்த மூதாட்டியும், அவருடைய கணவர் மற்றும் இரண்டு குழந்தைகளும் எங்கள் பிராந்திய சபையின் அங்கத்தினர்களாகத்தான் இருந்தார்கள். இப்போது அவர்கள் வேறொரு மாநிலத்தில் குடியேறி விட்டார்கள். அவர்கள் எங்கள் பிராந்திய சபையின் அங்கத்தினர்களாக இருந்தபோது, இந்த மூதாட்டியின் மகளுக்கு வேத பாட வகுப்பில் நான் போதித்தேன். இப்போது, மகளின் பிள்ளைகளுக்கும் போதிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது.

வகுப்பு முடிந்த பிறகு, அந்த சிறுபிள்ளைகளின் தாயாரை வாழ்த்தும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது, அப்போதுதான் அப்பெண்ணின் குடும்பத்தார் அந்த பட்டணத்திற்கு வந்ததற்கான காரணத்தை என்னால் கண்டுபிடிக்க முடிந்தது. அந்தச் சிறு பிள்ளைகளின் கொள்ளு தாத்தாவும், கொள்ளு பாட்டியும் அதே பட்டணத்தில் தான் வாழ்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அங்கே இருக்கும் பிராந்திய சபையின் அங்கத்தினர்களாகவும் இருக்கிறார்கள். அச்சிறுபிள்ளைகளும், அவர்களின் பெற்றோரும் அப்பட்டணத்தின் வழியாய் கடந்து போன போது ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்கு முந்தைய சனிக்கிழமை இரவு பட்டணத்தில் தங்கி விட்டு ஞாயிறு காலை ஆராதனை வேளையில், மூத்த தலைமுறையினரை ஆச்சரியப்படுத்த விரும்பினார்கள். ஆராதனையில் அறிக்கையெல்லாம் வாசிக்கப்பட்ட பிறகு, ஒரு குடும்பத்தை சேர்ந்த நான்கு தலை முறையினரும் தேவனை ஆராதிக்க அங்கே கூடியிருப்பதைக் கண்டு ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனேன். சமூக ஊடகங்களில் மூன்று தலைமுறையினருடைய வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களை அடிக்கடி நான் பார்த்திருக்கிறபடியால், இந்தக் குடும்பம் மூன்று தலைமுறைகளாக தேவனுக்கு உண்மையுள்ள குடும்பம் என்பதையும், நான்காவது தலைமுறையும் ஆவிக்குரிய பயிற்சியில் இருப்பதையும் அறிந்து கொண்டேன். இந்த உண்மை வேதாகமத்திலிருந்து அநேகக் காரியங்களை என் மனதில் கொண்டு வந்தது.

**சரியாக செய்த தலைமுறைகள்**

ஆதியாகமம்18:19 ல் தேவன் ஆபிரகாமைப் பற்றி இவ்விதமாகச் சொன்னார். கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும், நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார். (ஆதியாகமம் 18:19). ஆபிரகாம் தேவனுக்கு உண்மையுள்ளவராய் இருந்தார் (எபிரேயர்11:8-10); யாக்கோபு 2:23). ஆபிரகாம் தன் விட்டாரும் தேவனுக்கு உண்மையாய் இருக்க வேண்டும் என்று போதித்தார். உதாரணமாக, ஆபிரகாமின் வேலைக்காரனுடைய விசுவாசத்தை ஆதியாகமம் 24வது அதிகாரத்தில் நாம் காண முடியும். ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கும், பேரனாகிய யாக்கோபும் தேவனுக்கு கீழ்ப்படிந்து, தேவன் ஆபிரகாமுக்குச் செய்த அதே வாக்குத்தத்தத்தை பெற்றுக் கொண்டார்கள். (ஆதியாகமம்12:1-3;26:1-7; 28:12-15).

உபாகமம்6:1-3 வசனங்களில் மோசே இஸ்ரவேல் ஜனங்களிடம் அவர்களுடைய வாழ்நாட்கள் நீடித்திருக்கும்படி பிள்ளைகளுக்கு தேவனுடைய கற்பனைகளை போதிக்கும்படியும் , அவைகளை அவர்கள் கைக்கொள்ளும்படியாகவும் கட்டளையிட்டார். ‘உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம், நீயும் உன் குமாரனும் உன் குமாரத்தியும், நான் உனக்கு விதிக்கிற அவருடைய எல்லாக் கற்பனைகளையும், கட்டளைகளையும், கைக்கொள்ளுகிறதினாலே உன் வாழ்நாட்கள் நீடித்திருக்கும்படி, நீங்கள் சுதந்தரிக்கப் போகிற தேசத்திலே கைக்கொள்வதற்காக, உங்களுக்குப் போதிக்க வேண்டும் என்று உங்கள் தேவனாகிய கர்த்தர் கற்பித்த கற்பனைகளும் கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே. இஸ்ரவேலே, நீ நன்றாயிருப்பதற்கும், உன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி, பாலும், தேனும் ஓடுகிற தேசத்தில் நீ மிகவும் விருத்தியடைவதற்கும், அவைகளுக்குச் செவிகொடுத்து, அவைகளின்படி செய்யச் சாவதானமாயிரு‘ (உபாகமம் 6:1-3).

தேவன் தம்முடைய ஜனங்களின் ஜீவியங்கள் தேவனுடைய கற்பனைகளைப் போதிப்பது மற்றும் அவைகளுக்கு கீழ்ப்படிவதை சுற்றி இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவின் விசுவாசத்தை மெச்சி எழுதும் போது இவ்விதமாக எழுதுகிறார். ‘அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது. அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்‘(2 தீமோத்தேயு 1:5). இது தேவனுடைய வார்த்தைகளை தலைமுறை தலைமுறையாக போதித்ததினால் உண்டான விசுவாசத்திற்கு மிகச் சிறந்த உதாரணமாகும்.

## தவறாக செய்த தலைமுறைகள்

லோத்து தேவனுடைய சித்தத்தை செய்ய முயற்சித்த ஒரு மனிதனாக இருந்தார் [ 2 பேதுரு 2:7-8] ஆனால், அவர் தன்னுடைய பிள்ளைகளை உலகத்தில் இழந்து விட்டார். ஆதியாகமம்19 ஆம் அதிகாரம் சோதோம் பட்டணத்தில் வசிக்க விரும்பிய லோத்தின் பிள்ளைகளின் சோககரமான முடிவை விவரிக்கிறது. இதே அதிகாரத்தின் இறுதி பகுதி லோத்தின் இரு குமாரத்திகளின் தவறான தெரிந்து கொள்ளுதலை விரிவாக விவரிக்கிறது. லோத்தின் பிள்ளைகள் லோத்தின் நீதியை ஏன் பின்பற்ற வில்லை என்று விளங்கவில்லை. அநேகமாக பிள்ளைகள் மீது லோத்தின் தாக்கத்தைவிட, சுற்றிலும் இருந்த ஜனங்களை துன்மார்க்கம் அதிக தாக்கத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும்.

ஒட்டுமொத்த இஸ்ரவேல் ஜனங்களும் திரும்பத் திரும்ப தேவனை விட்டு விலகிச் சென்றார்கள். யோசுவா மற்றும் அவருடைய சந்ததியின் மரணத்திற்குப் பிறகு ஜனங்கள் கர்த்தரை விட்டு விட்டார்கள் [யோசுவா2:7-11]. ஒவ்வொரு தலைமுறையும் அதன் முந்தைய தலைமுறையின் தவறுகளிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளத் தவறிவிட்டன. அதைப்போல தலைமுறைகள் தங்கள் வருங்கால தலைமுறைகளுக்கு போதிக்கத் தவறிவிட்டன. எனவேதான், ஓசியா தீர்க்கதரிசி இவ்விதமாகச் சொன்னார். '**என் ஜனங்கள் அறிவில்லாமை யினால் சங்காரமாகிறார்கள், நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்து விடுவேன், நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய். ஆகையால், நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன்**'[ஓசியா 4:6].

கர்த்தருடைய ஆசாரியனாகிய ஏலிக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். ஓப்னி , பினெகாசு என்னும் பெயர்கள் கொண்ட அவர்களும் ஆசாரியர்களாக இருந்தார்கள்[ 1 சாமுவேல் 1:3]. மேலும், அவர்கள் துன்மார்க்கர்களாய் இருந்திருக்கிறார்கள். 'ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள். அவர்கள் கர்த்தரை அறியவில்லை [1 சாமுவேல் 2:12]. எனவே தான், தேவன் இளம் சாமுவேலிடம் ஏலிக்கு கடுமையான நியாயத்தீர்ப்பு இருக்கும் என்று வெளிப்படுத்தினார். 'அவன் குமாரர் தங்கள்மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம், நான் அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்புச் செய்வேன் என்று அவனுக்கு அறிவித்தேன்' [1 சாவேல் 3:13].

## தெரிந்து கொள்ளுதல்கள்

ஒவ்வொரு தலைறையும் ஏதோ ஒன்றை தெரிந்து கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. முதலாவது,

தனி நபர்கள் தேவனுடைய கட்டளைகளைக் கற்றுக் கொண்டு அவைகளுக்குக் கீழ்ப்படிவதை தெரிந்து கொள்ள வேண்டும். இன்று அந்தக் கட்டளைகள் எல்லாம் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. ஒருவர் தேவனுடைய வார்த்தைகளைப் படிக்க வேண்டும் [2 தீமோத்தேயு 2:15], அவருடைய கற்பனைகளை கைக்கொள்ள வேண்டும் [யோவான்14:15]. ஒவ்வொரு தனி நபரும் தேவனைப் பின்பற்றுவதை தெரிந்து கொள்ள வேண்டும். மற்றவர்களுக்காக யாரும் தேவனுக்குக் கீழ்ப்படிய முடியாது.'பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும், குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, நீதிமானுடைய நீதி அவன்மேல் தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கம் அவன்மேல்தான் இருக்கும்[எசேக்கியேல் 18:20].

## இணைந்து ஆராதிக்கும் தலைமுறைகள்

ஆராதனைக்காக கூடியிருக்கும் கிறிஸ்தவர்களை நாம் சுற்றிலும் பார்த்தால், பல தலைமுறைகளின் கலவையை நாம் காண முடியும். சில குடும்பங்கள் பல தலைமுறைகளாக தேவனை இணைந்து ஆராதிக்கலாம். சில குடும்பங்கள் உலகின் பல இடங்களில் இருந்து கொண்டு தேவனை ஆராதிக்கலாம். சில குடும்பங்களில் உண்மையுள்ள தலைமுறைகள் குடும்ப மரத்திலிருந்து தொலைந்து போய் இருக்கலாம். சில சந்தர்ப்பங்களில், தங்கள் பிள்ளைகள் சிறு வயதினராக இருந்தபோது கர்த்தருக்கு உண்மை இல்லாத பெற்றோர் தங்கள் வாலிப குழந்தைகளை உலகத்திற்கு இழந்து போயிருக்கலாம். இப்படி ஒரு காலத்தில் உண்மை இல்லாமல் இருந்த பெற்றோர் இப்போது கர்த்தரிடத்தில் திரும்பி, ஆவிக்குரிய காரியங்களில் தங்கள் பேரப்பிள்ளைகளை வழிநடத்த விரும்புகிறார்கள். மற்றொரு சாரார் தான் தங்கள் பிள்ளைகளை 'கர்த்தருக் கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்க்கிறார்கள். 'பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக'[எபேசியர் 6:4]. இருந்தபோதிலும், தங்கள் சுதந்திரத்தைப் பயன்படுத்தி, தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருப்பதைத் தெரிந்து கொண்டார்கள். இந்தப் பிள்ளைகளின் பெற்றோர், லூக்கா 15 ஆம் அதிகாரத்தில் நாம் காணும் அந்தக் கெட்ட குமாரனைப் போல், மனந்திரும்பி தங்களிடத்தில் வருவார்கள் என ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இழந்து போன சந்ததியார் குறித்து நாம் இன்று அதிகமாக சிந்திக்க வேண்டாம். ஏனென்றால், கடந்த காலத்தை நம்மால் மாற்ற முடியாது. நிகழ்காலமே காரியமாய் இருக்கிறது. நிகழ்கால தலைறைக்கும், வருங்காலத் தலைறைக்கும் கர்த்தருடைய சித்தத்தை போதிப்பது ஒவ்வொரு கிறிஸ்தவருடைய பொறுப்பாயிருக்கிறது. நீங்கள் சரியாகச் செய்யும் தலைமுறையின் ஓர் அங்கமாக இருக்கிறீர்களா?

கிறிஸ்தவ இல்லம்

# திருத்துவதில் தோல்வி

## A Failure to correct

*Aaron j. Cozort*



இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீதின் வாழ்க்கை தொடர் போர்கள், குழப்பங்கள், ராஜ்யத்திற்கு எதிரான அச்சுறுத்தல்கள் போன்ற காரணங்களால் பல சிக்கல்களும் சச்சரவுகளும் நிறைந்த ஒன்றாகவே காணப்பட்டது. தாவீதின் பிரச்சினைகளை இன்னும் அதிக சிக்கலாக்க பெண்கள் விஷயத்தில் அவருக்கு இருந்த பெலவீனம் முக்கியப் பங்கு வகித்தது. அவருடைய பெலவீனம் அநேக குழந்தைகளுக்கு அவரை தகப்பனாக்கியது. ஆனால், அந்தக் குழந்தைகள் நாம் ஏற்கனவே குறிப்பிட்ட தாவீதின் பிரச்சினைகளால் தகப்பனுடைய கவனிப்பையும், பராமரிப்பையும் அவர்களால் பெற முடியவில்லை. அதன் விளைவாக, தாவீதுக்கும் அவருடைய குமாரர்களுக்கும் இடையே எப்போதுமே சரியான உறவு இருந்ததில்லை. தாவீதைச் சுற்றிலும் பதவி ஆசைப்பிடித்த ஆலோசகர் களும், அரசியல் தலைவர்களும்தான் இருந்தார்கள். அவர்கள் தாவீதின் பிள்ளைகளை தவறான பாதையில் வழி நடத்தினார்கள். உதாரணமாக, [யோனதாப் 2 சாமுவேல் 13:4; அகி தோப்பேல் 2 சாவேல்15:12].

இயற்கையாகவே, இத்தனை பிரச்சனைகள் மத்தியில் சிக்கித் தவிக்கும் ஒரு குடும்பத்தில்

குழந்தைகள் தவறு செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். அவர்களை யாரும் சீர்திருத்துவதில்லை. 1 ராஜாக்கள் 1:5,6 வசனங்களின்படி அப்சலோமின் சகோதரனாகிய அதோனியாவுக்கு இது அப்படியே நடந்தது. ஆகீத்திற்குப் பிறந்த அதோனியா என்பவன்: நான் ராஜா ஆவேன் என்று சொல்லி, தன்னைத்தான் உயர்த்தி, தனக்கு இரதங்களையும், குதிரைவீரரையும், தனக்குமுன் ஓடும் ஐம்பது காலட்களையும் சம்பாதித்தான்.

அவனுடைய தகப்பன்: நீ இப்படிச் செய்வானேன் என்று அவனை ஒருக்காலும் கடிந்துகொள்ளவில்லை. அவன் மிகவும் அழகுள்ள வனாயிருந்தான், அப்சலோமுக்குப்பின் அவனுடைய தாய் அவனைப் பெற்றாள். (1 இராஜாக்கள் 1:5,6).

தாவீதின் குமாரனாகிய சாலமோன், தாவீதை சிங்காசனத்தில் இருந்து தூக்கி எறிய தாவீதின் சகோதரர்கள் செய்த முயற்சிகளை உற்று நோக்கியதன் விளைவாக தன் குமாரனுக்கு ஞானமுள்ள வார்த்தைகளை இவ்விதமாக எழுதினார். 'நம்பிக்கையிருக்குமட்டும் உன் மகனைச் சிட்சைசெய்: ஆனாலும், அவனைக் கொல்ல உன் ஆத்துமாவை எழும்பவொட்டாதே (நீதிமொழிகள் 19:18). நம் பிள்ளைகளின் தவறுகளை சீர்திருத்துவதற்கு காலம் தாழ்த்தக் கூடாது. சீர்திருத்துவதை நாம் தள்ளிப் போட்டால், அது தவறுகளை தடுப்பதற்கு பதிலாக தவறு செய்வதை உற்சாகப்படுத்துவதாக மாறிவிடும். எனவேதான், குழந்தைகள் திருந்துவார்கள் எனும் நம்பிக்கை இருக்கும்போதே அவர்களை நாம் சீர்திருத்தி விட வேண்டும், அதற்கு காலம் தாழ்த்தினால் நம்பிக்கை முற்றிலுமாக அற்றுப் போய்விடும்.. இதுதான் சிங்காசனத்தை மற்றொரு முறை அபகரிக்க முயற்சி செய்த அதோனியாவுக்கு அவன் சகோதரனாகிய சாலமோனுடைய ஆணையினால் நடந்தது.

'பின்பு சாலொமோன் ராஜா: அதோனியா இந்த வார்த்தையைத் தன் பிராணனுக்குச் சேதமாகச் சொல்லாதிருந்தால், தேவன் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்று கர்த்தர்மேல் ஆணையிட்டு, இப்போதும் இன்றைக்கு அதோனியா கொலையுண்பான் என்று என்னைத் திடப்படுத்தினவரும், என்னை என் தகப்பனாகிய தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கப்பண்ணி, தாம் சொன்னபடி எனக்கு வீட்டைக் கட்டுவித்தவருமாகிய கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று சொல்லி, ராஜாவாகிய சாலொமோன் யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவுக்குக் கட்டளைகொடுத்து அவனை அனுப்பினான். இவன் அவன்மேல் விழுந்து அவனைக் கொன்றுபோட்டான். (1 இராஜாக்கள் 2:23-25).

தாய் தகப்பன்களே, தாத்தா பாட்டிகளே நம்பிக்கை இருக்கும்போதே, பிள்ளைகளின் வாழ்க்கையில் இருக்கும் நன்மையை, பாவம் தூக்கி எறிந்து அவர்களை அழிக்கும் முன்பே காலம் தாழ்த்தாமல் பிள்ளைகளை சீர்திருத்துங்கள் (ரோமர் 6:23).




# எண்ணாகமம் புத்தகத்தின் மூலமாக தேடுதல் வேட்டை

**Rebecca Rushmore**

1. இஸ்ரவேலிலே யுத்தத்துக்கு புறப்படத்தக்க குறைந்தபட்ச வயது எத்தனையாயிருந்தது?

2. எந்த கோத்திரத்தை யுத்த மனிதர்களோடு எண்ண வேண்டாம் என்று தேவன் மோசேக்கு கட்டளையிட்டிருந்தார்?

3. மோசே லேவி புத்திரரை எண்ணத் தொடங்கின போது ஆண் பிள்ளைகளை எத்தனை வயதிலிருந்து எண்ணினார்?

4. எது கூடாரத்தை இரவும், பகலும் மூடியது?

5. இஸ்ரவேல் புத்திரரை அழைப்பதற்கும், அவர்களை இயக்கு வதற்கும் எது உபயோகப்படுத்தப்பட்டது?

6. யார் பூமியில் உள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணம் உடையவராக விவரிக்கப்பட்டிருக்கிறார்?

7. கானான் தேசத்தை வேவு பார்க்கச் சென்ற மனிதர்களில் எந்த இரண்டு பேர் சுகச் செய்தியை கொண்டு வந்தார்கள்?

8. ஓய்வு நாளை மீறியதற்கு என்ன தண்டனை கொடுக்கப்பட்டது?

9. எப்படி மோசே அந்த காதேஸ் வனாந்தரத்தில் தேவனுக்கு கீழ்ப்படியவில்லை?

10. தேவன் எந்த மிருகத்தை பிலேயாமிடம் பேசவைத்தார்?

# குள்ளமான மனுஷனாகிய சகேயு

## Zacchaeus, the wee little man

*Kabita Gootam*

**ச**கேயுவின் சம்பவம் பற்றி சிறுவயதிலிருந்தே நாம் அறிந்திருக்கிறோம். நம் பிள்ளைகளுக்கு இந்த சம்பவம் பற்றி நாம் அடிக்கடி சொல்லுவோம். இயேசு கிறிஸ்துவும் அவரைப் பின் பற்றினவர்களும் (கடைசி முறையாக) எரிகோவுக்கு பயணித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தாழ்வான இடத்தில் அமைந்த அழகிய எரிகோ பட்டணத்தின் வழியாகப் பயணித்துக் கொண்டிருந்தார்கள். முதலாவது, நாம் இந்த எருசலேம் பட்டணம் இஸ்ரவேலர்களால் அழிக்கப்பட்டதை யோசுவா பதினாறாம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இப்பட்டணம் சபிக்கப்பட்ட பட்டணமாய் இருந்தாலும் கூட இஸ்ர வேலின் ராஜாவாக இருந்த ஆகாபின் ஆட்சிக் காலத்தில் மறுபடியும் கட்டப்பட்டது. இன்று பழைய எரிகோபட்டணம் இல்லை.

இந்த சகேயு ஐசுவரியவானும், புகழ்பெற்றவனும், ஆயக்காரருக்கு தலைவனுமாயிருந்தான். நாம் புதிய ஏற்பாட்டில் இன்னும் கூடுதலான இரண்டு ஆயக்காரரைப் பற்றி வாசிக்கிறோம். ஆயக்காரனாகிய மத்தேயு எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவின் சீஷரானார் (மத்தேயு9:9). மற்றுமொரு ஆயக்காரனை குறித்தும் நாம் வாசிக்கிறோம், அவனுடைய தாழ்மையானஜெபம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவன் நீதிமானாக்கப்பட்ட நிலையில் வீடு திரும்பினான் (லூக்கா18:14).

இந்த சகேயு இயேசுவைப் பார்க்க வகை தேடினான் ( லூக்கா19:3). இயேசு கிறிஸ்து இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில் பலர் பல்வேறுப்பட்ட காரணங்களுக்காக அவரைப் பார்க்க விரும்பி இருக்கிறார்கள். கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் இயேசுவை தொழுது கொள்ளும்படி வந்தார்கள்( மத்தேயு 2:1-6). மேய்ப்பர்கள் குழந்தை இயேசுவைக் காண பெத்லகேமுக்கு வந்தார்கள் (லூக்கா2:25-35). இயேசு கிறிஸ்து இந்த பூமியில் ஊழியம் செய்த நாட்களில், அவருடைய போதனைகள் மற்றும் அற்புதங்களைப் பற்றிய செய்தி எங்கும் பரவியது. அதன் விளைவாக, பஸ்கா பண்டிகையை கொண்டாட கிரேக்கத்திலிருந்து வந்த யூதர்கள் இயேசுவைக் காண விரும்பினார்கள் (யோவான் 12:20). ஏரோது ராஜாவும் இயேசுவைக் காண விரும்பினான். **ஏரோது இயேசுவைக்குறித்து அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்ததினாலும், அவரால் செய்யப்படும் அடையாளத்தைப் பார்க்கவேண்டுமென்று விரும்பியிருந்ததினாலும், அவரைக் காணும்படி வெகுநாளாய் ஆசைகொண்**டிருந்தான். அந்தப்படி அவரைக் கண்டபோது, மிகவும் சந்தோஷப்பட்டான் (லூக்கா 23:8). இயேசு எங்கெல்லாம் சென்றாரோ, அங்கெல்லாம் திரளான கூட்டம் அவரைப் பின் தொடர்ந்தது.

அவர்கள் இயேசுவைக் காண்பதில் ஏன் அதிக ஆர்வம் காட்டினார்கள்? ஏனென்றால், அவர்கள் இயேசு செய்த அற்புத அடையாளங்களையும், அவருடைய போதனைகளையும் கேள்விப் பட்டார்கள். எனவே தான், அவரைக் காண ஆர்வம் காட்டியிருக் கிறார்கள். இந்த சகேயுவும் கூட இயேசுவைப் பற்றி அநேக காரியங்களை கேள்விப்பட்டிருக்கிறான். இவன் அநேகமாக எரிகோவைச் சேர்ந்த ஒரு குருடனை இயேசு சுகப்படுத்தியதை குறித்துக் கேள்விப்பட்டிருப்பான்( லூக்கா 18:35-43).

சகேயு இயேசுவை காண வகை தேடினான். ஆனால், அங்கே அவனுக்கு தடை காணப்பட்டது. அவன் தோற்றத்தில் குள்ளமானவனாய் இருந்தான். ஆனால், கூட்டமோ பெரிதாக இருந்தது. வேத வாக்கியங்கள் அவன் தடைகளை எப்படித் தகர்த்தெறிந்தான் என்பதை நமக்கு சொல்கின்றன .'அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான்(லூக்கா 19:4). 'மனம் இருந்தால் மார்க்கமுண்டு' என்று ஒரு பழமொழி உண்டு. சகேயு தன் இயலாமையை மேற்கொள்ள ஒரு காட்டத்தி மரத்தில் ஏறி அங்கே கடந்து சென்று கொண்டிருந்த இயேசுவைக் கண்டான்.

நம் பரம தகப்பன் தம்முடைய பிள்ளைகள் எல்லோருமே தம்மிடத்தில் வரவேண்டும் என்று விரும்புகிறார். "ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள் பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள், நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்.

கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள், அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். (ஏசாயா 55:1,6).'வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'(மத்தேயு 11:28).'தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள். இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்' (யாக்கோபு 4:8).' ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள், கேட்கிறவனும் வா என்பானாக, தாகமாயிருக்கிறவன் வரக்கடவன், விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்' (வெளி. 22:17).

இயேசு கிறிஸ்து சகேயுவிடம் சீக்கிரமாய் இறங்கி வா என்று சொன்னார் (லூக்கா19:5). சகேயு அந்த திரளான கூட்டத்தில் இயேசுவுக்கு எப்படி தன்னுடைய பெயர் தெரியும் என்று நினைத்திருக்கலாம். ஆனால், இயேசு ஒவ்வொருவருடைய பெயரையும், இருதயத்தையும் அறிந்திருக்கிறார். தேவனாகிய கர்த்தர் இவ்விதமாகச் சொன்னார்' வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில்

இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன், நான் என் தாசனாகிய யாக்கோபினிமித்தமும், நான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலினிமித்தமும், நான் உன்னைப் பெயர்சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும், உனக்கு நாமம் தரித்தேன்'(ஏசாயா 45:4).'இப்பேதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே, உன்னை மீட்டுக்கொண்டேன், உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன், நீ என்னுடையவன் (ஏசாயா 43:1). விண்ணில் தோன்றும் எண்ணற்ற நட்சத்திரங்களையும் தேவன் அறிந்திருக்கிறார், தேவன் அவைகளைப் பெயர் சொல்லி அழைக்கிறார் (சங்கீதம்147:4; ஏசாயா40:26). ஒவ்வொரு தனி நபரைப் பற்றியும் எல்லாமே தேவனுக்கு தெரியும். எனவேதான், சங்கீதக்காரன் இவ்விதமாய் எழுகிறார் கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர், என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர், என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். (சங்கீதம் 139:1-3). இயேசு சகேயுவின் இருதயத்தை ஆராய்ந்தபடியால் அவனுடைய உட்காருதலையும், எழுந்திருக்குதலையும் தூரத்தில் இருந்தே அறிந்து கொண்டார். இயேசு கிறிஸ்து நம்முடைய பெயர்களையும், செயல்பாடுகளையும் சிந்தனைகளையும் அறிந்திருக்கிறார்

✝

## நாம் மறந்து விட்டோமா?

☆ பாவ மன்னிப்பு தான் மிகப்பெரிய தேவை என்பதை மாற்கு 8:36,37)

☆ நம்முடைய பாவங்களுக்காகக் கொடுக்கப்பட்ட மிகப்பெரிய விலையை. (1பேதுரு 1:4)

☆ கிறிஸ்தவர்கள் உலகத்தில் இருந்து வேறுபட்டவர்கள் என்பதை (1யோவான் 2:15-17);

☆ பரலோகம் நரகம் உண்டென்பதை (மத்தேயு 25:46).

# மோசேயின் சாக்கு போக்குகளும், தேவனுடைய பதில்களும்

## Moses' excuses, God's answers

*Gary C.Hampton*

**தே**வன் மோசேயிடம் தம்முடைய ஜனங்களை விடுவிக்கும்படியாக கேட்டுக்கொண்டார். அதற்கு மோசே இவ்விதமாய் பதிலளித்தார்: அப்பொழுது மோசே தேவனை நோக்கி: பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரவும், நான் எம்மாத்திரம் என்றான் (யாத்திராகமம் 3:11). ஆனால், தேவனோ தாம் மோசேயிடம் இருப்பதாக வாக்குத்தத்தம் செய்து அந்தச் சாக்கு போக்கை எடுத்துப் போட்டார். (யாத்திராகமம் 3:9–12). இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? (ரோமர் 8:31).

மேலும், மோசே தேவனிடம் தன்னை யார் அனுப்பினார் என்று ஜனங்கள் கேட்டால் அதற்கு என்ன சொல்வேன் என்று கேட்டார். அதற்கு தேவன் இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார் என்று சொல்வாயாக என்றார் (யாத்திராகமம் 3:13–14). மேலும், மோசே இஸ்ரவேலர்களிடம் தேவன் இஸ்ரவேல் ஜனத்தின் உபத்திரவத்தைப் பார்க்கவே பார்த்து அதிலிருந்து அவர்களை விடுவித்து கானான் தேசத்துக்கு கொண்டு செல்வார் என்று இஸ்ரவேலின் மூப்பர்களிடத்தில் சொன்னார். மோசேயும் இஸ்ரவேலின் மூப்பரும் பார்வோனிடத்தில் மூன்று நாள் யாத்திரை பண்ணி வனாந்திரத்திற்குப் போய் தங்கள் தேவனை ஆராதிக்க இஸ்ரேல் ஜனங்களை விடும்படியாக கேட்டுக் கொள்ள வேண்டியதாய் இருந்தது. சர்வ வல்ல தேவன் எகிப்தை வாதித்து, இஸ்ரவேலர்களை வெறுங்கையோடு அல்ல திரளான பொருட்களோடு எகிப்தை விட்டு வெளியேற்றுவதாக வாக்குத்தத்தம் செய்தார்.

இருந்தபோதிலும், இந்த வார்த்தைகளை ஜனங்களும் நம்ப மாட்டார்கள் என்று மோசே தேவனிடம் சொன்னார். மேலும், தேவன் மோசே தான் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட தூதுவர் என்பதை மூப்பர்கள் நம்பும்படியாக மோசே மூலமாக மூன்று அற்புதங்களைச் செய்தார். மோசே தன் கோலை தரையில் போட்ட போது அது சர்ப்பமாயிற்று. ஆனால், மீண்டும் அந்த சர்ப்பத்தின் வாலைப் பிடித்தபோது அது கோலாயிற்று. அதேபோல் மோசேயின் கையில் வெண் குஷ்டம் பிடித்தது. ஆனால், மீண்டும் அவருடைய கைகள் பழைய நிலைமைக்கு வந்தன. மேலும், மோசே நதியில் இருந்து தண்ணீரை எடுத்து நிலத்தில் ஊற்றின போது, அந்தத் தண்ணீர் ரத்தமாக மாறியது (யாத்திராகமம் 4:1–9).

அடுத்ததாக, மோசே தான் சொல்வன்மை மிக்கவர் அல்ல என்றும் மந்த நாவு உள்ள நபர் என்றும் தேவனிடம் சாக்குப்போக்கு சொன்னார். இந்தச் சாக்குபோக்கு உண்மை அல்ல என்பதை நாம் உபாகமம் புத்தகத்தை வாசிக்கும் போது தெரிந்து கொள்ள முடியும். இருந்த போதிலும், தேவன் மோசேயை விடுவதாக இல்லை. மாறாக, அவருடைய சகோதரனாகிய ஆரோன் அவருக்கு வாயாக இருப்பதாக தேவன் சொன்னார்.'அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, இதற்கு முன்னாவது, தேவரீர் உமது அடியேனோடே பேசினதற்குப் பின்னாவது நான் வாக்கு வல்லவன் அல்ல. நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன் என்றான். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? ஊமையனையும், செவிடனையும் பார்வையுள்ளவனையும், குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா ? ஆதலால், நீ போ நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்றார் (யாத்திராகமம் 4:10−12).

சர்வ வல்ல தேவனிடம் சாக்குப் போக்குகளைச் சொல்வது எவ்வளவு வியர்த்தமானது என்பது இங்கே வெளிப்படையாகவே தெரிகிறது. தேவன் தான் நம்மை உண்டாக்கினார், அவர் நம்மை நன்றாகவே அறிந்திருக்கிறார். அவர் நிச்சயமாக நம்மால் செய்ய முடியாத எதையும் நாம் செய்யும்படி நம்மை கேட்க மாட்டார். ✝

## தேவன் வாக்களிக்காதவைகள்

1. துன்பமில்லாத வாழ்க்கை (2 தீமோத்தேயு 3:12),

2. சத்துருக்கள் இல்லாத வாழ்க்கை. (மத்தேயு 5:10-12).

3. கீழ்ப்படியாதவர்கள் இரட்சிப்படைவது. (மத்தேயு 7:21),

4. பற்றிய உத்திரவாதம் (யாக்கோபு 4:13-15),

5. சுகபோக வாழ்க்கை (1 தீமோத்தேயு 5:6).



# பவுல்

## Paul

*Tom Baxley*

அப்போஸ்தலருடைய நடபடிகள் ஆறாம் அதிகாரத்தில் உதவிக்காரரில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தேவான் கல் எறியப்பட்ட சம்பவத்தை குறித்து அப்போஸ்தலர் ஏழாம் அதிகாரம் விரிவாகப் பேசுகிறது. இந்த ஏழாம் அதிகாரத்தின் இறுதியில், ஸ்தேவான் கல் எறியப்பட்டபோது அங்கே இருந்த சவுல் என்னும் பெயர் கொண்ட ஒரு மனிதனைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த சவுல் என்பவன் ஸ்தேவான் கல்லெறியப்பட்ட போது அவரை கல்லெறிந்தவர்களுடைய வஸ்திரங்களை வைத்துக்கொண்டு அந்த சம்பவத்துக்கு சம்மதம் தெரிவித்து இருந்தான். அதிலிருந்து சவுல் தொடர்ந்து கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தி கொண்டிருந்தான். அதன்காரணமாகவே, சவுல் கிறிஸ்தவர்களை பயமுறுத்தி கொலை செய்யும்படி பிரதான ஆசாரியர்கள் இடத்தில் போய் நிருபங்களைக் கேட்டு வாங்கினான் [அப்போஸ்தலர்8–9].

சவுல் தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் இயேசுவை சந்தித்தார், அந்த சந்திப்பு சவுலின் வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றியது. அவன் உடனடியாக கிறிஸ்துவை ஜெப ஆலயங்களில் அறிவிக்க ஆரம்பித்து விட்டார். அதன் பின்பு அவர் மத்தியத்தரைக் கடலோரப் பகுதிகளில் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பற்றித் தொடர்ச்சியாக பிரசங்கித்தார். அப்படிச் செய்ததினால், அவர் எண்ணற்ற பாடுகளை சந்தித்தார். கிறிஸ்தவத்தின் மிகப்பெரிய சத்துருவாய் இருந்த சவுல் கிறிஸ்தவத்தின் மிகப்பெரிய தூதுவராக மாறிவிட்டார்.

தர்சு பட்டணத்திலும், எருசலேம் நகரத்திலும் அவர் கற்ற கல்வி மற்றும் யூத குடிமகனாகவும், ரோமக் குடிமகனாகவும் அவருக்கு இருந்த சிலாக்கியம் மேசியாவின் நற்செய்தியை உலகெங்கும் எடுத்துச் செல்லும் ஓர் உன்னத ஊழியக்காரனாக மாற்றியது. புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் அவருடைய பங்களிப்பு அளப்பரியது, அது இன்றும் நம் மீது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. ✝

**வேதாகம கேள்விகள்**

# பாஷைகளைப்பற்றி என்ன?
# what about Tongues?

*Betty Burton choate*

இன்றைய மார்க்கப்பிரிவினை மத உலகில், அதுவும் குறிப்பாக பரிசுத்த ஆவியின் வெளிப்பாடுகளிலும், அற்புத அடையாளங்களிலும், நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் அந்நிய பாஷைகளைப் பேசுவதற்கு அதிக முக்கியத்துவம், அதிக அழுத்தம் கொடுக்கப்படுகிறது. அந்நிய பாஷைகளை பேசுவதற்கு அவர்கள் கொடுக்கும் விளக்கம் என்னவென்றால், அந்நிய பாஷை பேசுபவர் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு ஒவ்வொரு வார்த்தையையும் பேசுகிறார். அந்த நபர் பேசும் பாஷை பரலோக பாஷையாகும். அதை தேவனால் மாத்திரமே புரிந்து கொள்ள முடியும் என்பது அந்த விளக்கமாய் இருக்கிறது.

அந்நிய பாஷை பேசுவது பற்றி புதிய ஏற்பாட்டு வசனங்கள் ஏதாவது சொல்கின்றனவா? ஆம்.

நாம் அதற்காக எண்ணற்ற வசனங்களை மேற்கோள் காட்ட முடியும். நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திற்குத் திரும்பும்போது நாம் இவ்விதமாய் வாசிக்க முடியும்:' அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்' (அப்போஸ்தலர் 2:4). ஆனால், அப்போஸ்தலர்கள் தேவனால் மாத்திரம் புரிந்து கொள்ளக்கூடிய பரலோக பாஷையில் பேசினார்களா என்றால் நிச்சயமாக இல்லை. நாம் தொடர்ந்து (அப்போஸ்தலர் 2:6-8) வசனங்களை வாசிப்பதன் மூலமாக மேலும் அறிந்து கொள்ள முடியும்.' அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள்.

எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து; இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி? (அப்போஸ்தலர் 2:6-8). 9-11 வசனங்கள் அந்த எருசலேம் பட்டணத்தில் 17 வகையான பாஷைக்காரர் கூடியிருந்ததாக பட்டியலிடுகிறது. இருந்தபோதிலும், அங்கே கூடியிருந்தவர்கள் பேசிய மொழிகள், வார்த்தைகள், மற்றும் செய்திகள் அங்கிருந்த மனிதர்களால் புரிந்து கொள்ளக் கூடியதாகத்தான் இருந்தது .

இதைக் குறித்து கூடுதலான தகவல்கள் (1 கொரிந்தியர் 12:8-10) வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. முதல் நூற்றாண்டில் புதிய

கிறிஸ்தவர்களை வழி நடத்த தேவனுடைய வார்த்தை முழுமையான அளவில் இல்லாதபடியால் குறிப்பிட்ட கிறிஸ்தவர்களுக்கு ஆவிக்குரிய வரங்கள் கொடுக்கப்பட்டன. 'வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது' [1 கொரிந்தியர் 12:10].

இந்த வரங்களெல்லாம் கிறிஸ்தவர்களுக்கு எப்படி கொடுக்கப் பட்டது? அப்போஸ்தலருடைய நடபடிகள் 8:14-20 வசனங்களுக்கு நாம் திரும்பும் போது அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை யார் மீது வைக்கிறார்களோ, அவர்களால் தான் அற்புத அடையாளங்களைச் செய்ய முடியும் என்று நாம் அறிந்து கொள்ள முடியும். 1 கொரிந்தியர் 12 ஆம் அதிகாரத்தில் நாம் வாசித்தபடி சிலருக்கு சில குறிப்பிட்ட வரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அப்போஸ்தலர்களால் மாத்திரமே எல்லா அற்புத அடையாளங்களையும் செய்ய முடிந்திருக்கிறது.

மேலும், நாம் தொடர்ந்து1 கொரிந்தியர் 14 ஆம் அதிகாரத்தை வாசிக்கும் போது கிறிஸ்தவர்கள் பல இடங்களுக்கு சிதறப்பட்ட படியினால் உண்டான உபத்திரவம் எத்தகைய சூழ்நிலைகளை உருவாக்கியது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும் . உபத்திரவத்தின் நிமித்தம் கிறிஸ்தவர்கள் சிதறிப் போனபடியால், அவர்கள் தேவனை ஆராதிக்க ஒன்று கூடி வரும் போது பல பாஷைகளை பேசும் சூழ்நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டார்கள். மேற்சொல்லப்பட்ட வசனப் பகுதியில் ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவனுக்கு அந்த நபர் இதற்கு முன்பு கற்றிராத பாஷையை பேசும் அற்புத வல்லமை கொடுக்கப்பட்டிருந்ததை நம்மால் வெளிப்படையாகவே காண முடிகிறது. பலதரப்பட்ட மக்கள் ஒன்று கூடும் போது ஒருவர் பற்பல மொழிகள் பேசும்போது அதை எல்லோரும் புரிந்து கொள்ள முடியாது. எனவே, இங்கே கொடுக்கப் படுகிற புத்திமதி என்னவென்றால், யாராவது அந்நியபாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டுபேர் மட்டில் அல்லது மிஞ்சினால் மூன்று பேர் மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தஞ் சொல்லுகிற வனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன். [1 கொரிந்தியர் 14:27,28].

மேற்சொல்லப்பட்ட எல்லா வசனப் பகுதிகளையும் வைத்து பார்க்கும் போது, மனிதர்களால் அறியப்படாத பாஷைகள் அல்ல, மாறாக, மனிதர்களால் அறியப்பட்ட பாஷைகள் தான் இங்கே விவாதப் பொருளாக இருக்கிறது. நாம் இந்த நாட்களில் இதேவிதமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளத் தான் செய்கிறோம். உதாரணமாக, இந்தியாவில் இருபதுக்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட மொழிகளும், சுமார் 700 உபமொழிகளும் உள்ளன . பலதரப்பட்ட மொழிகளை ஒருவர் பேசும்போது

கூட்டத்தில் ஒரு சிலர் மாத்திரம் அதைப்புரிந்து கொள்ள முடியும். ஆனால், பலருக்கு அவைகள் மொழிபெயர்க்கப்பட வேண்டும்.

இன்றைய நாட்களில் அன்னிய பாஷைகள் பேசுபவர்களால் கூடுதலாக தேவனுடைய இரண்டு கட்டளைகள் மீறப்படுகின்றன. **'அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்** என்று 14:28 தெளிவாகச் சொல்லுகிறது. அந்நிய மொழியில் அந்த நபருடைய எண்ணம் அவருக்கும் தேவனுக்கும் மாத்திரமே தெரிகிறபடியால் அது கூடி இருக்கிற ஒருவருக்கும் ஆவிக்குரிய பிரகாரமாக பயன்படாது. இது ஒருவர் தனக்கு அந்நிய பாஷைகளில் பேசும் அற்புத வல்லமை கிடைத்திருக்கிறது என்று தன்னை மற்றவர்களுக்கு முன்பாக பெரிதாகக் காட்ட தடை செய்கிறது.

அந்நிய பாஷை பேசும் மார்க்க பிரிவினைக் கூட்டத்தாரால் மீறப்படும் தேவ னுடைய இரண்டாவது கட்டளை 34 ஆவது வசனத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. 'சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள். பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்கவேண்டும். வேதம் அப்படியே சொல்லுகிறது' (1 கொரிந்தியர் 14:34). மார்க்க பிரிவினை கூட்ட சபைகளில் பெண்களின் பங்கு எவ்வளவு அதிகமா இருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோமே.



ஓர் அற்புதமான உண்மை என்னவென்றால், புதிய ஏற்பாட்டில் தேவனுடைய செய்தி முழுமையாயிருக்கிறது. அது மாத்திரமல்லாமல், அது இன்று உலகெங்கும் பேசப்படுகிற மொழிகளில் 99 சதவீத மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டிருக்கிறது. எனவே, வாசிக்கத் தெரிந்த ஒருவர் சுவிசேஷ செய்தியை தன் சொந்த மொழியிலேயே வாசிக்க முடியும்.

இன்றைய நாட்களில் தொழில்நுட்பம் அநேக அற்புத காரியங்களை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது. பார்வை இல்லாதவர்களுக்கும், வாசிக்கத் தெரியாதவர்களுக்கும் கூட பிரதான மொழிகளில் MP3 Audio player இருக்கிறது. அதை பயன்படுத்தி அவர்களும் சுவிசேஷ செய்தியை அறிந்து கொள்ள முடியும். ✝

# இரட்சிப்புக்கடுத்த பிரச்சனைகள்

# What about salvation issues?

*Brian R.Kenyon*

சமீபத்தில், கைதட்டுதல் ஆராதனையின் ஓர் அங்கீகரிக்கப்பட்ட பாகமா என்கிற தலைப்பின் கீழ் விவாதம் நடந்து கொண்டிருந்தது. அதில் எழுப்பப்பட்ட ஒரு கேள்வி, அது ஒரு இரட்சிப்புக்கடுத்த பிரச்சனையா? என்பதாய் இருந்தது. அதற்கான பதில் நிச்சயமாகவே ஆம் என்றுதான் இருக்கிறது. இதுபோன்று இரட்சிப்புக்கடுத்த பிரச்சினைகளை நாம் வேதாகமத்தின் பக்கங்களில் வாசிக்க முடியும். நாதாப் மற்றும் அபியூ (லேவியராகமம் 10:1,2). மேலும், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் பரிசேயர் மற்றும் வேத பாரகரைப் பற்றி சொல்லும் போது இவ்விதமாகச் சொல்கிறார். இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள், அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது'(மத்தேயு 15:8). தேவன் ஆராதனையை ஒழுங்குபடுத்தியிருக்கிறபடியால், அவர் எப்படி ஆராதிக்கப்பட வேண்டும் என்பதை அவர் தான் தீர்மானிக்கிறார். தேவன் ஆராதனையை ஒழுங்குபடுத்தாவிட்டால் ஆராதனை எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். இருந்தபோதிலும், இந்த கேள்வி இரட்சிப்புகடுத்த பிரச்சனை என்னும் சொற்றொடரை பற்றி அதிக ஆழமாக சிந்திக்க வைக்கிறது.

### எவைகளெல்லாம் இரட்சிப்புக்கடுத்த பிரச்சனைகள்?

அடிப்படையாகவே, தேவன் எவைகளையெல்லாம் தம்முடைய ஜனங்கள் செய்ய வேண்டும் என்று கட்டளையிடுகிறாரோ அவைகள் யெல்லாம் இரட்சிப்புக்கடுத்தவைகள் தான். கிறிஸ்துவுக்குள் இல்லாதவர்களுக்கு அவர்கள் இயேசுவை விசுவாசித்து (யோவான்8:24), தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி (அப்போஸ்தலர் 17:30); இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு (ரோமர்10:9-10); கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற வேண்டும் (அப்போஸ்தலர் 2:38). கிறிஸ்துவுக்குள் வெளியே இருக்கும் ஜனங்கள் இவைகளை செய்யாவிட்டால் இழக்கடிக்கப்படுவார்கள். தேவனுடைய மீட்பின் திட்டம் இரட்சிப்புக்கடுத்த காரியமாகும். கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள், புதிதான ஜீவன் உள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டும் (ரோமர்6:4); அவர்கள் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் (யோவான் 4:24); புதிய மனுஷனை தரித்துக்கொள்ள வேண்டும் (கொலோசெயர் 3:1-10);

தேவனுடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாய் இருக்க வேண்டும் (ரோமர்8 :29). இதன் பொருள் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் பாவமற்றவர்கள் என்பதல்ல (1 யோவான் 1:8-10). இதன் பொருள் கிறிஸ்து கட்டளையிட்ட யாவையும் கைக்கொள்ள அவர்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்பதாக இருக்கிறது( மத்தேயு 28:20). இந்தக் கடமைகள் எல்லாமே இரட்சிப்புக்கடுத்த காரியங்கள்தான்( மத்தேயு7:21-23).

**இரட்சிப்பு சம்பந்தப்படாத காரியங்கள் உள்ளனவா?**

தேவன் கட்டளையிட்டவைகள் எல்லாம் இரட்சிப்புக்கடுத்த காரியங்கள் என்றால், தேவன் கட்டளையிடாத காரியங்களெல்லாம் இரட்சிப்பு சம்பந்தப்படாத காரியங்களாக இருக்கிறது. உதாரணமாக, மாம்சம் புசிக்க வேண்டுமா அல்லது காய்கறிகள் புசிக்க வேண்டுமா என்னும் விவாதத்திற்குள் வந்தால், இந்தச் செயல்முறையில் ஒருவர் பாவம் செய்யாமல் இருந்தால் தேவன், ஒருவர் மாம்சம் புசிக்கிறாரா அல்லது காய்கறிகளைப் புசிக்கிறாரா என்பதை ஒரு பொருட்டாகவே எண்ண மாட்டார்.'புசிக்கிறவன் புசியாதிருக்கிறவனை அற்பமாயெண்ணாதிருப்பானாக, புசியாதிருக்கிறவனும் புசிக்கிறவனைக் குற்றவாளியாகத் தீர்க்காதிருப்பானாக. தேவன் அவனை ஏற்றுக்கொண்டாரே' (ரோமர் 14:3); (1கொரிந்தியர் 8:1-13). அதே போல ஒருவர் நாட்களை கர்த்தருக்கு என்று விசேஷித்து கொள்ளுகிற காரியத்திலும் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்யாதிருந்தால் கர்த்தருடைய பார்வையிலே அது ஒரு பொருட்டே அல்ல. அதைப்போல் தேவனுடைய கட்டளையை நிறைவேற்றுகிற காரியத்தில், யார் சொல்லுவது சரி என்னும் விவாதத்தை விட்டு விட்டு எது பொருத்தமானதோ, எது தகுதியானதோ அதைச் செய்வதன் மூலமாக தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டும். உதாரணமாக, ஒரு பிராந்திய சபை ஆராதனையில் பாடல்களைப் பாட பாடல் புத்தகங்களை அச்சடிக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறது. ஆனால் மற்றொரு சபையோ, பாடல் புத்தகத்திற்குப்பதிலாக **power point** போன்ற மின்னணு சாதனங்களை பயன்படுத்தி பாடல்களை பாடலாம் என்று தீர்மானிக்கிறது. இரண்டிலுமே ஆராதனையில் பாடல்கள் பாடப்பட வேண்டும் இதில் யாரும் தேவனுடைய கட்டளையை மீறாதபடியினால் இரண்டு தீர்மானங்களிலுமே தவறு ஒன்றும் இல்லை (1 கொரிந்தியர் 14:15; எபேசியர்5:19; கொலோசெயர் 3:16).

**இரட்சிப்புக்கடுக்காத காரியங்கள் இரட்சிப்புக்கடுத்த காரியங்களாக மாற முடியுமா?**

நாம் மேலே பார்த்தபடி, மாம்சம் புசிப்பது, காய்கறிகள் புசிப்பது மற்றும் ஆராதனையில் பொருத்தமான காரியங்களைச் செய்வது போன்றவைளெ ல்லாம் சில வேளைகளிலே தவறாக பயன்படுத்தப்படுவதால் அது பாவமாக மாறி இரட்சிப்புகடுத்த காரியமாக ஆகிவிடுகிறது. நாம் பலவீனமுள்ள சகோதரர்களின் மனசாட்சியை புண்படுத்தும் விதத்தில் மாம்சம் புசித்தால் அவர்களுக்கு விரோதமாகவும், கிறிஸ்துவுக்கு விரோதமாகவும் பாவம் செய்கிறோம் (1கொரிந்தியர் 8:12).

**முடிவுரை**

எனவே, ஒட்டுமொத்தமாக நாம் பார்க்கும் போது, இரட்சிப்புக்கு சம்மந்தம் இல்லாத காரியங்களும், இரட்சிப்புக்கடுத்த காரியங்களும் இருக்கத்தான் செய்கின்றன. கொலோசெயர் 3:17 யை அடிப்படையாக வைத்துப் பார்த்தால் எல்லாமே இரட்சிப்புக் கடுத்த காரியங்களாகத்தான் இருக்கின்றன. 'வார்த்தைகளினாலாவது, கிரியைகளினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள் (கொலோசெயர் 3:17). ✝

**இயேசு கிறிஸ்துவின் தனித்துவம்**

1. *எப்போதும் இருக்கிறபடியால். (யோவான்1:1-31)...*

2. *தம்முடைய பிறப்பினால். (மத்தேயு 1:22,23)...*

3. *பூரணமான வாழ்க்கையினால். (1பேதுரு 2:22)...*

4. *தம்முடைய தியாகத்தினால், (எபிரேயர் 1:19,19)...*

5. *தம்முடைய உயிர்த்தெழுதலினால். (1கொரிந்தியர் 15:12 )...*

6. *மீட்பின் திட்டத்தினால். (1 கொரிந்தியர் 8:9)...*

**வேதாகம கேள்விகள்**

# பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாக கிறிஸ்தவர்கள் இருந்தார்களா?

## Were there Christians before Pentecost

*Louis Rushmore*

யாரோ ஒருவர் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் சொல்லப்படும் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாக கிறிஸ்தவர்கள் இருந்தார்களா? என்று விசாரித்தார். அநேகமாக பெரும்பாலான வேதாகம மாணவர்கள் கிறிஸ்தவன் என்னும் பெயர் புதிய ஏற்பாட்டில் மூன்று முறை வருகிறது என்பதை அறிந்திருக்கிறார்கள். 'அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். முதல்முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று'(அப்போஸ்தலர் 11:26). 'அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி; நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங் குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான் (அப்போஸ்தலர் 26:28). ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப் படுத்தக்கடவன் (1 பேதுரு 4:16).

அப்போஸ்தலருடைய நடபடிகள் 11:26 லிருந்து 'சீஷர்கள் 'கிறிஸ்தவர்கள் என்னும் பதங்கள் ஒரே வகையான மக்களைக் குறிக்கும் விதத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பதை ஒருவரால் காண முடியும். ஒரு ஆங்கில அகராதி கிறிஸ்தவன் என்பதற்கு இவ்விதமாக விளக்கம் கொடுக்கிறது. இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தில் தனக்கிருக்கும் விசுவாசத்தை அறிக்கை செய்பவர்தான் கிறிஸ்தவர். அப்போஸ்தலர் 11:26 ல் கிறிஸ்துவைப் பின்பற்றின அவர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்னும் நாமம் கொடுக்கப்பட்ட பிறகும் கூட அவர்கள் சீஷர்கள் என்று அழைக்கப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 11:29).

அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்திலுள்ள பெந்தேகோஸ்தே நாளுக்கு முன்பாகவே நம் ஆண்டவரைப் பின்பற்றின வர்கள் சீஷர்கள் என்று தான் அழைக்கப்பட்டார்கள் (மத்தேயு 5:1). கர்த்தருடைய சபை ஆரம்பிக்கப்பட்ட பிறகும் கூட கிறிஸ்தவர்கள் என்னும் நாமம் அப்போஸ்தலர்11:26ல் கொடுக்கப்படுவதற்கு முன்பாக அவர்கள் சீஷர்கள் என்று தான் அழைக்கப்பட்டார்கள்.

இயேசுவின் சீஷர்கள் அப்போஸ்தலர்11:26 வரை கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படவில்லை. இயேசுவின் சீஷர்கள் அவருடைய ஊழியம் முழுவதும் தொடர்ந்து அவரோடு இருந்தார்கள். கல்வாரி சிலுவையில் அவருடைய தியாகப்பூர்வமான மரணத்திற்கு பிறகும் கூட அவருக்குள் நிலைத்திருந்தார்கள் என்பதை நாம் பரிசுத்த பக்கங்களில் வாசிக்க முடியும். ✝

# தயவுசெய்து அப்பா, நீங்கள் போக மாட்டீர்களா?

## Please ,Daddy, won't you go?

**மி**ன்னும் கண்களுடன் கூடிய ஒரு சிறு பெண், பளபளப்பான முகத்தை உடைய அந்த சிறு பெண் தன் அப்பாவிடம், 'ஞாயிறு பள்ளிக்கு நேரமாகிவிட்டது நாம் போவோம் 'என்றாள். அதற்கு அப்பா இந்த வாரம் வேண்டாம். இந்த வாரம் முழுவதும் நான் கடுமையாக வேலை செய்திருக்கிறேன். எனக்கு ஒரு நாளாவது ஓய்வு வேண்டும். நான் சிற்றோடைக்கு செல்கிறேன். அங்கே நான் இளைப்பாறி பொழுதைப் போக்க விரும்புகிறேன். அங்கே போய் மீன் பிடிப்பது எனக்கு பிடிக்கும். எனவே, நீ கண்டு கொள்ளாதே. நாம் மற்றொரு நாள் சபைக்கு போகலாம் என்று அப்பா சொன்னார்.

இப்படியே பல மாதங்களும், வருடங்களும் உருண்டோடின. இருந்தபோதிலும் மகளின் வேண்டுகோளை அப்பா ஏற்றுக்கொள்ளவே இல்லை. '**அப்பா ஞாயிறு பள்ளிக்கு போகலாம்**' என்னும் வார்த்தைகள் தொடர்ந்து ஒலித்துக் கொண்டுதான் இருந்தன. இப்போது அப்பாவுக்கு வயதாகி விட்டது. வாழ்க்கை கிட்டத்தட்ட முடிந்து விட்டது. இப்போது அவருக்கு சபைக்குச் செல்ல நேரம் கிடைக்கிறது. ஆனால், அவருடைய மகள் என்ன செய்து கொண்டிருக்கிறாள்? மகள் இப்போது'அப்பா இன்று வேண்டாம்' நான் இரவு முழுவதும் தூங்கவில்லை. எனவே, நான் நன்றாக தூங்கட்டும், எனக்கு பயமாக இருக்கிறது என்றாள். அப்போது அப்பா நடுங்கிய கைகளுடன் மகளின் கண்ணீரைத் துடைத்தார். அப்போதுதான் அவர் தன் மகள் பல ஆண்டுகளாக அந்த மின்னிய கண்களுடன், பளபளப்பான முகத்துடன் அப்பா ஞாயிறு பள்ளிக்கு போவதற்கு நேரமாகிவிட்டது என்று கெஞ்சிய அந்த வார்த்தைகள் அவருடைய நினைவில் வந்து நின்றன.

## சத்திய வழி


❖ பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)

❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.

போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்



❖ பேச்சாளர் : சகோ. B. அர்ஜுனன்

❖ நம்பிக்கை TV : திங்கள் & சனி மாலை 7:30 – 7:45 மணி


❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்

<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் : சகோ. P.C. பிலேமோன் ராஜா

❖ தமிழன்/நம்பிக்கை : ஞாயிறு காலை 6:45 & வெள்ளி காலை 6:15 மணி

❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)

❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை


❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL

❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| நம்பிக்கை | TV | செவ்வாய் | காலை | 6.30 மணி |
| நம்பிக்கை | TV | வெள்ளி | காலை | 7:30 மணி |

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம** அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **7** பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.


<u>தொடர்புக்கு</u>

இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.

தமிழ்நாடு, இந்தியா.


**பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள்** (Tracts) **வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்**


E.Z.S. **ராஜநாயகம்** : 98427 30382

P.R. **சுவாமி** : 098440 70763

P.C. **பிலேமோன் ராஜா**: 9244204420

B. **அர்ஜுனன்** : 994435 58041

## ' சத்தியத்தின் குரல் ' சந்தா விண்ணப்பம்

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு என்னுடைய ............................................... முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ........................ காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

"சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ____________________ பின் கோடு : ______________

மாநிலம் : ______________________________

# 5 நிமிட வேத பாடம்

## தேவ பக்தியற்ற

**Paula Bates**

1. ......ஆலோசனையில்...... பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில்........ இரவும் பகலும் அவருடைய வேதத்தில் ........ மனுஷன் பாக்கியவான்'(சங்கீதம் 1:1,2).

2. எங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, ......... நீதிமானுக்கு விதிக்கப்படாமல், அக்கிரமக்காரருக்கும், அடங்காதவர்களுக்கும் ........ பாவிகளுக்கும், அசுத்தருக்கும், சீர்கெட்டவர்களுக்கும், தாய் தகப்பன்மாரை அடிக்கிறவர்களுக்கும், கொலை பாதகருக்கும் (1 தீமோத்தேயு 1:9).

3. நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்குங் காலமாயிருக்கிறது. ...நம்மிடத்திலே அது துவங்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் ......... முடிவு என்னமாயிருக்கும்? நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், ....... பாவியும் எங்கே நிற்பான்? (1 பேதுரு 4:17,18).

4. ஏனெனில், நமது தேவனுடைய ......காமவிகாரத்துக்குக் கேதுவாகப் புரட்டி, ஒன்றான ஆண்டவராகிய தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் மறுதலிக்கிற .....சிலர் பக்க வழியாய் நுழைந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த ஆக்கினைக்குள்ளாவார்களென்று பூர்வத்திலே எழுதியிருக்கிறது (யூதா 1:4).

5. ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக் குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிற தற்கும், அவர்களில் ...... யாவரும் அவபக்தியாய்ச் செய்து வந்த சகல ......கிரியைகளினிமித்தமும்,(யூதா 1:14).

For Further Information, Please Contact :

# சத்தியத்தின் குரல்












## இந்நூலை நீங்கள் இவ்விதங்களில் பயன்படுத்தலாம்

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தைப் படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்குக் கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

**பயன்படுத்தப்படாமல் வெறுமனே**
**ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்**

**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**

எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
செவ்வாய் காலை 6.30 - 7.00 மணி

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

எங்கள் மாத இதழ்களைப் படியுங்கள்

‘ திருமறை ஆசான் ’
‘ கிருபையுள்ள வார்த்தை ’
‘ வேர்டு ஆப் கிரைஸ்ட் ’

மேலும் விபரங்களுக்கு : E.Z.S. ராஜநாயகம், தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
போன் : 04257 230030, செல் : 98427 30382, 99655 30385